REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்


2021 டிசம்பர் 15 புதன்கிழமை

THINAKARAN தினகரன்

வரு. 89 இல. 297 | Wednesday 15, December, 2021 | 20பக்கங்கள் | 30/-

**கொவிட் மரணங்கள்**

## 14,661 ஆக அதிகரிப்பு மேலும் 335 பேர் குணமடைவு



நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் 20 பேர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் திங்கட்கிழமை (13) உயிரிழந்தவர்களென சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

06

## தமிழ் மக்களின் அபிலாசைகள்; அமெரிக்க தூதுவர் டக்ளஸுடன் பேச்சு



சமகால அரசியல் நிலைவரங்கள் மற்றும் கடற்றொழில்சார் செயற்பாடுகள் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை இலங்கைக்கான அமெரிக்க பதில் தூதுவர் மார்டின் ரிஹீலி சந்தித்து கலந்துரையாடினார். மாளிகாவத்தையிலுள்ள கடற்றொழில் அமைச்சில் (13) இச் சந்திப்பு நடைபெற்றது. இச்சந்திப்பின்போது,

06

**உச்ச நிலையில் டொலர் தட்டுப்பாடு :**

## இறக்குமதிக்கு மேலும் கட்டுப்பாடுகள் விதிப்பு

**- அமைச்சரவை கூட்டத்தில் நிதியமைச்சர்**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டில் நிலவும் டொலர் தட்டுப்பாடு காரணமாக இறக்குமதியை மேலும் கட்டுப்படுத்த வேண்டியுள்ளதாக நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ திங்கட்கிழமை (13) நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும் எரிபொருள், மருந்துப் பொருட்கள், அத்தியாவசிய

06

**எதிர்வரும் பண்டிகை காலத்தில்**

## மக்கள் நடமாட்டத்தை கட்டுப்படுத்த மாற்றுவழிகளில் திட்டம்



பண்டிகை காலத்தின்போது மக்கள் பயணங்களை தடையின்றி மேற்கொள்ளவும் மாற்றுவழி ஊடாக நிலைமையை முகாமைத்துவப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படுமென இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

பயணத் தடையை அமுல்படுத்தாமல் பூஸ்டர் தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டத்தை வலுப்படுத்தவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். எதிர்வரும் பண்டிகை காலத்தின்போது பொதுமக்கள் ஒன்று கூடுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டுமென சுகாதார தரப்பினர் தொடர்ச்சியாக அறிவுறுத்தி வருகின்றனர். குறிப்பாக அதிக சன நெரிசல் மிக்க பகுதிகளுக்கு செல்வதை பொதுமக்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டுமென அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

**தம்புள்ளை பொருளாதார மத்திய நிலைய களஞ்சியத்திலிருந்து**

# மக்கள் பாவனைக்கு உதவாத சீனி மீட்பு

**சூட்சுமமான முறையில் மறைத்து வைத்திருந்தவை கண்டுபிடிப்பு**



**சுகாதார பிரிவினருக்கு கிடைத்த தகவலையடுத்து அதிரடியாக நுழைந்து மீட்பு**

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்திலுள்ள களஞ்சியத்திலிருந்து மனித பாவனைக்கு பொறுத்தமற்ற சூட்சுமமான முறையில் மறைத்து வைத்திருந்த ஒருதொகை சீனியை, தம்புள்ளை மாநகர சபையின் சுகாதார பிரிவினர் கண்டுப்பிடித்ததாக தம்புள்ளை நகர சபை தலைவர் ஜாலிய ஒபாத்த தெரிவித்தார்.

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தின் பின்னாலுள்ள தனியார் களஞ்சியமொன்றில் தொழிலாளர்களை பணிக்கு அமர்த்தி இந்த சீனி வியாபார நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக நகரசபை

06



ஹம்பாந்தோட்டை லொஜிஸ்ரிக் சர்வதேச சேவை விநியோக மத்திய நிலைய நிர்மாணப் பணிகள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது. நினைவுப் படிகத்தை பிரதமர் திறந்து வைப்பதையும் அருகில் அமைச்சர்களான ஜீ.எல்.பீரிஸ், நாமல் ராஜபக்ஷ,சமல் ராஜபக்ஷஆகியோரையும் காணலாம்.



## சீன உர நிறுவனத்திற்கு 6.7 மில்.அமெ. டொலர்கள்

**அரசாங்கம் வழங்குவதற்கு தீர்மானம்**

03



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பாக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்கு விசாரணைக்கு முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன வரும்போது பிடிக்கப்பட்ட படம். அருகில் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜெயசுந்தர ஆகியோரும் காணப்படுகின்றனர். (படம்: சமந்த வீரசிறி)

## முதலைக் கண்ணீர் வடித்து ஆட்சியைக் கைப்பற்ற கனவு

**5 வருட ஆட்சியை நினைவுபடுத்திய அமைச்சர்**



நாட்டு மக்களின் வாழ்வை பிரகாசமடைய செய்யும் விதமான பாரிய அபிவிருத்திப் புரட்சி 2022 ஆம் ஆண்டு செயற்படுத்தப்படுமென விவசாயத் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நாவலப்பிட்டியில் அமைந்துள்ள அமைச்சரின் ஒருங்கிணைப்பு அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்திலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார். ஐந்து வருடங்களாக அப்பாவி மக்களுக்கு உதவித் தொகையை

06

## தடுப்பூசி அட்டையை லெமினேட் செய்யாதீர்

**Dr. ஹேமந்த ஹேரத் அறிவுறுத்து**



கொவிட் தடுப்பூசி அட்டைகளை பாதுகாப்பாக வைத்திருக்குமாறு கோரியுள்ள சுகாதார சேவைகளின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ஹேரத், அதை லெமினேட் செய்ய வேண்டாம் எனவும் பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார். எதிர்காலத்தில் நான்காவது டோஸ் தேவைப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

06

## இலங்கை முதலீட்டு அதிகார சபைக்கு புதிய தலைவர் நியமனம்



இலங்கை முதலீட்டு அதிகார சபையின் புதிய தலைவராக ராஜா எதிரிசூரிய நியமிக்கப்பட்டுள்ளார். இலங்கை முதலீட்டு அதிகார சபையின் தலைவராக இருந்த சஞ்சய மொஹோட்டலா

06

## இந்தோனேஷியாவில் 7.6 ரிச்டர் நிலநடுக்கம்




**லோரன்ஸ் செல்வநாயகம்**

இந்தோனேசியாவில் ப்ளோரேஷ் கடலில் நேற்று 7.3 ரிச்டர் அளவில் பாரிய நிலநடுக்கம் ஏற்பட்டது. எனினும்

06



## சமூகத்தைக் காட்டிக் கொடுக்கும் கைங்கரியத்தில் மு.கா, ம.கா

**கைவிடக் கோருகிறார் இம்ரான் மஹ்ரூப் MP**

03

**கட்டுகஸ்தோட்டையில்**

## பச்சை மிளகாயின் விலை ஒரு Kg ரூ.1000



கண்டி, கட்டுகஸ்தோட்டையில் ஒரு கிலோ பச்சை மிளகாய் நேற்று முன்தினம் 400 ரூபாவிலிருந்து 1000 ரூபாவாக அதிகரித்து காணப்பட்டது.

நகர வீதிகளில் நடைபாதை வியாபாரிகளின் சில்லறை வியாபாரம் தொடர்பில் மெனிக்கும்புர பொருளாதார நிலைய வர்த்தகர்கள் சங்கத்தின் தலைவரிடம் வினவியபோது, பொருளாதார நிலையத்தில்

06

## அதிகரிக்கும் டெங்கு நோய்; தடுக்க தேசிய வேலைத் திட்டம்

**ஜனாதிபதியின் யோசனைக்கு அமைச்சரவை அனுமதி**



இலங்கையில் தற்போது டெங்கு நோய் பிரதான பொது சுகாதாரப் பிரச்சினையாக உருவாகியுள்ளதுடன், 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை 25,910 நோயாளர்களும், 19 மரணங்களும் பதிவாகியுள்ளன. இவ்வாறு, மிகவும் ஆபத்தான நிலையை எட்டியுள்ள டெங்கு நோய்ப் பரவல், பருவப்பெயர்ச்சி மழை காலத்தில் மேலும் அதிகரிக்கும் போக்குக் காணப்படுவதால், தொற்று நிலைமையைத் தடுப்பதற்கான அனைத்துத் தரப்பினரின் பங்குபற்றலுடன் அமைச்சினூடாக ஒன்றிணைந்த தேசிய வேலைத் திட்டத்தை

06

## ஆசிரியர் சம்பள முரண்பாட்டுக்கு தீர்வுகாணும் சுற்றுநிருபம்

**விரைவில் வெளியிடப்படும்**



03



**சிறார்களுக்கான மரண தண்டனை:**

## சட்டத்தில் திருத்தம் செய்ய அமைச்சரவை அனுமதி

**நீதியமைச்சரின் கோரிக்கை ஏற்பு**

03

## TID க்கு அழைக்கப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்

**புலிகளை மீள உருவாக்குவதற்கு முயற்சியாம்**

03

## பொருளாதாரத்திலிருந்து மீள இந்தியா,சீனாவின் உதவி தேவை

**ஐ.ம.சக்தியின் எம்.பி எரான் விக்கிரமரத்ன**



இந்தியா அல்லது சீனா எமக்கு ஏதேனும் உதவிகளை செய்தாலே தவிர வேறு எந்தவொரு வழியிலும் எம்மால் பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீள முடியாதென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

பொருளாதார ரீதியில் நாடு பாரிய நெருக்கடியை சந்தித்துக்கொண்டுள்ள நிலையில் புதிய வேலைத்திட்டமொன்றை உருவாக்கி அதன் மூலமாக சர்வதேச முதலீட்டாளர்களை ஈர்க்கும் பொறிமுறை என்னவென்பது அரசாங்கத்திற்கு தெரியவில்லை. இவ்வாறான நிலையில் சர்வதேச நாணய நிதியத்திற்கு சென்றாலும் எம்மால் சாதகமான ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்ள முடியாது.

06

**லிற்றோ நிறுவனம் இறக்குமதி செய்துள்ள Gas;**

## உரிய தரம் இல்லாவிடின் கப்பலில் இருந்து இறக்க அனுமதி இல்லை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



லிற்றோ கேஸ் நிறுவனம் இறக்குமதி செய்துள்ள சமையல் எரிவாயு கப்பல் கொழும்புதுறைமுகத்தை வந்தடைந்துள்ளதுடன் அதில் இருக்க வேண்டிய "எனில் மகெப்டான்" இரசாயனம் உரிய தரத்தை கொண்டிருக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

அதனைக் கவனத்தில் கொண்டு சமையல் எரிவாயுவை கப்பலிலிருந்து இறக்குவதற்கான தீர்மானம் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தொழில்நுட்பக் குழுவின் அமர்விலேயே மேற்கொள்ளப்படவுள்ளது.

நேற்றைய தினம் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை அது தொடர்பில் தெரிவிக்கையில், கொழும்பு

06

## அபகரித்த நகைகளை திருப்பி கொடுத்த திருடன்

**வெள்ளவத்தை பெண்ணுக்கு அதிர்ச்சி**

கொழும்பு,வெள்ளவத்தை பகுதியில் பெண் ஒருவரிடமிருந்து பணம் மற்றும் தங்க நகைகளைக் கொள்ளையிட்ட நபர், அப்பெண்ணின் குடும்ப பிண்ணனியை அறிந்து கொள்ளையிட்டவற்றை மீள கையளித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வெள்ளவத்தை பகுதியில் தனியார் நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் 03 பிள்ளைகளின் தாய் ஒருவர் தினமும் மோட்டார் சைக்கிளில் வேலைக்குச் சென்று வந்துள்ளார்.

இந்நிலையில் கடந்த வாரமும் வழமையைப்போன்று இப்பெண் வேலைக்கு சென்று மீண்டும் இரவு வீட்டுக்கு சென்றுகொண்டிருந்தபோது, அப்பெண்ணை வழிமறித்த ஒரு நபர், தன்னை பொலிஸ் உத்தியோகத்தர் என கூறி , அப்பெண்ணை மிரட்டி தான் செல்லும் வழியில் அவரை பின் தொடருமாறு கூறியுள்ளார். அந்த நபர் கூறியபடியே அவரை

06

**விக்கல் வீராச்சாமி**



கிழக்கில காணிப் பிரச்சினை சம்பந்தமாக பகிரங்க விவாதத்துக்கு வரச்சொல்லி சாணக்கியனுக்கு ஹாபீஸ் நசீர் சவால் விட்டிருக்கிறார்....

அரசியல்ல அவர் பேசுவது எல்லாம் உண்மை எண்டா உடன ஓகே சொல்லணும், இல்லாட்டி அவர் புலுடா விடுவதாதான் சனம் நினைக்கும்...!!!





"மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுக" வளாகத்தின் முதலாவது களஞ்சிய வளாகமான ஹம்பாந்தோட்டை லொஜிஸ்டிக் சர்வதேச சேவை வழங்கல் நிலையத்தின் நிர்மாணப் பணிகள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நேற்று (14) ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் இலங்கைக்கான சீன தூதுவர் குய் ஷென்ஹொங் உள்ளிட்ட குழுவினர் உட்பட அமைச்சர்களான ஜீ.எல். பீரிஸ், சமல் ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ ஆகியோரும் கலந்துகொண்டுள்ளதை படங்களில் காணலாம்.





# சர்வதேச செய்திகள்

## தடுப்பூசி பெறாத பயணிகளுக்காக விமான சேவைகள் மீது அபராதம்




கானாவில் கொரோனா தொற்றுக்கு எதிராக தடுப்பூசி பெறாமல் தலைநகரில் உள்ள சர்வதேச விமானநிலையத்தை வந்தடையும் ஒவ்வொரு பயணிக்காகவும் விமான சேவை மீது 3,500 டொலர் அபராதம் விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று புதன்கிழமை தொடக்கம் நடைமுறைக்கு வரும் இந்தத் திட்டத்தில், அக்ராவில் உள்ள கொடொகா சர்வதேச விமாநிலையத்திற்கு தமது விமானங்களை தரையிறக்கும் முன் பயணிகளிடம் சுகாதார பிரகடனத்தை பெறாத விமானங்கள் மீதும் இதே அளவு அபராதம் விதிக்கப்படவுள்ளது.

எனினும் இந்தக் கட்டுப்பாடுகளை பூர்த்தி செய்யாமல் நாட்டுக்கு வரும் கானா நாட்டவர்கள் 14 நாள் தனிமைப்படுத்தலின் பின் நாட்டுக்குள் அனுமதிக்கப்படும் என்றபோது வெளிநாட்டவர்களுக்கு அனுமதி மறுக்கப்படும் என்று விமானநிலைய நிர்வாகம் தெரிவித்துள்ளது.

கொவிட்19 தொற்று தொடர்பில் சிறந்த பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பிராந்திய நாடுகளில் ஒன்றாக 31 மில்லியன் மக்கள் தொகை கொண்ட கானா உள்ளது.

அந்நாட்டில் இதுவரை 132,0000 தொற்றுச் சம்பவங்கள் கண்டுபிடிக்கப்பட்டதோடு 1,243 பேர் உயிரிழந்துள்ளனர்.

## ஈரான் அணு பேச்சு: மாற்று திட்டம் தொடர்பில் அமெரிக்கா எச்சரிக்கை



ஈரானின் அணு கட்டுப்பாட்டுக்கான ஒப்பந்தத்தை புதுப்பிக்கும் முயற்சி தோல்வி அடைந்தால் அமெரிக்கா மாற்றுத் திட்டங்களுக்கு தயாராகும் என்று அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்கன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பிலான பேச்சுவார்த்தை தோல்வி அடைவதற்கான வாய்ப்புகள் அதிகரித்து வரும் நிலையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

"இராஜதந்திர முயற்சிகளை இந்த நாள், இந்த மணி வரை நாம் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறோம். இந்த நேரத்தில் அதுவே சிறந்த தேர்வாக உள்ளது. ஆனால் இதற்கு மாற்றுகள் தொடர்பிலும் எமது கூட்டாளிகள் மற்றும் பங்காளிகளுடன் இணைந்து செயற்பட்டு வருகிறோம்" என்று இந்தோனேசியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் பிளிங்கன் நேற்று தெரிவித்தார்.

ஈரான் மற்றும் உலக வல்லரசு நாடுகளுக்கு இடையே 2015 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட அணு உடன்படிக்கையை புதுப்பிக்கும் முயற்சியாக கடந்த வியாழக்கிழமை பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டது. ஈரானுடனான இந்த அணு உடன்படிக்கையில் இருந்து டொனால்ட் டிரம்ப் நிர்வாகத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டு அமெரிக்கா விலகிக்கொண்டது.

அமைதியான தேவைக்காக மாத்திரமே அணு சக்தியை மேம்படுத்துவதாக ஈரான் கூறியபோதும் ஈரான் அந்தத் தேவைக்கு அப்பால் யுரேனியத்தை செறிவூட்டுவதாக மேற்குலக சக்திகள் கூறுகின்றன. இவ்வாறு யூரேனியத்தை செறிவூட்டுவது அணு ஆயுதத்தை பெறும் திறனை அதிகரிப்பதாக சந்தேகிக்கப்படுகிறது.

ஈரானுடனான உடன்படிக்கைக்கு திரும்பத் தயார் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கூறுவதோடு, தாம் பேச்சுவார்த்தையில் தீவிரமாக ஈடுபட்டு வருவதாக ஈரான் அதிகாரிகள் கூறுகின்றனர்.

எனினும் தற்போது இடம்பெற்று வரும் பேச்சுவார்த்தையில் ஈரான் உண்மையான ஈடுபாடு காட்டாத நிலையில் காலம் கடந்து செல்வதாக இந்தப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருக்கும் ஐரோப்பிய நாடுகள் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் கூறப்பட்டுள்ளது.

இந்த கூற்றை மேற்கோள்காட்டியே பிளிங்கன் மேற்படி கருத்தை வெளியிட்டிருந்தார்.

"துரித முன்னேற்றம் ஏற்படாவிட்டால் ஈரான் அணு உடன்படிக்கை வெற்று உறையாக மாறிவிடும்" என்று பிளிங்கள் கூறினார். "ஈரான் முன்வந்து இந்த உடன்படிக்கைக்கு இணங்க இன்னும் காலம் இருக்கிறது" என்றும் அவர் செய்தியாளர் சந்திப்பில் கூறிப்பிட்டார்.

## ஆப்கானிய தாக்குதல்: அமெரிக்க படையினருக்கு தண்டனையில்லை



ஆப்கானிஸ்தானில் கடந்த ஓகஸ்ட் மாதம் 10 பேர் கொல்லப்பட்ட ஆளில்லா விமானத் தாக்குதல் தொடர்பில் அமெரிக்க துருப்பினர் மற்றும் அதிகாரிகள் எவர் மீதும் பொறுப்பு சுமத்தப்பட மாட்டாது என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஆப்கானை தலிபான்கள் கைப்பற்றிய நிலையில் அமெரிக்கா தலைமையில் வெளியேற்ற நடவடிக்கைகள் இடம்பெற்ற இறுதி நாட்களிலேயே இந்த தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த தாக்குதலில் ஏழு சிறுவர்கள் உட்பட உதவிப் பணியாளர் ஒருவர் மற்றும் அவரது குடும்பத்தின் ஒன்பது உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர்.

இந்த உதவிப் பணியாளரின் கார் வண்டி ஐ.எஸ் குழுவுடன் தொடர்புபட்டதாக அமெரிக்க புலனாய்வுப் பிரிவு சந்தேகித்த நிலையிலேயே அதன் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. எனினும் இது பெரும் துயரம் கொண்ட தவறு என்று அமெரிக்க மத்திய கட்டளையகம் ஒப்புக்கொண்டது.

எனினும் இது பற்றி இடம்பெற்ற உயர் மட்ட மீளாய்வு அறிக்கை கடந்த மாதம் வெளியானதோடு, ஒழுக்காற்று நடவடிக்கைகள் தேவையில்லை என்று கூறப்பட்டிருந்தது.

### இந்தோனேசியாவில் பூகம்பம்

## சுனாமி அச்சத்தால் மக்கள் வீடுகளை விட்டு ஓட்டம்

இந்தோனேசியாவின் தென் சுலவேசி மாகாணத்தின் கடற்கரைக்கு அப்பால் ஏற்பட்ட 7.4 ரிக்டர் அளவான பூகம்பத்தை அடுத்து மக்கள் வீடுகள் மற்றும் கட்டடங்களை விட்டு வெளியேறினர்.

உள்ளூர் நேரப்படி நேற்று செவ்வாய்க்கிழமை ஒன்பது மணி அளவில் புளோரசல் கடல் பகுதியில் இந்த பூகம்பம் ஏற்பட்டது. இது கிழக்கு நுசா டெங்கரா பிராந்தியத்தில் பாதிப்பை ஏற்படுத்தியதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

பாதிப்புகள் மற்றும் பெரும் சேதங்கள் பற்றிய செய்திகள் வெளியாகாதபோதும் இந்த பூகம்பம் பெரும் அதிர்வை ஏற்படுத்தியதாக அங்குள்ள மக்கள் தெரிவித்தனர்.



அந்தப் பகுதியில் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்ட நிலையில் பின்னர் அது நீக்கப்பட்டது. மகாரா நகரைச் சேர்ந்த மக்கள் கடைகள் மற்றும் வீடுகளில் இருந்து ஒட்டம் பிடிக்கும் வீடியோக்கள் சமூகதளங்களில் வெளியாகியுள்ளன. இதன் போது மருத்துவமனை மற்றும் ஹோட்டல் ஒன்றில் இருந்து மக்கள் வெளியேற்றப்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மக்கள் பீதியில் இருந்ததாக லரன்டுகா நகர குடியிருப்பாளர்கள் தெரிவித்தனர். "அனைவரும் அதிர்ச்சியில் இருந்தனர். தமது வீடுகளை விட்டு வெளியே ஓட்டம்பிடித்தனர்.

சிலர் ஏற்கனவே மலைகளை நோக்கி ஓடினார்கள்" என்று குடியிருப்பாளரான டக்திர் என்பவர் பி.பி.சி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தார்.

எவ்வாறாயினும் பெரும்பாலான மக்கள் தற்போது தமது வீடுகளுக்கு திரும்பிவிட்டதாகவும் சுனாமி ஒன்றுக்கான எந்த அறிகுறியும் இல்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தோனேசியாவின் ஜாவா தீவில் உள்ள செமேரு எரிமலை வெடித்து குறைந்தது 46 பேர் கொல்லப்பட்டு 10 நாட்களின் பின்னரே இந்த பூகம்பம் இடம்பெற்றுள்ளது.

## சிசிலியில் கட்டடங்கள் இடிந்ததில் நால்வர் பலி



இத்தாலியின் சிசிலி நகரில் எரிவாயு கசிவு என்று சந்தேகிக்கப்படும் விபத்தில், நான்கு கட்டடங்கள் இடிந்து விழுந்தன. இதனைத் தொடர்ந்து நடந்த மீட்பு பணியில் மேலும் நான்கு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

சனிக்கிழமை மாலை ரவனுசாவிலுள்ள சிசிலி நகரில் நான்கு குடியிருப்பு கட்டடங்களில் நடந்த இந்த விபத்தில், இதுவரை குறைந்தபட்சம் ஏழு பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், காணாமல் போனதாகக் கூறப்படும் இரண்டு பேரை மீட்பு பணியாளர்கள் தொடர்ந்து தேடி வருவதாக தீயணைப்பு வீரர்கள் கூறியுள்ளனர்.

## பேய் வீட்டில் தங்கச்சென்ற ஜப்பானிய பிரதமர் கிஷிடா



ஜப்பானியப் பிரதமர் பூமியோ கிஷிடா, தலைநகர் டோக்கியோவின் மத்திய பகுதியிலுள்ள உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் தங்க ஆரம்பித்துள்ளார். அந்த வாசஸ்தலம் 9 ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் ஜப்பானியப் பிரதமர் தங்குவது பலரிடையே ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

அந்த வாசஸ்தலத்தில் பேய்கள் இருப்பதாக நம்பப்படுவதால் ஜப்பானின் முன்னாள் பிரதமர்கள் யோஷிஹிடே சுகா, ஷின்ஸோ அபே ஆகியோர் அங்கு தங்கவில்லை என்று கூறப்படுகிறது.

1936ஆம் ஆண்டில் இளம் இராணுவ அதிகாரிகள் அரசாங்கத்தின் ஆட்சியைக் கவிழ்க்க, சில மூத்த அதிகாரிகளை வாசஸ்தலத்தில்' கொன்றனர். அந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் ஆவி அங்கு பல ஆண்டுகளாக உலவுகிறது என்று பரவலாக நம்பப்படுகிறது.

ஆனால் பிரதமர் கிஷிடா அங்கு தங்குவதற்கு ஆரம்பித்ததில் இருந்து தாம் நிம்மதியாக இரவில் தூங்குவதாக கூறியுள்ளார். இதுவரை எந்த ஆவியையும் காணவில்லை என்றார் அவர்.

இந்த வாசஸ்தலத்தின் பராமரிப்பு செலவுக்கு ஆண்டுக்கு 1.4 மில்லியன் டொலர் செலவாகும் நிலையில் அதில் பிரதமர்கள் தங்காதது குறித்து எதிர்க்கட்சியினர் தொடர்ந்து விமர்சித்து வந்தனர்.

2021 டிசம்பர் 15 புதன்கிழமை

# தினகரன்
THINAKARAN



# ஹம்பாந்தோட்டை சர்வதேச சேவை வழங்கல் நிலைய நிர்மாணப் பணிகள் பிரதமரின் தலைமையில் ஆரம்பம்

## 600 மில்.டொலர் செலவில் டயர் தொழிற்சாலையும் நிர்மாணம்




"மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுக" வளாகத்தின் முதலாவது களஞ்சிய வளாகமான ஹம்பாந்தோட்டை லொஜிஸ்டிக் சர்வதேச சேவை வழங்கல் நிலையத்தின் நிர்மாணப் பணிகள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நேற்று (14) ஆரம்பிக்கப்பட்டது.

ஒரு ஹெக்டேயர் பரப்பளவை கொண்ட இக்களஞ்சிய வளாகத்தின் நிர்மாணப் பணிகளை குறிக்கும் வகையில் பிரதமரினால் நினைவு பலகை திறந்து வைக்கப்பட்டது.

ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுக குழுமத்தின் தலைமை நிறைவேற்றதிகாரி ஜோன்சன் லியூவின் அழைப்பின் பேரில் இந்நிகழ்வில் கலந்து கொண்ட பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இலங்கைக்கான சீன தூதுவர் குய் ஷென்ஹொங் உள்ளிட்ட குழுவினருடன் துறைமுக வளாகத்தில் காண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டார்.

ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுக வளாகத்திலுள்ள பல் கல சரக்கு பரிமாற்றல் நடவடிக்கை பிரிவிற்கு (Ro Ro operations)விஜயம் செய்த பிரதமர் அங்கு நடைபெறும் வாகன மீளேற்றல் செயற்பாட்டை கண்காணித்தார்.

இவ்வருடத்தில் மாத்திரம் சுமார் ஐந்து இலட்சம் வாகனங்கள் அப்பிரிவினால் கையாளப்பட்டுள்ளதாக ஹம்பாந்தோட்டை சர்வதேச 06

### ஆசிரியர் சம்பள முரண்பாட்டுக்கு

# தீர்வுகாணும் சுற்றுநிருபம் விரைவில் வெளியிடப்படும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஆசிரியர்கள் அதிபர்களின் சம்பள முரண்பாட்டுக்கு மிக விரைவில் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படுமென கல்வியமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் ஆசிரியர் அதிபர்களின் சம்பள முரண்பாட்டை நிவர்த்திசெய்யும் வகையில் நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் விரைவில் அதற்கு 06

# மின்சாரசபை தலைமை அலுவலகத்துக்கு முன்னால் தொழிற்சங்க போராட்டம்



இலங்கை மின்சார சபையிலுள்ள தொழில்நுட்ப மற்றும் பொறியியல் துறை சார்ந்த 12 தொழிற்சங்கங்கள் இணைந்து இலங்கை மின்சார சபை தலைமை அலுவலகம் முன்பாக நேற்று (14) நடத்தினர்.

ஆர்ப்பாட்டத்தின் போது இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர்களிடமிருந்து உச்ச பயனைப் பெறுதல், என்.வி.கியூ. தரச்சான்றிதழுள்ள அமைய ஊழியர்களை நிரந்தரமாக்குதல், 70 வீதமான வலுசக்தித் திட்டத்தை இலங்கையில் அமுல்படுத்துதல், அரசியல் ரீதியாக தொழிலாளர்களின் அரச நியமனங்களை தற்காலிகமாக நிறுத்துதல், சேவையாளர்களை அடிக்கடி இடமாற்றுவதை நிறுத்துதல், ஊழியர்களது அடிப்படைக் 06

# மொனராகலையில் 05 குளங்களின் வான் கதவுகள் திறப்பு

மொனராகலை பிரதேசத்தில் பெய்துவரும் கடும் மழை காரணமாக ஆறு பிரதான குளங்களில் ஐந்து குளங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளதாக, மொனராகலை நீர்ப்பாசன பொறியியலாளர் இந்திரஜித் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சியம்பலாண்டுவ செயலக பிரிவின் அத்திமலே குளம், குட்டியாகல குளம், சுசிலாதேவி குளம், புத்தல பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ஒக்கம்பிட்டிய குளம் மற்றும் யுதானா குளம் போன்றவற்றின் வான் கதவுகளே திறக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சியம்பலாண்டுவ பகுதியின் மஹாகண்டிய குளம் வான் பாய ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவித்துள்ள அவர், இங்கு 5,000 ஏக்கர் நிலத்தில் நெற்பயிர் செய்கை பண்ணப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

### 20 வயதுக்குமேற்பட்டோருக்கு

# கொழும்பில் இன்று முதல் பூஸ்டர் தடுப்பூசி

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொழும்பு நகரில் 20 வயதுக்கு மேற்பட்டோர் அனைவருக்கும் இன்று முதல் பூஸ்டர் தடுப்பூசியாக பைசர் தடுப்பூசி வழங்கப்படவுள்ளதாக கொழும்பு நகர சபையின் தொற்றுநோய் பிரிவு விசேட மருத்துவர் தினுகா குருகே தெரிவித்துள்ளார்.


கொழும்பு நகரில் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள் மற்றும் கொழும்பை வசிப்பிடமாகக் கொண்டவர்கள், அவர்கள் வசிக்கும் பிரதேசத்திற்கு அண்மையில் உள்ள சுகாதார மருத்துவ அதிகாரி காரியாலயத்திற்கு சென்று தமக்கான பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இரண்டாவது கொரோனா வைரஸ் தடுப்பூசியை பெற்றுக்கொண்டவர்கள் மூன்று மாதங்கள் கடந்த 06

### சிறார்களுக்கான மரண தண்டனை:

# சட்டத்தில் திருத்தம் செய்ய அமைச்சரவை அனுமதி

## நீதியமைச்சரின் கோரிக்கை ஏற்பு



சிறு வயதுக்காரர்களுக்கான மரண தண்டனை விதித்தல், குற்றவியல் வழக்குக் கோவைச் சட்டத்தை திருத்தம் செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நீதிமன்றத் தத்துவப்படி குற்றமிழைக்கும் சந்தர்ப்பத்தில் 18 வயதுக்குக் குறைவான எந்தவொரு நபருக்கும் எதிராக மரண தண்டனையை விதித்தல் அல்லது குறித்துக் கொள்வதோ மேற்கொள்ளக் கூடாது எனவும், இத் தண்டனைக்குப் பதிலாக அந்நபர் ஜனாதிபதி விருப்பம் தெரிவிக்கும் வரைக்கும் தடுப்புக் காவலில் வைத்திருக்கும் தண்டனையை வழங்கும் வகையில் தண்டனைச் சட்டக்கோவையில் 53 ஆம் உறுப்புரையை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆனாலும், 18 வயதுக்குக் குறைவாக இருப்பின் மரண தண்டனை விதிக்கப்படக் கூடாதெனக் கூறும் ஏற்பாடுகள் குற்றவியல் வழக்குக் கோவைச் 06

# TIDக்கு அழைக்கப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்

## புலிகள் மீள உருவாக்குவதற்கு முயற்சியாம்

யாழ்.பல்கலைக்கழக மாணவனும் ஊடகவியலாளருமான பாலசிங்கம் சுஜீவன், பயங்கரவாத தடுப்பு பிரிவினரின் விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சியை சேர்ந்த இளம் ஊடகவியலாளர் ஒருவர், விடுதலைப்புலிகளை மீள் உருவாக்கம் செய்ய, முகநூல் ஊடாக முனைகிறாரென தேரர் ஒருவர் ஊடக சந்திப்பொன்றில் கூறியுள்ளார்.

அதனைத் தொடர்ந்தே பயங்கரவாத தடுப்புப் பிரிவு, அவரை விசாரணைக்கு அழைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் 17ஆம் திகதி காலை 09 மணிக்கு பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைக்கமைவாக வாக்குமூலம் பெற்றுக் கொள்ளும் நோக்கில் அழைக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

# சீன உர நிறுவனத்திற்கு 6.7 மில்.அமெ. டொலர்கள்

## அரசாங்கம் வழங்குவதற்கு தீர்மானம்



சட்ட மாஅதிபரின் ஆலோசனையுடன் சீன உர நிறுவனத்திற்கு 6.7 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

அதே நேரம் SLSI தரநிர்ணயங்களுக்கு இணங்க உரத்தை மீள் உற்பத்தி செய்யுமாறு அந்நிறுவனத்திடம் கோரப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

# சமூகத்தைக் காட்டிக் கொடுக்கும் கைங்கரியத்தில் மு.கா, ம.கா

## கைவிடக் கோருகிறார் இம்ரான் மஹ்ரூப் MP



பல்லின சமூகம் வாழும் இந்த நாட்டில் முஸ்லிம் சமூகத்தின் மீது மாற்று மத சகோதரர்கள் தப்பெண்ணம் கொள்ளும் வகையில் செயற்பட்டு சமூகத்தைக் காட்டிக் கொடுக்கும் வேலையை முஸ்லிம் காங்கிரஸும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸும் கைவிட வேண்டுமென திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார். ஊடகங்களுக்கு (13)கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஸாத் பதியுத்தீன் ஆகியோரின் விருப்பத்துடன் தான் அக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் 20 ஆவது திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்ததாக பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் தெரிவிக்கும் காணொளி சமூக வலைத்தளங்களில் தற்போது பரவலாகி வருகின்றது. 06

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## பொதுமக்களுக்கான அறிவித்தல்

பின்வருவன ஊடாக நீங்கள் பெற்றுக்கொண்ட வெளிநாட்டு நாணயத்தை உங்கள் உடமையில் வைத்திருப்பீர்களாயின்...

I. வெளிநாட்டு பயணத்திற்காக வங்கியொன்றிலிருந்து அல்லது அதிகாரமளிக்கப்பட்ட நாணயமாற்றுநரிடமிருந்து கொள்வனவுசெய்து, பயன்படுத்தாது இலங்கைக்கு திருப்பிக் கொண்டுவரப்பட்டவை (ஐ.அ.டொலர் 15,000 வரை அல்லது வேறு நாணயத்தில் அதற்குச் சமமாக),

II. வெளிநாட்டு பயணத்திற்காக தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து (PFCA) மீளெடுப்புச்செய்தல் (ஐ.அ.டொலர் 15,000 வரை அல்லது வேறு நாணயத்தில் அதற்குச் சமமாக),

III. வெளிநாட்டிலிருக்கும் போது தொழில், தொழில்சார்நிபுணத்துவம் அல்லது வியாபாரம் என்பவற்றிலிருந்தான வருவாய்கள் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டவை,

IV. சிறப்பு வைப்புக் கணக்கில் (SDA) வைப்பிலிடுவதற்காக 2020 சனவரி 01 அன்று அல்லது அதற்கு பின்னர் பெற்று இலங்கைக்கு கொண்டுவரப்பட்டவை.

அத்தகைய வெளிநாட்டு நாணயங்களை நீங்கள்,

- 2021 திசம்பர் மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலரொன்றுக்கு இலங்கை ரூபா 210* ற்கு (அல்லது வேறு நாணயத்தில் அதற்குச் சமமாக) ஏதேனும் வங்கியில் இலங்கை ரூபாவாக மாற்றலாம்; அல்லது
- 2021 திசம்பர் மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலரொன்றுக்கு இலங்கை ரூபா 210* ற்கு (அல்லது வேறு நாணயத்தில் அதற்குச் சமமாக) ஏதேனும் வங்கியிலுள்ள இலங்கை ரூபா கணக்கில் வைப்பிலிடலாம்; அல்லது
- உங்களது தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கில் (PFCA) அல்லது சிறப்பு வைப்புக் கணக்கில் (SDA) வைப்பிலிடலாம்;
- உங்களது வங்கியூடாக இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலீடு செய்யலாம்.

* செலாவணி வீதம்: ரூ.200 + விசேட ஊக்குவிப்பு ரூ.10

குறிப்பு: இலங்கை மத்திய வங்கி மூலம் மேற்குறித்தவை தொடர்பிலான அவசியமான அறிவுறுத்தல்கள் அனைத்து வங்கிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01
0112477255 0112477716 dfe@cbsl.lk www.dfe.lk

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் கார்த்திகை மாதம் 29ம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஜுமாதல் ஊலா பிறை 10

குறள் தரும் சிந்தனை



தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்கு
அரும்பொருள் யாதொன்றும் இல்

தெளிந்து தேர்ந்த நண்பர்களுடன், சேர்ந்து, ஆற்ற வேண்டிய செயலை ஆராய்ந்து, தாமும் நன்கு சிந்தித்துச் செய்தால் ஆகாதது ஒன்றுமில்லை.

## கொவிட் 19 கட்டுப்பாட்டுக்கான இரண்டு முக்கிய பொறுப்புகள்

உலகிற்கு பெரும் அச்சுறுத்தலாக விளங்கிக் கொண்டிருக்கும் கொவிட்19 தொற்றானது வயது, பால், நிற, பிரதேச வேறுபாடின்றி எல்லா மட்டத்தினரையும் தாக்கக் கூடியதாகவும் பாதிக்கக் கூடியதாகவும் இருந்து வருகின்றது. இத்தொற்றின் அச்சுறுத்தலுக்கு 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் அதிகளவில் முகம் கொடுக்கின்ற போதிலும் கர்ப்பிணிப் பெண்கள் உள்ளிட்டவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

இலங்கை சுகாதார அமைச்சின் உத்தியோகபூர்வத் தரவுகளின்படி, நேற்றுமுன்தினம் வரையும் இந்நாட்டில் 05 இலட்சத்து 75 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இத்தொற்றுக்கு உள்ளாகியுள்ளதோடு, 14 ஆயிரத்து 600 க்கும் மேற்பட்டோர் மரணமடைந்துமுள்ளனர்.

அந்த வகையில் இந்நாட்டில் கொவிட் 19 தொற்று பதிவாகத் தொடங்கியது முதல் இற்றை வரையும் 10 ஆயிரத்து 500 கர்ப்பிணிப் பெண்கள் இத்தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். அவர்களில் 60 கர்ப்பிணிப் பெண்கள் உயிரிழந்துமுள்ளனர். இதன்படி இத்தொற்றுக்கு உள்ளான பெரும்பாலான கர்ப்பிணிப் பெண்கள் அதன் உயிராபத்து அச்சுறுத்தலில் இருந்து பாதுகாப்பு பெற்றுக் கொண்டுள்ளனர் என்பது வெளிப்படையானது. இதற்கு இத்தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசி பெரிதும் உதவியுள்ளது என்பதில் ஐயமில்லை. இந்நாட்டின் கர்ப்பிணிப் பெண்களில் 95 வீதமானோர் இத்தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்று இருப்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

இந்த நிலையில் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ள பூஸ்டர் தடுப்பூசி வழங்கல் திட்டத்தின் கீழ் 30 வயதுக்கு மேற்பட்ட கர்ப்பிணிப் பெண்களுக்கும் இத்தடுப்பூசியைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

'20 வயதுக்கு மேற்பட்ட கர்ப்பிணிப் பெண்களுக்கு சுற்று நிரூபம் கிடைக்கப் பெற்ற பின்னர் இத்தடுப்பூசியைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்' என்று குறிப்பிட்டுள்ள சுகாதார அமைச்சின் குடும்ப நல சுகாதாரப் பிரிவின் பணிப்பளாரான விஷேட வைத்திய நிபுணர் சித்ரமாலி டி சில்வா, 'மூன்றாம் கட்டத் தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டாலும் கூட இத்தொற்றிலிருந்து 100 வீதம் பாதுகாப்பு பெற முடியாது' என்றும் 'முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பேணுதல், சன நெரிசல் மிக்க இடங்களுக்கு செல்வதைத் தவிர்த்தல் உள்ளிட்ட கொவிட் 19 தொற்று தவிர்ப்புக்கான அடிப்படை சுகாதார வழிகாட்டல்களை ஒவ்வொருவரும் தொடர்ந்தும் கடைப்பிடிக்க வேண்டும்' என்றும் வலியுறுத்தி உள்ளார்.

தற்போது பயன்பாட்டிலுள்ள அவசர தேவையின் நிமித்தம் பயன்படுத்தப்படும் கொவிட் 19 தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசியின் மூலம் இத்தொற்றுக்கு உள்ளாவதையோ இத்தொற்று பரவுவதையோ தவிர்க்க முடியாது. இத்தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்றவர்களும் கூட இத்தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். ஆனால் அவர்களுக்கு இதன் தாக்கமும் பாதிப்பும் இத்தடுப்பூசியைப் பெற்றிராதவர்களை விடவும் மிகவும் குறைவாகும். அதன் காரணத்தினால் தான் இந்த இரண்டையும் தவிர்த்துக் கொள்வதற்கு அடிப்படை சுகாதார வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிப்பது இன்றியமையாததாகும். ஆனால் இத்தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு இத்தடுப்பூசி பெரிதும் பங்களித்து வருகின்றது என்பது மறைக்க முடியாத உண்மையாகும்.

இதேவேளை பொதுசுகாதார பரிசோதகர் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன, 'கொவிட் 19 தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசியின் பயனாகவே இந்நாட்டில் இத்தொற்றினால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை குறைவடைந்து வருகின்றது' என்று குறிப்பிட்டு இருக்கின்றார்.

இதன்படி கொவிட் 19 தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்திக் கொள்வதற்கு தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதோடு இத்தொற்றுக்கு உள்ளாவதைத் தவிர்த்துக் கொள்வதற்காக அடிப்படை சுகாதார வழிகாட்டல்களையும் கர்ப்பிணிப் பெண்கள் உள்ளிட்ட சகலரும் கடைப்பிடிக்கவும் வேண்டும். இவற்றின் ஊடாகவே இத்தொற்றைக் கட்டுப்பாடுத்திக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

ஆகவே கொவிட் 19 தொற்று தவிர்ப்பு மற்றும் கட்டுப்பாடு தொடர்பில் கர்ப்பிணிப் பெண்கள் உள்ளிட்ட சகலரும் தடுப்பூசி பெற்றுக் கொள்வதிலும் அடிப்படை சுகாதார வழிகாட்டல்களை முழுமையாகக் கடைப்பிடித்தொழுகுவதிலும் முழுமையாகக் கவனம் செலுத்த வேண்டும். எல்லா சந்தர்ப்பங்களிலும் இத்தொற்று தொடர்பில் முன்னெச்சரிக்கையுடனும் முன்னவதானத்துடனும் செயற்படத் தவறக் கூடாது. குறிப்பாக இத்தொற்று தொடர்பிலான கவனயீனமும் அசிரத்தையும் முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டியது என்றால் அது மிகையாகாது.

editor.tkn@lakehouse.lk

# சமஷ்டியை பேசுவதற்கு தமிழ்க் கூட்டமைப்புக்கு அருகதை கிடையாது!

## மக்களை முட்டாள்களாக்க முயற்சிப்பது கண்டிக்கத்தக்கது என்கிறார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் ஆனந்தசங்கரி

குறிப்பிட்ட ஒரு சில கட்சிகளை ஒதுக்கி வைத்து விட்டு, தமிழ் பேசும் கட்சிகளின் ஒருமித்த தீர்மானம் என்று ஊடகங்கள் முடிசூட்டுவதை தயவு செய்து நிறுத்திக் கொள்ள வேண்டும் என தமிழர் விடுதலைக் கூட்டணி தெரிவித்துள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

குறிப்பிட்ட ஒரு சில கட்சிகளை ஒதுக்கி வைத்து விட்டு, தமிழ் பேசும் கட்சிகளின் ஒருமித்த தீர்மானம் என்று ஊடகங்கள் முடிசூட்டுவதை தயவு செய்து நிறுத்திக் கொள்ள வேண்டும். ஒரு சில கட்சிகள் ஒன்றுசேர்ந்து எடுத்திருக்கும் முடிவு தமிழ் மக்களுக்கு மேலும் ஆபத்தையும் பாதிப்பையும் ஏற்படுத்தும் என்பதை குறிப்பிட்ட கட்சிகளின் தலைவர்கள் புரிந்து கொள்ளவில்லை என்பதை நினைக்கும் பொழுது வேதனை தருகின்றது.

அந்நிய நாடுகளின் அழுத்தத்தை பிரயோகிக்க சொல்லுமாறு கோருவது முட்டாள்தனமான செயற்பாடாகும். இதன் மூலம் உள்ளூர் அரசியல்வாதிகளையும் பெரும்பான்மையின கடும்போக்காளர்களையும் கோபமடைய செய்வதுடன் மட்டுமல்ல குறிப்பிட்ட நாடுகளுக்கும் இலங்கைக்கும் இடையே உள்ள புரிந்துணர்வை சிதைக்கும் செயற்பாடாகவும் அமைந்து விடும்.

இலங்கை ஒரு இறைமையுள்ள நாடாகும். எந்த ஒரு நாடும் ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு மேல் தலையிடுவதை இலங்கையும் விரும்புவதில்லை. குறிப்பிட்ட நாடுகளும் இந்த விடயத்தில் மென்மையான போக்கையே கடைப்பிடிக்கும். இந்த விடயம் அனைத்துத் தரப்பினருக்கும் தெரிந்திருந்தும் மக்களை முட்டாள்களாக்குவது வன்மையாக கண்டிக்கத்தக்க விடயமாகும்.



எந்த ஒரு காலகட்டத்திலும் சமஷ்டி என்ற பேச்சுக்கே இடமில்லை என்று அனைத்துத் தரப்பினரும் கூறிய பின்பும் "சமஷ்டியை பெற்றே தீருவோம்" என்று அறிக்கை விட்டு மக்களை ஏமாற்றுவதை சம்பந்தப்பட்டோர் நிறுத்திக் கொள்ள வேண்டும். 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக களமிறங்கிய ரணில் விக்கிரமசிங்க சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்து போட்டியிட்டார். அதற்கு எதிராக பிரசாரத்தை மேற்கொண்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் தமிழ் மக்களை வாக்களிக்க விடாமல் தடுத்து நிறுத்தினர்.

இருந்தும் 49 சதவீதத்திற்கு மேற்பட்ட சிங்கள மக்கள் சமஷ்டிக் கோரிக்கைக்கு ஆதரவாக வாக்களித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. அந்த வரலாற்றுத் தவறை செய்த தமிழ் தேசிய கூட்டமைப்பினர் இன்று சமஷ்டிக் கோரிக்கையை வைத்து கொக்கரிப்பது வேடிக்கையாக இருக்கின்றது. சமஷ்டி பற்றி பேசும் அருகதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு கிடையாது. இவர்களுடன் இணைந்து ஒரு சில கட்சிகள் கூடிப் பேசுவது பெரும் வியப்பாக இருக்கின்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணி அன்று தொட்டு இன்று வரை இந்திய முறையிலான ஒரு அரசியல் தீர்வையே முன்வைத்து வருகின்றது. இதற்கு மேலாக இந்தியாவும் எமக்கு எதையும் பெற்றுத் தரப் போவதில்லை. பெருமளவு சிங்கள மக்களும் அரசியல் தரப்பினரும் ஒரு காலத்தில் இதற்கு ஆதரவு தெரிவித்தனர். அதன் அடிப்படையில் இன்று இலங்கையிடம் சமரசமாக பேசிப் பெற்றுக் கொள்ள முயற்சிப்பதே சாலச் சிறந்ததாகும்.

2004ஆம் ஆண்டு தொடக்கம் 2009ம் ஆண்டு வரை 22 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்தும் பலமான விடுதலைப் புலிகள் அமைப்பை வைத்துக் கொண்டு அவர்களால் மக்களுக்கு எதனையும் பெற்றுக் கொடுக்க முடியவில்லை.

2015ம் ஆண்டு தொடக்கம் 2020ம் ஆண்டு வரை நல்லாட்சி அரசாங்கத்தில் உயர்ந்த பதவிகளை வகித்துக் கொண்ட நேரத்தில் கூட தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு எதுவித தீர்வினையும் பெற்றுக் கொடுக்க முன்வரவுமில்லை, முயற்சிக்கவுமில்லை. இன்று இவர்களுடன் இணைந்து ஒரு சில கட்சிகள் ஒருமித்து தீர்மானங்களை நிறைவேற்றுவது நகைப்பிற்குரிய விடயமாகும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சமுதாயம் எதிர்காலத்தில் தலைநிமிர்ந்து வாழ்வதற்கு கல்வி முன்னேற்றமே தேவை

## அம்பிளாந்துறை கலைமகள் மகா வித்தியாலயத்திற்கு நூலகப் பேருந்து வழங்கும் நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன்

எமது எதிர்கால சமுதாயம் தலைநிமிர்ந்து வாழ்வதற்கு கல்விச்சூழலை வளப்படுத்துவது மிக முக்கியமான ஒன்றாகும் என இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் வலியுறுத்தினார்.

எமது தேசத்து சிறார்களின் அறிவுச் சுடரை தூண்டும் நோக்கத்துடன் புதிய சிந்தனைகளை கருப்பொருளாகக் கொண்டு இலங்கை தேசிய நூலகம் மற்றும் இலங்கை போக்குவரத்து சபை, எஸ்.எல். டி மொபிடல் ஆகிய நிறுவனங்கள் ஒன்றிணைந்து பாவனையில் இருந்து நீக்கப்பட்ட அரசு பேருந்துகளை பாடசாலை மாணவர்களின் மனங்களை கவரும் வண்ணம் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய நூலகங்களாக வடிவமைக்கும் திட்டத்தை முன்னெடுக்கின்றன.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலின் கீழ் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள பாடசாலைகளுக்கு அவற்றைப் பெற்றுக் கொடுக்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதில் ஒரு கட்டமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் மட்டக்களப்பு மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவின் அம்பிளாந்துறை கலைமகள் மகாவித்தியாலயத்திற்கு இந்த நூலகப் பேருந்து இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனால் பெற்றுக் கொடுக்கும் நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றும்போதே இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் அவ்வாறு தெரிவித்தார்.

"கல்வியால் அடையாளம் காணப்பட்ட எமது சமூகம் மீண்டும் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளை ஊக்கப்படுத்துவதால் மாத்திரமே சமூக முன்னேற்றம் காண முடியும். இலங்கையில் இலவசக் கல்விமுறை நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டு 75 வருடங்கள் கடந்துள்ள நிலையில், நாடு இத்துறையில் கணிசமான முன்னேற்றங்களைச் சந்தித்துள்ளது. இலவசக் கல்வியை இல்லாமல் செய்வதற்கு சிலர் முயற்சிக்கின்றனர் என்ற குற்றச்சாட்டுக்களுக்கும் மத்தியில் மாறி மாறி ஆட்சிக்கு வரும் அரசுகள், அதனைப் பாதுகாப்பதற்கு கடும் பிரயத்தனங்களை முன்னெடுத்து வருகின்றமையை மறுக்க முடியாது.



இலங்கை எழுத்தறிவு வீதத்தில் உயர்ந்த இடத்திலிருப்பதற்கு இலவசக் கல்விமுறை பெரும் பங்காற்றியுள்ளது. அரசாங்கம் கல்வியை இலவசமாக வழங்குவதற்கு பெருந்தொகை நிதியை செலவிட்டாலும் கல்வியில் சமத்துவமின்மை பாரதூரமான விடயமாகவிருக்கிறது. கல்வியில் சமத்துவம் இன்மை என்ற விடயம் பிராந்திய ரீதியான விடயமாகவும், பொருளாதாரத்துடன் சம்பந்தப்பட்ட விடயமாகவும் காணப்படுகிறது.

நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு தேசிய கொள்கைகள் திட்டமிடலுக்கு அமைய நாடு முழுவதிலும் உள்ள அரசாங்க பாடசாலைகளில் இலவசக் கல்விவழங்கப்பட்டு வருவதுடன், சகலருக்கும் ஒரேமாதிரியான பாடநெறிகள் மற்றும் பாடநூல்களை வழங்கியே கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. பாடநெறிகளில் எந்த விதமான ஏற்றத்தாழ்வுகளும் காட்டப்படாத நிலையில், மாவட்டத்துக்கு மாவட்டம் கல்வித்தரத்தில் சமத்துவமின்மை காணப்படுகிறது. கொழும்பு, கம்பஹா போன்ற பொருளாதார வளம் நிறைந்த மாவட்டங்களில் காணப்படும் கல்வித் தரத்துக்கும், மிகவும் பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள மாவட்டங்களுக்குமிடையில் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றது.

தற்போது அரசாங்கத்தினால் மாணவர்கள் மத்தியில் கல்வி அபிவிருத்தியை முன்னெடுப்பதற்காக பாரிய வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், கிழக்கு மாகாணத்தில் பல பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதற்கமைய சவுக்கடி பாரதி வித்தியாலயம், கற்சேனை வித்தியாலயம், காயங்குடா வித்தியாலயம், கொட்டியாரம்முனை வித்தியாலயம் ஆகியவை தரம் உயர்த்தப்பட உள்ளதுடன், இலுப்படிச்சேனை அம்பாள் வித்தியாலயம் மற்றும் கன்னஞ்சோலை இருட்டுச்சோலை விஷ்ணு வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளை உயர் தரம் வரை தரம் உயர்த்துவது தொடர்பிலும் ஈச்சந்தீவு இராமகிருஷ்ண சங்க வித்தியாலயத்தினை சாதாரண தரம் வரை உயர்த்துவது தொடர்பிலும் பட்டிப்பளை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மற்றும் கரவெட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவற்றை தரம் 6 தொடக்கம் தரம் 9 வரை உயர்த்துவதற்கும் கல்குடாவில் உள்ள கல்மடு விவேகானந்தா வித்தியாலயத்தினை தரம் 11 வரையிலும் செங்கலடி விவேகானந்தா வித்தியாலயத்தில் உயர்தர கற்கைநெறிகளை ஆரம்பிப்பது தொடர்பிலும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.



பட்டிருப்பு வலயத்தில் புதிதாக இரு பாடசாலைகளை ஆரம்பிப்பது தொடர்பிலும் இங்கு முன்மொழியப்பட்டது. இது தொடர்பாக மிக விரைவில் வலயக்கல்வி அலுவலகத்தின் ஊடாக அணுகுமுறையை முன்னெடுப்பதற்கும் அதேபோன்று மட்டக்களப்பு மாவட்டத்தின் பின்தங்கிய பிரதேசம் சார்ந்து இருக்கின்ற பாடசாலைகளை மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்காக தேசிய பாடசாலைகளை அதிகரிப்பதற்கான முன்மொழிவுகளை கல்வி அமைச்சுக்கு பரிந்துரைத்துள்ளேன்" என்று இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.

"பின்தங்கிய பிரதேசங்களில் மாணவர்களின் மத்தியில் பாடசாலை இடைவிலகல் அதிகரித்துவரும் சந்தர்ப்பத்தில் பாடசாலைக் கல்வி நடவடிக்கைகளிலிருந்து இடைவிலகல் தொடர்பில் கண்டறிந்து அவர்களை கல்விச் சூழலில் ஊக்கப்படுத்துவதற்காக அரசாங்கத்தினால் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதற்கமைய மட்டக்களப்பு மாவட்டத்தின் பின்தங்கிய கிராமப் பகுதிகளிலுள்ள பாடசாலைகள் தரம் உயர்த்தப்பட்டு கல்வி நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள அனைத்து பாடசாலைகளின் உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் பின்தங்கிய பிரதேசங்களில் மாணவர்களின் பாடசாலை இடை விலகலுக்கு பெரிதும் காரணமாக இருப்பது கிராமத்திலிருந்து பாடசாலைக்கு இடையிலான தூரம் ஆகும். குறிப்பாக வீடுகளுக்கும் பாடசாலைக்கும் இடையிலான தூரம் அதிகமாகவிருக்கும்போது போக்குவரத்துக்கு செலவு செய்ய வேண்டிய பணம் அதிகமாகவிருக்கிறது. இதனால் சில பெற்றோர் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பாமல் விடுவதற்கு முயற்சிக்கின்றனர். அல்லது மாணவர்கள் பல கிலோ மீட்டர் தூரம் நடந்து பாடசாலைகளுக்கு செல்ல வேண்டிய சூழ்நிலை காணப்படுகின்றது. இவ்வாறான சூழ்நிலையை தடுப்பதற்காக பின்தங்கிய பிரதேச பாடசாலைகள் தரம் உயர்த்தப்பட்டு அபிவிருத்தி செய்யப்படுகின்றன. அத்துடன் இராஜாங்க அமைச்சரின் பணிப்பின் கீழ் போக்குவரத்து அமைச்சின் ஊடாக அரசு பேருந்து சேவைகளை மட்டக்களப்பு மாவட்டத்தின் பின்தங்கிய பிரதேசங்களுக்கும் மற்றும் நகரத்துக்கும் இடையிலே பயண நடவடிக்கைகளை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இலங்கையிலுள்ள பாடசாலைகளில் பெரும்பாலான பாடசாலைகள் மாகாணசபைகளுக்கு கீழ் காணப்படுகின்றன. தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளுக்கிடையில் வளங்களில் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன. இதுவும் கல்வியின் சமத்துவமின்மைக்கு பெரிதும் காரணமாக அமைகின்றது. வருமான சமத்துவமின்மை மற்றும் புவியியல் சார்ந்த அமைவிடங்கள் மாணவர்களின் கல்வியை கணிசமாகப் பாதிக்கின்றன. மட்டகளப்பு மாவட்டத்தில் அனைத்து துறைகளிலும் அபிவிருத்திகளை முன்னெடுப்பது முக்கியமான ஒன்றாகும். கடந்தகால அரசியல் தலைமைகள் தங்களுக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை தவற விட்டனர். மக்கள் நலன் சார்ந்த விடயங்களை அவர்கள் தவற விட்டனர். அரசியல் நோக்கத்தினை வைத்தே செயல்பட்டனர். நாம் அவ்வாறு செயல்பட முடியாது. எமது மக்கள் நலன் மற்றும் அபிவிருத்தி குறித்து, அவர்களின் எதிர்காலம் குறித்து நாம் சிந்தித்து செயல்படுகின்றோம். அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் அனைத்து அபிவிருத்தித் திட்டங்களும் மட்டக்களப்பு மாவட்டத்தின் பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள அனைத்து மக்களுக்கும் சென்றடையும் வகையில் செயற்பட்டு வருகின்றோம்.

இவ்வாறு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் மேலும் தெரிவித்தார்.

இரா சுரேஷ்குமார்
(இராஜாங்க அமைச்சரின் ஊடக இணைப்பாளர்)

காசி உணர்வுகளால் உருவாக்கப்பட்டது. இங்கு வந்து பலரும் ஆசி பெற்று வருகின்றனர். இந்த புண்ணியஸ்தலம் இந்தியாவின் அடையாளமாகத் திகழ்கிறது. காசியின் வளர்ச்சியில் அனைவரது பங்கும் இருக்க வேண்டும் என்று காசி விஸ்வநாதர் கோயிலில் நடந்த விழாவில் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

இரண்டு நாள் பயணமாக தனது சொந்த தொகுதியான வாரணாசியை பிரதமர் நரேந்திர மோடி சென்றடைந்தார். அவரை அம்மாநில ஆளுநர் ஆனந்தி பென் படேல் மற்றும் முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் ஆகியோர் வரவேற்றனர். தொடர்ந்து, அங்கிருக்கும் கால பைரவர் கோயிலில் சிறப்பு வழிபாடு நடத்தி பிரதமர் நரேந்திர மோடி, அங்கிருந்து இரண்டடுக்கு படகில் பயணம் மேற்கொண்டார்.



# மீண்டும் புதிய ஒளி பெறுகின்றது காசி



## உணர்வுகளால் உருவாக்கப்பட்ட, இந்தியாவின் அடையாளமான காசியின் வளர்ச்சியில் அனைவரது பங்கும் அவசியம்; காசி விஸ்வநாதர் கோயிலில் நடந்த விழாவில் பிரதமர் நரேந்திர மோடி

உலகப்புகழ் பெற்ற காசி விஸ்வநாதர் ஆலயத்திற்கு வருகை தந்த பிரதமர் மோடி, புண்ணிய நதியான காசி நதியில் புனித நீராடி வழிபாடு நடத்தினார். தொடர்ந்து காசி விஸ்வநாதர் கோயிலுக்குச் சென்று சிறப்பு வழிபாடுகளை நடத்தினார். இதனையடுத்து காசி விஸ்வநாதர் ஆலய வளாக கட்டடப் பணியில் ஈடுபட்ட பணியாளருக்கு பிரதமர் நரேந்திர மோடி பூ தூவி மரியாதை செலுத்தினார். காசி விஸ்வநாதர் ஆலய வளாக கட்டடப் பணியில் ஈடுபட்ட பணியாளர்களுடன் பிரதமர் நரேந்திர மோடி குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார். அதனை முடித்துக் கொண்டு காசி விஸ்வநாதர் கோயில் வளாகத்தில் ரூ.339 கோடியில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை திறந்து வைத்து பிரதமர் நரேந்திர மோடி, 'ஹர ஹர மகாதேவ்' என்ற கோஷத்துடன் தனது உரையைத் தொடங்கினார்.

"இன்று, இந்த மாபெரும் வளாகத்தை கட்டுவதற்கு உழைத்த ஒவ்வொரு தொழிலாளிக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். கொவிட்19 காலத்திலும், பணிகள் பாதியில் நிற்கவில்லை. 'இது இப்படித்தான் இருக்கும், காசியை மாற்ற முடியாது' என்ற எண்ணம் இருந்தது. மோடியை போல் பலர் வருவார்கள்,ஆனால் எதையும் மாற்ற முடியாது என்று எண்ணினர்.பல மதத்தை சேர்ந்தவர்கள் காசிக்கு வந்து செல்கின்றனர். காசி இப்போது மீண்டும் புதிய ஒளி பெற்றுள்ளது.

இந்த மிகப் பெரிய நிகழ்வுக்கு அனைவரையும் வரவேற்கிறேன். இதற்கு வழிவகுத்த அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். காணாமல் போன கோயில்கள் மீண்டும் இங்கு நிறுவப்பட்டன. இன்று இந்த நிகழ்வு வரலாற்றில் புதிய அத்தியாயமாக எழுதப்பட்டுள்ளது. காசி விஸ்வநாதர் கோயில் வளாகம் பிரமாண்டமானது மட்டுமல்ல, இந்தியாவின் சனாதன கலாசாரம் மற்றும் மரபுகளின் சின்னமாகும்.

பண்டைய காலத்தின் உத்வேகங்கள் எவ்வாறு எதிர்காலத்திற்கு வழிகாட்டுகின்றன என்பதை இங்கே காணலாம். காசி விஸ்வநாதர் கோயிலின் இருண்ட பக்கம் தற்போது முடிவடைந்துள்ளது. 3000 சதுர அடியில் இருந்த காசி விஸ்வநாதர் கோயில் வளாகம், தற்போது 5 இலட்சம் சதுர அடியாக மாறியுள்ளது. இப்போது 50 ஆயிரம் முதல் 75 ஆயிரம் பக்தர்கள் கோயிலுக்கும் அதன் வளாகத்திற்கும் வரலாம்.

காசி மிகப் புனிதமானது, மக்களின் மிக உணர்வுபூர்வ இடமாகும். இதனை வர்ணிக்க வார்த்தைகள் இல்லை. காசி என்பது வார்த்தைகள் மட்டும் அல்ல. காசி உணர்வுகளின் உருவாக்கம், காசி என்பது வாழ்க்கை, காசி என்பதுதான் உண்மை பண்பாடு. காசியில் பல தியாகிகள் உருவாகி உள்ளனர். உண்மை, அஹிம்சையின் அடையாளம் காசி. இது நமது ஆன்மிக ஆன்மாவின் சின்னம், இது இந்தியாவின் தொன்மை மற்றும் பாரம்பரியத்தின் சின்னம். காசிக்கு பல மதத்தைச் சேர்ந்தவர்கள் வந்து செல்கின்றனர். காசியில் அனைத்து தரப்பினரும் வந்து ஆசி பெற்றுச் செல்கின்றனர். இங்குள்ள அனைவருக்கும் காசியின் வளர்ச்சியில் பங்கு உண்டு.

வாரணாசியை பலர் கேலி செய்தனர். ஆனால் நோக்கம் சரியாக இருந்தால் முடியாதது எதுவும் இல்லை. கோயில்கள், மருத்துவக் கல்லூரிகள் அதிகம் உருவாக்கி வருகிறோம். இன்றைய புதிய அமைப்பு சிவன் அருளால் நடந்தேறியுள்ளது."

இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.



உத்தரப் பிரதேசம் வாரணாசியில் ரூ.339 கோடி செலவிலான காசி விஸ்வநாதர் கோயில் வளாகத்தை பிரதமர் நரேந்தர மோடி தொடக்கியுள்ளார். இதற்காக வந்த அவருக்கு வீதியில் மக்கள் வரவேற்பு அளித்தனர். அவர் மக்களுடன் கலந்து மகிழ்ந்தார். மோடியின் மக்களவை தொகுதியான வாரணாசி மக்கள் பிரதமரை வழிநெடுக கூடி நின்று ரோஜா மலர்களை தூவி வரவேற்றனர். இதில், தன்ச் தெருவின் பாதுகாப்பு வளையத்திற்குள் நுழையும் வகையில் ஒரு சாது திடீரென வீதியில் இறங்கினார்.

அவரது கைகளில் பிரதமருக்கு அணிவிக்கவென சிவப்புநிறத் தலைப்பாகையும், காவிநிறத்துண்டும் இருந்தன. முன் அனுமதியின்றி வந்த சாதுவை, மடக்கிய பிரதமரின் பாதுகாப்பு அதிகாரிகள் அவரை வெளியேற்ற முயற்சித்தனர்.

இதை சற்று தொலைவிலிருந்து முன் இருக்கையில் அமர்ந்தபடி தனது வாகனத்தில் வந்த பிரதமர் மோடி கவனித்து விட்டார். பிறகு வாகனத்தை நிறுத்தக் கூறி பாதுகாப்பு அதிகாரிகளை தடுத்து அந்த சாதுவை அனுமதிக்கும்படி உத்தர விட்டார்.

இதனால், மகிழ்ந்த சாதுவின் கைகளில் தலைப்பாகையை வாங்கிய பிரதமர் மோடி அதே மகிழ்ச்சியுடன் அணிந்து கொண்டார். காவித் துண்டையும் அணிந்தவர் கைகூப்பி அங்கிருந்த தன் தொகுதி வாசிகளை வணங்கி மகிழ்ந்தார். இந்த காட்சி அங்கிருந்தவர்களால் வீடியோ பதிவாகி சமூகவலைதளங்களில் வைரலாகி வருகிறது.

இந்த வீடியோ பதிவை தனது ட்விட்டரில் பதிவேற்றம் செய்த பிரதமர் மோடி, "காசியை அடைந்ததும் பெருமகிழ்ச்சி கொண்டேன். விரைவில் காசிவிஸ்வநாதருக்கான திட்டத்தை நாட்டிற்கு அர்ப்பணிக்க உள்ளேன். இதற்கு முன்பாக நான் பாதுகாவலரான காலபைரவரையும் தரிசித்தேன்" எனக் குறிப்பிட்டுள்ளார்.



உத்தர பிரதேசம் வாரணாசியில் உள்ள கால பைரவர் கோயிலில் பிரதமர் மோடி சுவாமி தரிசனம் செய்து கங்கையாற்றில் பூக்களை தூவி புனித நீராடினார். கங்கை நதிக்கு பூக்களை தூவி பூஜை செய்தார். பிரதமர் நரேந்திர மோடியின் சொந்தத் தொகுதியான வாரணாசி தொகுதியில் உள்ள காசி விஸ்வநாதர் கோயிலையொட்டிய பகுதிகள் நவீன முறையில் புணரமைக்கப்பட்டுள்ளன.

புனித நீராடி விட்டு, தண்ணீரை எடுத்து வந்து கோயிலில் அபிஷேகம் செய்யும் சம்பிரதாய பணியில் பக்தர்கள் ஏராளமான இடையூறுகளை சந்தித்து வந்தனர்.

இதை கருத்திற் கொண்டு, ரூ.339 கோடி செலவில் கோயிலில் இருந்து கங்கை நதிக்கரை வரை பக்தர்கள் வசதிக்காக பல்வேறு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், தங்கும் அறைகள், அருங்காட்சியகம், பார்வையாளர் மாடம், சுற்றுலா மையம், உணவு கூடங்கள் என மொத்தம் 23 கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. கோயிலின் நுழைவாயில் மற்றும் இதர கட்டுமானங்கள், பாரம்பரிய முறைப்படி கற்கள் மற்றும் இதர மூலப்பொருட்களைக் கொண்டு கட்டப்பட்டுள்ளன. பிரதமர் நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வையுடன் இந்த கட்டுமானங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. உத்தரபிரதேசத்தில் சட்டசபை தேர்தல் நெருங்கும் நிலையில், இந்த கட்டடங்களின் திறப்பு விழா நடைபெற உள்ளது.



# லண்டன் மாநகரில் அபிராமி ராஜனின் வாய்ப்பாட்டு, வீணை சமர்ப்பண விழா

கர்நாடக இசைப்பாடகியும் வீணை வித்தகியுமான அபிராமி ராஜனின் வாய்ப்பாட்டு, வீணை நிகழ்வு என்பது சமர்ப்பண நிகழ்வாக மட்டுமன்றி, நமது கலைமரபின் முதுசத்தைக் கையளிக்கும் நீண்ட நம் மரபின் படையலாகச் சிறப்புப் பெறுகிறது என்று கலை, இலக்கிய விமர்சகர் மு.நித்தியானந்தன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

இல்போர்ட் ராஜன் தம்பதிகளின் புதல்வியான அபிராமி ராஜனின் வாய்ப்பாட்டு, வீணை சமர்ப்பண விழா அண்மையில் லண்டன் ஸ்ரீ மகாலஷ்மி ஆலய மண்டபத்தில் இடம்பெற்ற போதே நித்தியானந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"அர்ப்பணம் என்பது கொடுப்பது என்றும், சமர்ப்பணம் என்பது சம்யக அர்ப்பணம் என்றும், அதாவது கையால் மட்டுமல்ல, மனதினாலும் ஈடுபாட்டுடனும் செய்யும் தானம் தான் சமர்ப்பணம் என்றும் பொருள்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

'இங்கிலாந்திலேயே பிறந்து வளர்ந்த அபிராமி தனது வாய்ப்பாட்டிற்கு ஒரு உன்னத குருவைத் தேடிக் கண்டடைந்திருக்கின்றார். ஐந்து வயதிலேயே வாய்ப்பாட்டுப் பயிற்சிக்குப் போனவர் பத்தொன்பது ஆண்டு தொடர்ந்தும் இந்த இசைப்பயிற்சியை தொடர்ந்திருக்கின்றார் என்றால் இந்த இளங்குருத்தின் இசை நாட்டம் பாராட்டிற்குரியது. இந்த நீண்ட தொடர்ந்த இசைப் பயிற்சி என்பது ஆழ்ந்த இசை மரபிலிருந்து வருவதாகும். குருகுலக் கல்வியின் வேரிலிருந்து கிளைப்பது; ஒரு குருவும் சிஷ்யையும் கலக்கும் சங்கமத்திலிருந்து பிரவகிப்பது. அத்தகைய இசை ஆசிரியையாக அபிராமி ராஜனுக்கு வந்து வாய்த்தவர் மாதினி ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களாவார்.







மாதினி இன்னுமொரு கலைமரபின், இலக்கிய மரபின் வாரிசு. புகழ் மிக்க வித்துவான் வேலனின் மகள். தமிழ்ப் புலமை மரபிலே வந்த மாதினி அய்யாக்கண்ணு தேசிகர், ஏ.கே.கருணாகரன், கல்யாண கிருஷ்ண பாகவதர் ஆகியோரிடம் முறையாகப் பயின்று சிறந்த பாடகியாக உலா வருபவர். அவரது இசைப்பயிற்சியின் கீழ், இன்று அபிராமி ராஜன் இங்கு அனாயாசமாகப் பாடிய பாடல்களில் அபிராமியின் குரல் வளத்தினை, செழுமையை இனங்காண முடிந்தது.

மாதினியிடம் இசையையும் தமிழறிஞரும் தமிழ்க்கவிதைகளை ஆங்கிலத்தில் வடிக்கும் பேராற்றலும் கொண்ட வழக்கறிஞர் செ.சிறிக்கந்தராசா அவர்களிடம் தமிழையும் பயின்று தனது தமிழ் மொழி ஆற்றலையும் அபிராமி வளர்த்துக் கொண்டிருக்கிறார். புகழ் மிக்க இசைப் பாரம்பரியத்தில் வந்திருக்கும் மாலினி தனபாலசிங்கம் அவர்களின் கீழ் நேர்த்தியாகப் பயின்று அற்புதமாக வீணையை இசைத்திருக்கும் அபிராமியின் ஆற்றலை நாம் பாராட்ட வேண்டும். மாலினியும் மாதினியுமாக இணைந்த இந்த ஜோடிப் புறாக்கள் குறைந்தது இருபது ஆண்டுகளாக இந்த இசையுலகில் பயணித்திருக்கிறார்கள். கலையுலகில் இது அபூர்வமானது.

ரோயல் பேங்க் ஒப் ஸ்கொட்லாண்ட் என்ற கீர்த்தி மிக்க வங்கியொன்றின் முகாமையாளராக விளங்கும் அபிராமி ராஜன் இப்போது இன்னுமொரு இசைப் பொக்கிஷத்தையும் தன் கையகப்படுத்தியிருக்கின்றார்".

இவ்வாறு விமர்சகர் மு.நித்தியானந்தன் தனது சிறப்புரையில் மேலும் பேசுகையில் தெரிவித்தார்.

'அபிராமிக்கு வீணை படிப்பிப்பது மகிழ்ச்சிகரமானது. அவரது இசைப் பயணத்தில் மேலும் அவர் வெற்றிகள் பெறுவார்' என்று அவரது வீணை ஆசிரியை மாலினி தனபாலசிங்கம் வாழ்த்துத் தெரிவித்தார். அபிராமி ராஜனின் வாய்ப்பாட்டு, வீணை சமர்ப்பண நிகழ்வில் அ.சோமசுந்தர தேசிகர் மிருதங்கமும், அ.ஞானசுந்தரம் வயலினும் பெங்களூர் ஆர்.ஆர். பிரகாஷ் கடமும் கே.சிதம்பரநாதன் மோர்சிங்கும் வாசித்து இந்த நிகழ்விற்கு சிறப்புச் சேர்த்தனர்.

கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியில் நீண்ட இடைவெளியில் இத்தகையதொரு மண்டபம் நிறைந்த கூட்டம் அபிராமியின் இசை நிகழ்வில் கலந்து கொண்டது ரசிகர்களுக்குக் கிடைத்த பெரும் இசை விருந்தாக அமைந்தது.

## பேராசிரியர் கனகசபாபதி நாகேஸ்வரன் காலமானார்

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ் பேராசிரியர் கனகசபாபதி நாகேஸ்வரன் நேற்று (14) காலமானார்.

நயினாதீவைப் பிறப்பிடமாகக்கொண்ட அமரர் நாகேஸ்வரன் மகாஜன கல்லூரியில் ஆரம்பக் கல்வியைக் கற்றுள்ளார். தலைசிறந்த தமிழ் புலமையும் ஆன்மீக வளமும் கொண்ட வாகீசகலாநிதி பேராசிரியர் கனகசபாபதி நாகேஸ்வரன் பன்முக ஆளுமைமிக்கவரும் சிறந்த பேச்சாளருமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் தொடர்பாக பின்னர் அறிவிக்கப்படுமென அவர்களது உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (ஸ)

# கொலம்தொட்ட சரசவி உயன வீட்டுத் திட்டம் இன்று பிரதமரினால் அங்குரார்ப்பணம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டத்தின் மேலும் ஒரு முன்னெடுப்பாக 800 பல்கலைக்கழக மாணவர்களுக்கான வதிவிட வசதி மற்றும் வீட்டு தேவையுடையவர்களுக்கான 528 புதிய வீடுகளைக் கொண்ட கொலம்தொட்ட சரசவி உயன வீடமைப்புத் திட்டம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினால் மக்களுக்கு இன்று கையளிக்கப்படவுள்ளது.

இராஜாங்க அமைச்சர் கலாநிதி நாலக்க கொடஹேவாவின் அழைப்பின்பேரில் அமைச்சர்களான தினேஷ் குணவர்தன, பவித்ரா தேவி வன்னியாரச்சி, இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பொதுஜன பெரமுனவின் கொழும்பு கிழக்கு தொகுதி அமைப்பாளர் நகர சபை உறுப்பினர் சுனந்த லியன பத்திரன ஆகியோர் நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர்.(ஸ)



கொழும்பு மாவட்ட மனித உரிமைகள் அமைப்பின் 14 ஆவது ஆண்டு விழா அண்மையில் கொழும்பு10இல் அமைந்துள்ள செரண்டிப் பங்கியூட் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட கொழும்பு மாநகரசபை உதவிமேயர் எம்.ரி.எம்.இக்பால் மங்கள விளக்கேற்றி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைப் பதை படத்தில் காணலாம்.

# பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாண சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வதாக இல்லையா?

(லோரன்ஸ் செல்வநாயகம்)

அமைச்சரவையில் முக்கிய கலந்துரையாடல்

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாணும் வகையில் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டியது அவசியமென அமைச்சரவை அமைச்சர்கள் பலரும் யோசனை தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் அலரி மாளிகையில் கூடிய அமைச்சரவை கூட்டத்தின் போது, அமைச்சர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

இம்முறை அமைச்சரவையில் நாட்டின் பொருளாதார நெருக்கடி தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் அதுதொடர்பில் நீண்ட கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன. அதற்கிணங்க சர்வதேச நாணய நிதியத்தில் கடன் பெற்றுக்கொள்வது தொடர்பில் அமைச்சர்கள் பலரும் கருத்துக்களை தெரிவித்துள்ள நிலையில் இன்னும் சில அமைச்சர்கள் சர்வதேச நாணய நிதியத்திடம் சென்றால் அதன் நிபந்தனைகளுக்கு இணங்க நேரும் என தெரிவித்துள்ளனர். அதற்கிணங்க சர்வதேச நாணய நிதியத்திடம் செல்லாமல் நட்பு நாடுகளிடம் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வது மிகவும் பொருத்தமானது என சில அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர். எவ்வாறாயினும் சர்வதேச நாணய நிதியத்தில் கடன் பெற்றுக்கொள்வதா, இல்லையா என்பது தொடர்பில் இம்முறை அமைச்சரவை எந்த இணக்கப்பாடும் காணப்படவில்லை.

## சமூகத்தைக் காட்டிக் கொடுக்கும்... 03ஆம் பக்க தொடர்...

இக்கட்சிகளோடு நடந்த பேச்சுவார்த்தைகளில் தானும் ஈடுபட்டதால் அல்லாஹ் மீது ஆணையாக இதனை உறுதிப் படுத்துவதாக 20க்கு ஆதரவாக வாக்களித்த பாராளுமன்ற உறுப்பினர்களும் மற்றும் பலரும் கலந்து கொண்ட கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் தமது பாராளுமன்ற உறுப்பினர்கள் 20 க்கு ஆதரவாக வாக்களித்ததற்கும் தங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லையென்று கூறி வருகின்றனர். அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

தங்களது சுயநலத்துக்காக சமுகத்திற்கு அவப்பெயரை உருவாக்குவதை இந்த முஸ்லிம் கட்சிகள் முதலில் கைவிட வேண்டும்.

தேர்தல் மேடைகளில் ராஜபக்ஷ குடும்பத்திற்கும், மொட்டுக்கட்சிக்கும் திட்டித்தீர்த்து தான் இக்கட்சிகள் ஆசனங்களைப் பெற்றன. அப்போது கசப்பாக இருந்த மொட்டுக் கட்சியும், ராஜபக்ஷ குடும்பமும் இப்போது இனிப்பதற்கு காரணம் என்ன என்பதை சகல மக்களுக்கும் இவர்கள் தெளிவு படுத்த வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

## தீர்வுகாணும் சுற்றுநிருபம்... 03ஆம் பக்க தொடர்...

தீர்வுபெற்றுக்கொடுக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதுதொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில், ஆசிரியர் அதிபர்களின் சம்பள முரண்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் அவர்களது ஆவணங்கள் மற்றும் தகவல்கள் வலய அலுவலகங்கள் ஊடாக கல்வியமைச்சுக்கு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என அமைச்சர் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக்கு தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க, குறித்த விபரங்கள் கிடைத்தவுடன் சம்பள முரண்பாட்டுக்கு தீர்வுகாணும் சுற்றுநிருபத்தை வெளியிடுவதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஸ)

## ஹம்பாந்தோட்டை சர்வதேச சேவை... 03ஆம் பக்க தொடர்...

துறைமுக குழுமத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி ஜோன்சன் லியூ பிரதமரிடம் சுட்டிக்காட்டினார்.

இந்தியாவின் சென்னை, முந்த்ரா, எனோர், தென்கொரியாவின் குன்சான், பியொங்டெக் மற்றும் ஜப்பானின் ஒசாகா, கொபே மற்றும் நகோயா ஆகிய துறைமுகங்களிலிருந்து பரிமாற்றல் நடவடிக்கைக்காக ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வாகனங்கள் கொண்டு வரப்பட்டதுடன், தென்னாபிரிக்காவின் டர்பன், மெக்சிகோவின் வெரக்ரஸ், அமெரிகாவின் சென் அன்டோனியோ, நெதர்லாந்தின் ரொடர்டேம் மற்றும் பிரான்சின் லே ஹெவரே ஆகிய துறைமுகங்களுக்கு இவ்வாகனங்கள் மீளேற்றப்பட்டன. துறைமுக வளாகத்திலுள்ள கைத்தொழில் வலயத்தில் நிர்மாணிக்கப்படும் ஷென்ஷென் ஷின்ஜி குழுமத்திற்கு (Shenzhen Xinji Group) சொந்தமான "பிரினிமி" (Plug and Play) "மண்டலத்தினுள் மண்டலம்"(Park in Park) எனும் எண்ணக்கருவில் செயற்படுத்தப்படும் மின்னணு சாதன உற்பத்தி வலயம் மற்றும் சிலோன் டயர் உற்பத்தி தனியார் நிறுவனத்தினால் நிர்மாணிக்கப்படும் டயர் உற்பத்தி தொழிற்சாலை வளாகம் பிரதமரின் விசேட கவனத்திற்கு உட்படுத்தப்பட்டது. டயர் உற்பத்தி தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைக்கான மூலப்பொருட்களும், மனித வளமும் உள்நாட்டிலிருந்தே பெறப்படுகின்றன. 55.8 ஹெக்டேயர் பரப்பளவிலான டயர் உற்பத்தி தொழிற்சாலையின் நிர்மாணப் பணிகளுக்காக இரண்டு கட்டங்களாக முன்னெடுக்கப்படும் முதலீடு 600 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

ஹம்பாந்தோட்டை முறைமுகம் இதுவரை அடைந்துள்ள முன்னேற்றம் தொடர்பிலும், எதிர்கால அபிவிருத்தி வேலைத்திட்டம் குறித்தும் இதன்போது ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுக குழுமத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி ஜோன்சன் லியூ வினால் பிரதமருக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுக குழுமத்தினால் லுணுகம் வெஹெர கிராமத்தை "எதிர்பார்ப்பின் கிராமமாக" அபிவிருத்தி செய்வதற்கான வேலைத்திட்டத்தின் அரச பத்திரம் அமைச்சர் சமல் ராஜபக்ஷ மற்றும் ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுக குழுமத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி ஜோன்சன் லியூ ஆகியோரிடையே பரிமாற்றிக் கொள்ளும் செயற்பாடும் இதன்போது இடம்பெற்றது.

## கொழும்பில் இன்று முதல்... 03ஆம் பக்க தொடர்...

பின்னர் இந்த பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இரண்டாவது தடுப்பூசியைப் பெற்றுக்கொண்ட பின்னர் நபரொருவர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி இருப்பாராயின் அவருக்கு வைரஸ் தொற்று ஏற்பட்டதில் இருந்து ஆறு மாதங்களின் பின்னர் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(ஸ)

## மின்சாரசபை தலைமை... 03ஆம் பக்க தொடர்...

கொடுப்பனவுகளை, பதவி உயர்வு, சம்பள உயர்வு போன்றவற்றை ஒரு சிறந்த முறையான திட்டத்தின் ஊடாக அமுல்படுத்தல், இலங்கை மின்சார சபையின் சொத்துக்களை இரகசியமாக வெளிநாடுகளுக்கு கையளித்து கைச்சாத்திடுவதை உடன் நிறுத்துமாறும் கோரும் 13க்கும் மேற்பட்ட கோரிக்கைகளை முன்வைத்து இலங்கை மின்சார ஊழியர்கள் இணைந்து ஆர்ப்பாடத்தில் ஈடுபட்டனர்.

## சட்டத்தில் திருத்தம் செய்ய... 03ஆம் பக்க தொடர்...

சட்டத்தின் 281 ஆம் உறுப்புரையில் உட்சேர்க்கப்படவில்லை. அதனால், நிலவுகின்ற நிச்சய மற்ற தன்மையை நீக்குவதற்காக குற்றவியல் வழக்குக் கோவைச் சட்டத்தில் இத் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமென இனங்காணப்பட்டுள்ளது. அதற்கமைய, குற்றவியல் வழக்குக் கோவைச் சட்டத்தின் 281 ஆவது உறுப்புரையை திருத்தம் செய்வதற்காக நீதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## பொருளாதாரத்திலிருந்து மீள...

இப்போது மிகக் குறைவான வெளிநாட்டு கையிருப்பே எம்முடம் உள்ளது. 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என்ற மிகக்குறுகிய தொகையே எமது கையிருப்பில் வைத்துக்கொண்டு பொருளாதாரத்தை இயக்க முடியாது.

அடுத்த ஆண்டு ஜனவரி 18 ஆம் திகதி 500 பில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக செலுத்த வேண்டியுள்ளதுடன், அடுத்த கட்டங்களில் அதிகளவான கடன்களை செலுத்த வேண்டியுள்ளது.

ஆகவே இப்போது உள்ள நிலைமைகளை அவதானிக்கும்போது இந்தியா அல்லது சீனா எமக்கு ஏதேனும் உதவிகளை செய்தாலே தவிர வேறு எந்தவொரு வழியிலும் எம்மால் மீள முடியாது என்றும் அவர் கூறினார்.

## மக்கள் பாவனைக்கு...

தலைவர் ஜாலிய ஓபாத்தவுக்கு நகரசபையின் சுகாதார பிரிவின் அதிகாரியொருவினால் வழங்கப்பட்ட தகவல் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளை அடுத்து இந்த சீனி தொகை மற்றும் அந்த களஞ்சியசாலையின் உரிமையாளர் தொடர்பில் தம்புள்ளை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. எதிர்வரும் பண்டிகை காலத்தில் இந்த சீனித் தொகையை நாடு முழுவதும் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததாகவும் நகர சபை தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் சீனி தட்டுப்பாடு ஏற்பட்டிருந்த காலத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இந்த சீனித் தொகையை எலி மற்றும் பூச்சியினங்கள் நாசப்படுத்தியுள்ளதுடன் சீனி அடைக்கப்பட்டிருந்த பைகள் உக்கிய நிலையில் ஈரப்பதத்துடன் இருந்துள்ளது. இந்த சீனியின் ஒரு தொகையானது, மக்கள் பாவனைக்கு பொறுத்தமற்ற நிலையில் இருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்டுள்ள இந்த சீனியை டுபாயிலிருந்து கொண்டுவந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. சீனியை நகரசபை அதிகாரிகள் கைபற்றிய போது அவை தரையில் வைத்து எந்தவொரு சுகாதார வழிமுறைகளுமின்றி மீண்டும் பொதி செய்யப்பட்டுக் கொண்டிருந்ததாகவும் நகரசபைத் தலைவர் தெரிவித்தார்.

## தடுப்பூசி அட்டையை...

தற்போது வழங்கப்பட்டுள்ள தடுப்பூசி அட்டை எடுத்துச் செல்வதற்கு ஏற்றதல்ல. ஒரு தரவுத்தளத்தில் தகவல் சேர்க்கப்படும் வரை மற்றும் QR குறியீடு அமைப்பு அறிமுகப்படுத்தப்படும் வரை தடுப்பூசி அட்டையை கவனமாக பயன்படுத்த வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார். எதிர்காலத்தில் கையடக்கத் தொலைபேசி ஊடாக இந்த முறைமையைப் பெற்றுக்கொள்ள முடியும். இதற்கமைய , தடுப்பூசி அட்டையை லெமினேட் செய்வதைத் தவிர்க்கு மாறும் அவர் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

## 14,661 ஆக அதிகரிப்பு...

உறுதிப்படுத்தியுள்ளார். அதன்படி, நாட்டில் கொவிட்19 தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 14,661 ஆக அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை, கொரோனா தொற்றிலிருந்து மேலும் 335 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, இதுவரை கொரோனா தொற்றிலிருந்து பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 545,768 ஆக அதிகரித்துள்ளது.

இந்நிலையில், நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 5,75,432 அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

## முதலைக் கண்ணீர் வடித்து ...

கூட வழங்க முடியாதவர்கள் மக்கள் சார்பாக முதலைக் கண்ணீர் வடித்து ஆட்சியைக் கைப்பற்ற கனவு காண்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## அதிகரிக்கும் டெங்கு நோய்...

நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

டெங்கு நோய்த் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டை நிரந்தரமாக மேற்கொண்டு செல்வதற்கு அனைத்து நிறுவனத்திலும் அதற்கென ஒரு அலுவலரை நியமித்தல்.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் விடயங்களை மீளாய்வு செய்து தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

டெங்கு நோய்த் தடுப்பு தொடர்பாக மாகாண, மாவட்ட, பிரதேச மற்றும் கிராமிய மட்டத்திலான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளின் பொறுப்புக்களை ஆளுநர்களுக்கு ஒப்படைத்தல்.

டெங்கு நோய்த் தடுப்பு தொடர்பாக தற்போது காணப்படும் சட்ட ஒழுங்குகளை தரவுப்படுத்தல்.

டெங்கு நோய்த் தடுப்பு தொடர்பாக அனைத்துச் செயற்பாடுகளையும் ஒருங்கிணைப்பு செய்வதற்கான பொறுப்பை தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவுக்கு ஒப்படைத்தல்.

முன்னர் காணப்பட்ட குடியிருப்பாளர் பட்டியலுக்குப் பதிலாக 'இலத்திரனியல் கிராம அலுவலர்' கருத்திட்டத்தின் தரவுத் தொகுதியைப் பயன்படுத்தல் என்பனவற்றுக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது.

## அபகரித்த நகைகளை...

அப்பெண் பின் தொடர்ந்துள்ளார். சிறிது தூரம் சென்ற பின்னர் ஆள் நடமாட்டம் அற்ற பிரதேசம் ஒன்றில் வைத்து பெண்ணிடமிருந்த பணம் , தங்க ஆபரணங்கள் உள்ளிட்டவற்றை அந்நபர் பறித்துச் செல்ல முற்பட்டுள்ளார்.

இதன்போது அந்த நபரிடம், தான் 03 பிள்ளைகளின் தாய் என்பதோடு , கணவனின்றி பிள்ளைகளுடன் தனியாகவே வசித்து வருவதாகவும் அப்பெண் தெரிவித்துள்ளார். கணவன் இல்லாததால் குடும்ப பொறுப்பு முழுவதையும் தானே சுமப்பதாகவும் மிகுந்த அசௌகரியங்களுக்கு மத்தியில் தனது மூன்று பிள்ளைகளையும் வளர்ப்பதாகவும் அப்பெண் தெரிவித்துள்ளார்.

அவரின் பின்னணியை கேட்ட அந்த திருடன் அவரிடம் பறித்த அனைத்து பொருட்களையும் அவரிடமே மீள கையளித்ததோடு , அவரை பாதுகாப்பாக பிரதான வீதி வரை அழைத்தும் வந்துள்ளார். சிறு வயது முதல் சுகபோகமாக வாழ்ந்து, வாழ்வில் உளவியல் ரீதியாகவோ பௌதீக ரீதியாகவோ எவ்வித பிரச்சினைகளுக்கும் முகங்கொடுக்காமல், இன்று நல்ல நிலையில் ஆடம்பர வாழ்க்கை வாழும் நபர்கள் கூட தமது சுய நலத்துக்காக தவறிழைக்காதவர்களைக் கூட பழிவாங்கும் இந்தக் காலத்தில், திருடன் ஒருவனிடம் இந்த மனிதாபிமானம் வெளிப்பட்டுள்ளமை ஆச்சரியமளிப்பதாக பாதிக்கப்பட்ட பெண் தெரிவித்தார்.

## இலங்கை முதலீட்டு அதிகார சபைக்கு...

பதவி விலகியதை அடுத்து இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

சஞ்சய மொஹோட்டலா உள்ளிட்ட இலங்கை முதலிட்டு அதிகார சபையின் பல அதிகாரிகள் அண்மையில் தங்களது இராஜினாமா கடிதத்தை சமர்ப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## உரிய தரம் இல்லாவிடின் கப்பலில்...

துறைமுகத்தில் நங்கூரம் இடப்பட்டுள்ள மேற்படி கப்பலில் இருந்து சமையல் எரிவாயு சிலிண்டர்களை இறக்குவதா,இல்லையா என்ற தீர்மானத்தை மேற்படி தொழில்நுட்ப குழுவினர் விரைவில் வெளியிடுவார்கள் என்றும் தெரிவித்துள்ளது.

அக்கப்பல் கடந்த சில தினங்களுக்கு முன்பு கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்ததுடன் சமையல் எரிவாயு மாதிரியானது தொழில்நுட்பக் குழுவினரால் பரிசோதனைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

அந்த பரிசோதனை முடிவுகள் தொழில்நுட்பக் குழுவின் அமர்வில் கலந்துரையாடப்பட்டு வெளியிடப்படவுள்ளது. எவ்வாறாயினும் சமையல் எரிவாயுவில் ப்ரோபேன் மற்றும் பியூடேன் உரிய தரத்தில் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டாலும் எரிவாயுவின் வாசனையை உறுதிப்படுத்த உபயோகிக்கும் மர்கெப்டான் இரசாயனம் உரிய தரத்தில் காணப்படுகின்றதா என்பது தொடர்பில் இதுவரை தகவல்கள் வெளியிடப்படவில்லை. எவ்வாறாயினும் அந்த இரசாயனம் உரிய தரத்தில் காணப்படாவிட்டால் சமையல் எரிவாயுவை கப்பலில் இருந்து இறக்குவதற்கு எத்தகைய அனுமதியும் வழங்கப்படமாட்டாது என்றும் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது. (ஸ)

## இந்தோனேஷியாவில்...

இலங்கைக்கு அது சுனாமி பாதிப்பை ஏற்படுத்தாது என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இந்தோனேசியாவிற்கு அருகிலுள்ள ப்ளோரேஷ் கடலில் 100 கிலோ மீற்றர் ஆழத்தில் நில நடுக்கம் பதிவாகியுள்ளதாகவும் அந்த நிலையம் தெரிவித்துள்ளது. அதனையடுத்து அந்த நாட்டில் சுனாமி அனர்த்த எச்சரிக்கை விடுக்கப்பட்டது. சுனாமி அனர்த்தத்தினால் ஏற்பட்ட பாதிப்புகள் மற்றும் உயிரிழப்புகள் தொடர்பில் இதுவரை தகவல்கள் வெளியிடப்படவில்லை என்றும் அந்த நிலையம் தெரிவித்துள்ளது. இந்தோனேசியாவில் இவ்வாறான நிலநடுக்க அனர்த்தங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. பூகோள எல்லையின் மேல் தட்டில் அந்த நாடு உள்ளதால் அவ்வாறு இடம்பெறுவதாக அந்த நிலையம் தெரிவித்துள்ளது.

2004 ஆம் ஆண்டு இந்தோனேசிய ஆழ்கடலில் இடம்பெற்ற பாரிய நிலநடுக்கத்தால் சுனாமி ஏற்பட்டு எமது நாடும் பெரும் பாதிப்புக்குள்ளாகியமை குறிப்பிடத்தக்கது.(ஸ)

## தமிழ் மக்களின் அபிலாசைகள்;...

தமிழ் மக்களின் அரசியல் எதிர்பார்ப்புக்கள் தொடர்பாக கேட்டறிந்த அமெரிக்க பதில் தூதுவர், தமிழ் மக்களின் அபிலாசைகள் தொடர்பாக தமிழர் தரப்புக்களிடம் ஒருமித்த கருத்து நிலவுவது முக்கியம் என்ற கருத்தை முன்வைத்தார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தமிழ் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத நியாயமான வழிமுறைகளைப் பின்பற்றுகின்ற தரப்புக்களுடன் இணைந்து செயற்படுவதற்கான சமிக்கைகளை தொடர்ந்தும் வெளிப்படுத்தி வருவதாகவும், ஆனால் ஏனைய சில தரப்புக்கள் சுயலாபங்களுக்காக மக்களுக்கு அழிவுகளை ஏற்படுத்தக் கூடிய தோற்றுப்போன வழிமுறைகளையே தொடர்ந்தும் பேசுவதாக தெரிவித்தார்.

அத்துடன் கடந்த காலங்களில் தன்னால் வெளிப்படுத்தப்பட்ட எதிர்வுகூறல்கள் சரியானது என்பதை வரலாறு நிரூபித்திருப்பதையும் சுட்டிக்காட்டினார்.

மேலும், காணாமல் போனோர் விவகாரத்திற்குப் பரிகாரம் காண்பதற்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அணுகுமுறைகள் தொடர்பாகவும் புலம்பெயர் தமிழ் மக்களுடன் பேச்சுக்களை நடத்துவதற்கு ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ ஆர்வம் வெளியிட்டுள்ளதையடுத்து, அது தொடர்பில் தன்னால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற விடயங்கள் தொடர்பாகவும் அமெரிக்கத் தரப்பிற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெளிவுபடுத்தினார்.

அதேபோன்று, கடற்றொழில் செயற்பாடுகளை விஸ்தரிப்பதற்கு மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் தொடர்பாகவும், கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளுகின்ற சவால்கள் தொர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன் அமெரிக்காவின் உதவித் திட்டங்கள் பற்றியும் அவற்றின் அவசியம் பற்றியும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அமெரிக்காவின் இலங்கைக்கான பதில் தூதுவருடன் கலந்துரையாடினார்.

## இறக்குமதிக்கு மேலும்...

உணவுப் பொருட்கள் மற்றும் கைத்தொழில்களுக்கான உள்ளீடுகளை இறக்குமதி செய்வதற்கு முன்னுரிமை வழங்கப்படுமென்றும் நிதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம் டொலர் பற்றாக்குறையை தவிர்க்க இந்தியா, ஜப்பான், சீனா உள்ளிட்ட நட்பு நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும், அந்நாடுகளிடமிருந்து சாதகமான பதில் கிடைக்குமென நம்புவதாகவும் அவர் கூறினார்.

தனது அண்மைய விஜயத்தின் போது இந்திய அரசாங்கத்துடன் நடத்தப்பட்ட கலந்துரையாடல் வெற்றியடைந்ததாகத் தெரிவித்த அமைச்சர் பசில் ராஜபக்ஷ, சர்வதேச நாணய நிதியத்துடனும் (IMF) தற்போது கலந்துரையாடல்கள் நடைபெற்று வருவதாகத் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வெளிநாடு சென்றுள்ள நிலையில், நாட்டில் நீண்டகாலமாக நிலவும் டொலர் தட்டுப்பாடு குறித்து கலந்துரையாடுவதற்காக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அமைச்சரவைக் கூட்டம் நேற்று முன்தினமிரவு அலரிமாளிகையில் நடைபெற்றுள்ளது. இதன்போதே மேற்கண்ட விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

## பச்சை மிளகாயின் விலை...

ஒரு கிலோ பச்சை மிளகாய் மொத்த விலை 680 – 700 ரூபாவாக இருந்ததாகத் தெரிவித்தார். இடைத்தரகர்கள் விலையை அதிகரிப்பதால் நுகர்வோர்மேலும்பாதிக்கப்படுகிறார்களெ அவர் மேலும் தெரிவித்தார்.

மசகு எண்ணெய், உராய்வு நீக்கிய எண்ணெய்;

# முறைப்பாடுகள், பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை

## அமைச்சர் உதய கம்மன்பில

மசகு எண்ணெய் மற்றும் உராய்வு நீக்கிய எண்ணெய் கைத்தொழில் துறை தொடர்பான முறைப்பாடுகளையும் பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பதற்கு பெற்றோலிய அமைச்சும் இலங்கை பொது மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழுவும் இணைந்து கட்டமைப்பொன்றை ஸ்தாபித்துள்ளது. இது தொடர்பிலான முறைமையொன்று அமைச்சர் உதய கம்மன்பில தலைமையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான வைபவத்தில் உரையாற்றிய அமைச்சர் உதய கம்மன்பில, தரங்குறைந்த பெற்றோல், மண்ணெண்ணெய் மற்றும் டீசல் என்பன தொடர்பில் எதிர்கொள்ளும் அசௌகரியங்கள் குறித்து எவரிடம் முறைப்பாடு செய்வது மற்றும் இவற்றின் தரம் குறித்து கண்காணிக்கும் பொறுப்பு எவரிடமுள்ளது என்பன தொடர்பில் மக்கள் அங்கலாய்த்துக் கொண்டிருந்தனர். இதற்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் இந்த ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கை பொதுமக்கள் பயன்பாட்டு ஆணைக்குழு சுதந்திரமான ஒழுங்குபடுத்தல் நிறுவனமாக விளங்குவதால் தரக்கட்டுப்பாடு தொடர்பிலான நடவடிக்கைகளை இந்த ஆணைக்குழுவுக்கு வழங்குவதன் ஊடாக பொதுமக்களுக்கு மாத்திரமல்லாமல் பெற்றோலிய எண்ணெய்கள் சேவை வழங்குனர்களுக்கும் வெற்றிகரமான நிலைமை கிடைக்கப்பெறும் என்றார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய பொதுமக்கள் பயன்பாட்டு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தமிதா குமாரசிங்க, 'பெற்றோலியம் மற்றும் உராய்வு நீக்கிய எண்ணெய் தொடர்பிலான முறைப்பாடுகளை சமர்ப்பிப்பதற்கு மாத்திரமல்லாமல் தீர்வுகளை இரண்டு கட்டங்களில் பெற்றுக்கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

முதலில் சேவை வழங்குனரின் ஏற்பாட்டின் ஊடாக முறைப்பாட்டுகளுக்கு தீர்வு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அதற்குரிய சாத்தியப்பாடு காணப்படாத சந்தர்ப்பங்களில் சேவை வழங்குனரையும் சில சந்தர்ப்பங்களில் நியமிக்கப்படும ஒழுங்குபடுத்துனரையும் கொண்டு தீர்வு தேடப்படும்' என்றார்.




# உள்ளூராட்சித் திணைக்களம் வடக்கு மாகாணம்

## 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் கீழான கூட்ட அறிவித்தல்

வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராகிய மரியதாஸ் பற்றிக் டிறஞ்சன் ஆகிய என்னால் 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் 66(எ) பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் வடக்கு மாகாணத்திற்குள் அமைந்துள்ள வவுனியா வடக்கு பிரதேச சபையின் வெற்றிடமாகவுள்ள தவிசாளரை தேர்ந்தெடுப்பதற்கான கூட்டம் 2021.12.22 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு வவுனியா வடக்கு பிரதேச சபையின் மண்டபத்தில் கூட்டப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

**மரியதாஸ் பற்றிக் டிறஞ்சன்,**
**உள்ளூராட்சி ஆணையாளர்,**
**வடக்கு மாகாணம்**

**உள்ளூராட்சித் திணைக்களம்,**
**வடக்கு மாகாணம்,**
**முதியோர் இல்ல வளாகம்,**
**A9 வீதி, கைதடி, யாழ்ப்பாணம்.**
**14.12.2021**

## 2022ஆம் வருடத்திற்காக வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2022ஆம் வருடத்தினுள் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்படும் வழங்கல்கள் மற்றும் சேவைகளை நிறைவேற்றுவதற்கு விரும்பும் வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. ஒரு விண்ணப்பத்திற்காக 1500.00 ரூபா தொகை அறவிடப்படுவதுடன் தம்மால் சுயமாகத் தயாரித்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பத்தின் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்பங்களை தலைவர், அக்குரணை பிரதேச சபை, அலவத்துகொட என்ற முகவரிக்கு 2021.12.31ஆம் திகதி அல்லது அதற்கு முன் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'வழங்குநர்களைப் பதிவு செய்தல் 2022' என்று குறிப்பிடுதல் வேண்டும்.
02. சகல காசோலைகள் மற்றும் காசுக் கட்டளைகளிலும் செயலாளர், அக்குரணை பிரதேச சபை, அலவத்துகொட எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.
03. வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதி மற்றும் உங்களால் வழங்கப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் தரம் மற்றும் ஆளடையாளம் பற்றிய ஏனைய ஆவணங்களையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
04. உங்களிடம் பொருட்கள் மற்றும் சேவைகளை கோரும்போது விலைமனுக்களைச் சமர்ப்பிக்காத, கட்டளை வழங்கப்படும் போது வழங்கல்களை மேற்கொள்ளாத, குறித்த நேரத்திற்கு மற்றும் குறித்த தரத்திற்கு அமையாத வழங்குநர்கள் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படுவர்.
05. பதிவு செய்துள்ள வழங்குநர்களின் பட்டியலிலிருந்து விலைகளைக் கோரி குறித்த பொருட்கள் மற்றும் சேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் உரிமையை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
06. சகல வழங்கல்கள் மற்றும் சேவைகளின் விலைகளும் 06 மாத காலம் செல்லுபடியாதல் வேண்டும்.
07. மேலதிக விபரங்களுக்கு 066-2244387 என்ற தொலைபேசி இலக்கத்தில் அலுவலக நேரங்களில் தொடர்புகொண்டு விசாரித்து அறியலாம்.

| தொடர் இல. | வழங்கல் விபரம் |
|---|---|
| 01 | சகல அலுவலக காகிதாதிகள் |
| 02 | அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள், உருக்கு தளபாடங்கள் |
| 03 | கணனி, புகைப்படப் பிரதி இயந்திரங்கள், அச்சுப்பொறிகள், தொலைநகல், கைவிரல் ரேகை பதிவு இயந்திரம், டுப்ளோ இயந்திரம், சகல டோனர் வகைகள் மற்றும் கணனி துணைப்பாகங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் |
| 04 | வீதி விளக்கு உபகரணங்கள் மற்றும் அலுவலக மின் உபகரணங்கள் |
| 05 | விளையாட்டுப் பொருட்கள் |
| 06 | சீருடைகள், திரைச்சீலைகள், மேசைத் துணிகள், பாதணிகள், காலுறைகள், அலுவலக பைகள், உத்தியோகபூர்வ இலச்சினைகள் |
| 07 | நிர்மாண இயந்திர உபகரணங்கள் |
| 08 | நிர்மாணப் பொருட்கள் (சீமெந்து, கருங்கல், மணல், செங்கல், கூரைத்தகடு, சிறுகல், நிறப்பூச்சுகள், குழாய்கள், ஜீ.ஐ. குழாய்கள், இரும்பு போன்றன) பிவிசி நீர்க்குழாய் மற்றும் துணைப்பாகங்கள், சகல வகையான கொங்கிறீட் உற்பத்திகள் (ஹியூம் குழாய்கள், கம்பித்தூண், புளொக்கல், தரையில் பதிக்கும் கற்கள்) |
| 09 | வாகன உதிரிப்பாகங்கள் (டயர், டியூப், பெற்றரி, எண்ணெய் வகைகள், ஏனைய உதிரிப்பாகங்கள், மீட்டர்) |
| 10 | சுகாதார மற்றும் துப்புரவேற்பாட்டு சேவைகளுக்கு தேவையான பொருட்கள் (தும்புத்தடி, விளக்குமாறு, தூரிகை, சவர்க்காரம். கையுறை, கிருமிநாசினி, மழை அங்கி, கம்பூட்ஸ், வாய்க்கவசம் போன்றன) |
| 11 | வாகனங்களை சேர்விஸ் செய்தல் |
| 12 | வீதிப்பராமரிப்பு மற்றும் வேலைத்தள உபகரணங்கள் (மண்வெட்டி, சவல், ரேக்கை, கத்தி, அளவை பட்டி போன்றன) |
| 13 | ஆயுர்வேத ஔடதங்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் |
| 14 | தீயணைப்பு மற்றும் பாதுகாப்பு துணைப்பாகங்கள், உபகரணங்கள் |
| | **சேவைகள்** |
| 15 | வாகன இயந்திராதிகளை வாடகைக்கு வழங்குதல் |
| 16 | அச்சு வேலைகள் (புத்தகம், ஆவணங்கள், படிவங்கள், பில் புத்தகங்கள், சுவரொட்டிகள், அலுவலக அடையாள அட்டைகள்) |
| 17 | பட்டறை வேலைகள் |
| 18 | நில அளவை, சட்டம் மற்றும் ஆலோசனை சேவைகள் |
| 19 | சிங்கள, ஆங்கில, தமிழ் மொழி பெயர்ப்புச் சேவைகள் |
| 20 | அலுவலக உபகரணங்களின் திருத்தவேலைகள் |
| 21 | கணனி, அச்சுப்பொறி, தொலைநகல், புகைப்படப் பிரதி இயந்திர திருத்தவேலைகள் |
| 22 | உருக்கியொட்டும் வேலைகள், மேசன் வேலைகள், நீர்க்குழாய், பட்டறை சேவைகள், தொழில்நுட்ப சேவைகள், உள்ளக தொலைபேசி சேவைகள் |
| 23 | வாகன திருத்தவேலைகள், கடைசல் இயந்திர வேலைகள், வாகன சேவைகள் வழங்குதல் |
| 24 | உத்தியோகபூர்வ முத்திரை, திகதி முத்திரை, நினைவுப் படிகம் தயாரித்தல், டிஜிட்டல் அறிவித்தல் அச்சிடல் மற்றும் பொருத்துதல் |
| 25 | அபாயகரமான மரங்கள் வெட்டுதல் |
| 26 | உணவு வழங்குதல் |
| 27 | உற்சவப் பொருட்கள் (கெனபி கூடாரங்கள், உணவை பாதுகாக்கும் தொகுதிகள், நெஸ்கபே இயந்திரம், உணவுத் தட்டுகள், கண்ணாடிக் குவளைகள் போன்றன) |
| 28 | ஒப்பந்தக்காரர்களின் பொருட்டு<br>01. 50,000.00 ரூபா வரை ரூபா 1,000.00<br>02. 50,0001.00 முதல் 100,000.00 ரூபா வரை ரூபா 1,250.00<br>03. 100,001.00 முதல் 500,000.00 ரூபா வரை ரூபா 1,500.00<br>04. 500,001.00 முதல் 1,000,000.00 ரூபா வரை ரூபா 2,500.00<br>05. 1,000,000.00 முதல் 2,000,000.00 ரூபா வரை ரூபா 5,000.00<br>06. 2,000,000.00 ரூபாவுக்கு மேல் ரூபா 7,500.00 |

**ஐ. எம். இஸ்திகார்,**
**தலைவர்**
**அக்குரணை பிரதேச சபை**
**அலவத்துகொடை.**

## அதிநவீன, உயர் தொழில்நுட்ப Huawei MatePad T 10s தற்போது இலங்கையில் கிடைக்கிறது

முன்னணி தொழில்நுட்ப தீர்வுகளின் வழங்குநரான Huawei, ஒரு ஒப்பிட முடியாத டெப் சாதனமான Huawei MatePad T 10s இனை உள்ளூர் நுகர்வோருக்காக தற்போது வழங்குகின்றது. மிக இலகுரக மற்றும் மெலிதான அதிநவீன வடிவமைப்பு மற்றும் உயர் தெளிவுத் திறன் கொண்ட திரையுடன் வலுவான இருப்பை அது காண்பிக்கிறது. Huawei MatePad T 10s ஆனது, 10.1 அங்குல 1920 X 1200 FHD தெளிவுத் திறன் கொண்ட திரையை, சிறிய சட்டகத்திற்கான இடத்தை பேணியவாறு கொண்டுள்ளது. இதன் மூலம் சிறந்த காட்சி வெளியீட்டினை அது வழங்குகிறது. குறிப்பாக HUAWEI ClariVu™ தொழில்நுட்பத்துடன் அது இணைக்கப்பட்டுள்ளதன் காரணமாக, அதில் அனைத்துமே தெளிவாகவும் பிரகாசமாகவும் காட்சியளிக்கின்றது. இதன் மூலம் உங்கள் கைகளில் உயிர்ப்பாக செயற்படுகிறது.

Huawei MatePad T 10s ஆனது, உயர் அலைவீச்சைக் கொண்ட இரட்டை ஸ்பீக்கர் தொகுதியுடன் கூடிய, இருபுறமும் நன்கு சமநிலையான ஒலியை விருந்தாக வழங்குகிறது. இதன் மூலம் வலுவான அல்லது ஏனைய ஒலி அமைப்புகளை பயனர்கள் பெறலாம். இதில் Harman Kardon தொழில்நுட்பம் இணைக்கப்பட்டுள்ளதால், அது ஒலியை சிறந்த தெளிவுடன் வழங்குகிறது. எனவே, திரைப்படங்களைப் பார்ப்பதற்கு மட்டுமல்லாது, கற்றல், கேமிங் போன்ற விடயங்களின் போது, ஹோம் தியேட்டர் போன்ற சினிமா ஒலி அனுபவத்தைப் பெறுவீர்கள்.

Huawei MatePad T 10s ஆனது, EMUI 10.1 octa-core chipset மற்றும் மேம்பட்ட algorithm ஆகியவற்றை இணைத்து, மேம்படுத்தப்பட்ட கிரபிக்ஸ் மற்றும் மேம்பட்ட செயல்திறனை வழங்குகிறது.




செய்திகளை பார்வையிடும்போது, வீடியோக்களைப் பார்க்கும்போது, ஒன்லைனில் ஷொப்பிங் செய்யும்போது அல்லது நீங்கள் விரும்பிய செயலிகளுக்கு இடையில் மாறும்போது, மிருதுவான மற்றும் தங்குதடையற்ற அனுபவத்தை வழங்குகிறது. Huawei App Multiplier ஆனது, சாதனம் கிடையாக உள்ள நிலையில் ஒரே செயலியின் இரண்டு விண்டோக்களை காண்பிக்க உதவுகிறது.

Huawei MatePad T 10s ஆனது TÜV Rheinland சான்றளிக்கப்பட்டு, கண்களுக்கு வசதியானது என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இது தீங்கு விளைவிக்கும் நீல ஒளியைக் குறைக்க உதவுவதுடன், உங்கள் தினசரி பயன்பாட்டிற்கு ஏற்ற வகையில் கண்களுக்கு வசதியை வழங்குகிறது. கிட்டத்தட்ட புத்தகங்களை வாசிப்பது போன்ற சுவாரஸ்யமான அனுபவத்திற்காக பயனர்கள் e-Book Mode இனை தெரிவு செய்யலாம். அத்துடன் இரவாகும் போது, பார்ப்பதற்கு இதமளிக்கும் வகையில் குறைந்த ஒளி வேறுபாடுகளுடன், அதிக மிருதுவான காட்சி விளைவைப் பெற, Dark Mode இற்கு மாற முடியும்.

**Repeat Your ad For Better Offers**

திகதி 13.12.2021 திங்கட்கிழமை www.nlb.lk உத்தியோகபூர்வ முடிவுகள் NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4615
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.8,631,320.00
ஆங்கில எழுத்து Y வெற்றி இலக்கங்கள் 3 9 5 2 4 7
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.30,139,136.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2910
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.5,527,980.00
ஆங்கில எழுத்து Z வெற்றி இலக்கங்கள் 30 59 71 75
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.79,348,257.36

Mega POWER மெகா பவர் கோடி 10
சீட்டிழுப்பு இலக்கம் 963
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,233,260.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 159,854,935.60
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து Q சுப்பர் இலக்கம் 10 வெற்றி இலக்கங்கள் 17 20 64 78

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 645
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,969,460.00
ஆங்கில எழுத்து Z வெற்றி இலக்கங்கள் 21 54 69 82
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 87,837,006.00

ஜாதிக சம்பத JATHIKA SAMPATHA
சீட்டிழுப்பு இலக்கம் : 1181
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.3,212,960.00
வெற்றி இலக்கினம் விருச்சிகம் வெற்றி இலக்கங்கள் 0 6 4 9 8 7
இப்பொழுது ஜாதிக சம்பத புதன் மற்றும் சனி கிழமைகளில் மாத்திரமின்றி திங்கள் மற்றும் வியாழக் கிழமைகளிலும் உங்களுக்கு அதிர்ஷ்டத்தை கொண்டு வருகின்றது.
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.10,900,780.40

13.12.2021 தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 611,085
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரு. 23,574,980.00
ரு. 1,000,000.00 பரிசுகள 01 ரு. 100,000.00 பரிசுகள 27

- ரூ. 5 லட்சத்துக்கு அதிகமான பரிசுகள் அரசாங்க வரி விதிகளுக்கு உட்படும்.
- பரிசு தொகையை பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமானதாகும்.
- வெற்றி பெரும் லொத்தர் சீட்டு செல்லுபடியாகும் காலமானது சீட்டிழுக்கும் தினத்தில் இருந்து 6 மாத காலம் வரையிலாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324 பெக்ஸ்: 0114 669 416
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## வடமேல் மாகாண ஆயுர்வேதத் திணைக்களத்திற்கு உலர்ந்த மூலிகைகளை வழங்குதல் – 2022

வடமேல் மாகாண ஆயுர்வேதத் திணைக்களத்தின் சார்பாக அதன் பெறுகைக்குழுத் தலைவரினால் 2022.03.01ஆம் திகதி முதல் 2023.02.28ஆம் திகதி வரையான காலப்பகுதிக்காக உலர் மூலிகைகளை வழங்குவதற்காக 2022.01.05ஆம் திகதி மு.ப. 10.00 வரை முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இத்தால் கோரப்படுகின்றன.

02. உலர்ந்த மூலிகைகளின் வகைகள் மற்றும் கட்டளையிடப்பட வேண்டிய அளவு விபரங்கள் விலைமனுப் படிவங்களுடன் வழங்கப்படும்.
03. குருநாகல் - கொழும்பு வீதி, வடமேல் மாகாண ஆயுர்வேதத் திணைக்களத்தின் நிதி உதவியாளருக்கு 2021.12.15ஆம் திகதி முதல் 2022-01-04ஆம் திகதி வரை 1,500.00 ரூபாவிற்கான மீளளிக்கப்படாத கட்டணம் மற்றும் ரூபா 2,5000.00 ரூபாவிற்கான மீளளிக்கப்படும் வைப்பொன்றைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டுக்களை சமர்ப்பித்து வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
04. 2021.12.29ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு விலைமனு முன்னோடி சந்திப்பு இவ்வலுவலகத்தில் நடைபெறும்.
05. முத்திரையிடப்பட்ட விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறைகளின் இடது பக்க மேல் மூலையில் "உலர்ந்த மூலிகைகளை வழங்குவதற்கான விலைமனு - 2022" என்று குறிப்பிட்டு, விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினமான 2022.01.05ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்னர் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்புவதற்கு அல்லது குறித்த முகவரியில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.
06. 2022.01.05ஆம் திகதி மு.ப. 10.10 மணிக்கு இவ்வலுவலகத்தில் விலைமனுத் திறக்கப்படும் என்பதுடன் அவ்வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் சமுகமளித்திருக்கலாம்.
07. இவ்விலைமனுக் கோரல் தொடர்பான மேலதிக விபரங்கள் மற்றும் தெளிவுபடுத்தல்களை 037-2228408 எனும் இலக்கத்தை தொடர்புகொண்டு மாகாண ஆயுர்வேத ஆணையாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**எஸ்.எம்.ஏ.ஆர். செனெவிரத்ன**
**பெறுகைக்குழுத் தலைவர்,**
**வடமேல் மாகாண ஆயுர்வேத ஆணையாளர்,**
**வடமேல் மாகாண ஆயுர்வேத ஆணையாளர் அலுவலகம்,**
**குருநாகல்.**

NSB
தேசிய சேமிப்பு வங்கி

# கேள்வி அறிவித்தல்

## தலைமையலுவலக கட்டிடம் மற்றும் உத்தியோகபூர்வ பங்களாக்களுக்கான சுகாதார சுத்திகரிப்பு சேவைகள் – 2022 – 2023

தேசிய சேமிப்பு வங்கியின் சுகாதார சுத்திகரிப்பு சேவைகளுக்காக தேசிய சேமிப்பு வங்கி கோர்ப்ரேட் பெறுகைக் குழுத் (உயர் மட்டம்) தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வார்.

**ஆகக் குறைந்த தகுதித்தன்மை தேவைப்படுத்தல்கள் பின்வருமாறு:**

(அ) அரசாங்க அல்லது புகழ்வாய்ந்த தனியார் துறை நிறுவனங்களில் நிகரான தன்மையில் சுகாதார துப்புரவேற்பாட்டில் ஆகக் குறைந்தது 3 வருட அனுபவம்.

(ஆ) அரசாங்கத்திற்கு அல்லது புகழ்வாய்ந்த தனியார் துறை நிறுவனத்திற்கு உரிமையுள்ள ஒரு கட்டிட இடப்பரப்பில் நாளொன்றிற்கு பணியாற்றும் சுகாதார சுத்திகரிப்பாளர்களின் எண்ணிக்கை கடந்த மூன்று (03) வருட காலப்பகுதிக்கு ஆகக் குறைந்தது 40 நபர்களாகவும் இன்னொரு இரு மாடி கட்டிட இடப்பரப்பில் நாளொன்றிற்கு அதே காலப்பகுதியில் ஆகக் குறைந்தது 35 சுகாதார சுத்திகரிப்பாளர்கள் பணியாற்றல் வேண்டும்.

(இ) தேசிய சேமிப்பு வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட புகழ்வாய்ந்த வங்கியொன்றிலிருந்து 2,000,000 ரூபா பெறுமதியான ஆகக் குறைந்த கடன் வசதி.

மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமான 5,000 ரூபாவை பெற்றுக் கொண்ட பின்னர் வங்கியின் பொறியியலுக்கான உதவி பொது முகாமையாளரினால் விபரக்குறிப்புக்கள் மற்றும் கேள்வி ஆவணங்கள் ஆகியன வழங்கப்படும்.

தேசிய சேமிப்பு வங்கியின் தலைமையலுவலக கிளையில் ரொக்கப் பணத்தில் மேலே சுட்டிக்காட்டியவாறு 2021.12.15 ஆம் திகதியிலிருந்து 2022.01.04 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் பி.ப. 3 மணி வரையும் தேசிய சேமிப்பு வங்கியின் பொறியியலுக்கான உதவி பொது முகாமையாளரிடமிருந்து அவரது அலுவலகத்தில் கேள்வி ஆவணங்களை இலவசமாக பரீட்சித்த பின்னர், அவைகளை பெற்றுக் கொள்ளலாம்.

முத்திரையிடப்பட்ட கேள்விகள் பதிவுத் தபாலில் தலைவர், (கோர்ப்பரேட் பெறுகைக்குழு - உயர் மட்டம்), பொறியியலுக்கான உதவி பொது முகாமையாளர் மே/பா, தேசிய சேமிப்பு வங்கி, 255, காலி வீதி, கொழும்பு-03 என்ற முகவரிக்கு 2022.01.05 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக அவருக்கு கிடைக்கும் வகையில் பொறியியலுக்கான உதவி பொது முகாமையாளர், இடப்பரப்பு பிரிவு, தேசிய சேமிப்பு வங்கி என்ற முகவரியில் நேரடியாக ஒப்படைக்கப்படல் வேண்டும்.

கேள்விகள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படுமென்பதுடன் அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் இந்நிகழ்வில் பங்குபெறுவதற்காக அனுமதிக்கப்படுவார். எந்தவொரு தெளிவுறுத்தல்களுக்கும் தயவுசெய்து வங்கியின் பொறியியலுக்கான உதவி பொது முகாமையாளருடன் 2573928 என்ற தொலைபேசியூடாக தொடர்பு கொள்ளவும்.

**தலைவர்,**
**கோர்ப்பரேட் பெறுகைக் குழு உயர் மட்டம்,**
**தேசிய சேமிப்பு வங்கி,**
**255, காலிவீதி,**
**கொழும்பு-03.**

கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூளவள முகாமை திணைக்களம்
கரையோர பாதுகாப்பு மற்றும் தாழ்நில அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு

# விலை மனுக்கோரல் (IFB)

## 250 ஜியோ பைகளை (Geo bags) வழங்குதல்

(ஒப்பந்த இலக்கம் : CCD/CD/2021/83)

1. கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூளவள முகாமை திணைக்களத்தின் கொள்முதல் குழுத் தலைவரினால் 250 ஜியோ பைகளை (Geo bags) வழங்குவதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.
2. மனுக்கோரலானது தேசிய மனு கோரல் போட்டி (NCB) முறைக்கமைய நடைபெறும்.
3. ஒப்பந்தத்தினை பெற்றுக்கொள்ள தகுதியான மனுதாரரின் பெயர் திணைக்களத்தில் அல்லது வேறு ஏதேனும் அரச திணைக்களங்களில் கருப்புப்பட்டியலில் இடம்பெறாதிருத்தல் வேண்டும்.
4. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் மேலதிக தகவல்களை சிரேஷ்ட பொறியியலாளர், (கரையோர அபிவிருத்தி) கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூளவள முகாமை திணைக்களத்தில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் தொபைபேசி இலக்கங்களினூடாக 011-2472622 / 011-2387920 வேலைநாட்களில் மு.ப.09.00 மணி முதல் பி.ப.15.30 மணி வரை பெற்றுக்கொள்ள முடியும்.
5. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் 2021.12.15 ஆம் திகதியிலிருந்து 2022.01.05 ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் மீள்செலுத்தப்படாத கட்டணமாக (ரூ.3,500.00) னை திணைக்களத்தின் கணக்காளரிடம் செலுத்துவதன் மூலம் ஆங்கில மொழியிலான மனு ஆவணத்தை பெற்றுக்கொள்ள முடியும். கட்டணம் பணமாகச் செலுத்துப்படுதல் வேண்டும்.
6. மனுவின் நகல் பிரதியினை 2022.01.06 ஆம் திகதி அல்லது அதற்கு முன் 1400 மணிக்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவு தபால் மூலம் அல்லது நேரடியாக அனுப்ப வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்த இலக்கத்தினை குறிப்பிடுதல் வேண்டும். தாமதமாக கிடைக்கப்பெறும் மனுக்கள் நிராகரிக்கப்படும். மனுக்கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
7. மனுக்கள் 2022.03.09 ஆம் திகதி வரை செல்லுபடியாகும்.
8. அனைத்து மனுக்களும் மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியால் வழங்கப்பட்ட ரூ.40,000.00 மனுப்பபாதுகாப்பு பிணைத்தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். மனு பாதுகாப்பானது 2022.04.06 வரை செல்லுபடியாகும்.

மேலே குறிப்பிடப்பட்ட முகவரியானது :

**சிரேஷ்ட பொறியியலாளர் (கரையோர அபிவிருத்தி)**
**கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூளவள முகாமை திணைக்களம்,**
**நான்காம் மாடி, புதிய செயலகம்,**
**மாளிகாவத்தை,**
**கொழும்பு 10.**
**தொபைபேசி : 011-2472622**
**தொலைநகல் : 0112387920 / 0112438005**
**மின்னஞ்சல் : coastaldevelopmentcd@gmail.com**

தலைவர்
திணைக்களத்தின் கொள்முதல் குழு
கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூளவள முகாமை திணைக்களம்.

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை போக்குவரத்து சபை (SLTB)
## ஸ்பிரிங் பிளேட்டுக்களை வழங்குவதற்கான விலைமனுக்கள்
## SLTB/TS/GEN/SPRING BLADES /2020

1. ஸ்பிரிங் பிளேட்டுக்களின் தயாரிப்பாளர்கள்/ ஸ்பிரிங் பிளேட்டுக்களின் தயாரிப்பாளர்களின் தரஅங்கீகாரம் பெற்ற முகவர்களிடமிருந்து 2022.01.05 ஆம் திகதி வரையும் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை போக்குவரத்து சபை பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார். விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும். 2021.12.15 ஆம் திகதியிலிருந்து 2022.01.04 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் (மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும்) மீளளிக்கப்படாத கட்டணமாக 12,500 ரூபாவைச் செலுத்திய பின்னர், கிருல வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இ.போ.ச. பெறுகைக் குழுவின் செயலாளரிடமிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை கொள்வனவு செய்யலாம்.

| விளக்கம் | விலைமனுப்பிணை (ரூபாவில்) |
|---|---|
| ஆகக் குறைந்தது 45 நாட்கள் கடன் அடிப்படையில் ஒரு வருடத்திற்கு இ.போ.ச இன் பஸ்களின் எண்ணிக்கைக்கு தேவைப்படும் ஸ்பிரிங் பிளேட்டுக்களை வழங்கல் | 750,000 |


2. ஓம்னி பஸ்களுக்கான ஸ்பிரிங் பிளேட்டுக்களின் உற்பத்தியாளர்கள்/உற்பத்தியாளர்களின் தரஅங்கீகாரம் பெற்றவர்கள் விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான தகுதியைக் கொண்டிருப்பர்.
3. உள்ளூர் முன்னுரிமை விலைமனு மதிப்பீட்டுக் காரணியாகும்.
4. விலைமனுக்கள் 2022.04.06 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். இருப்பினும், முன்வைக்கப்பட்ட விலைகள் ஒரு (01) வருட காலத்திற்கு நிலையாகவிருத்தல் வேண்டும்.
5. மேலே குறிப்பிட்டுள்ள பெறுமதிக்கான விலைமனுப்பிணையொன்றுடன் விலைமனுக்கள் இணைக்கப்பட்டிருப்பதுடன் 2022.05.05 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் மற்றும் இ.போ.ச. இன் முதலாவதான எழுத்து மூலமான விண்ணபத்தின் பேரில் மாற்ற கூடியதாகவும் நிபந்தனையற்ற வகையில் ரொக்கப் பணத்தில் மாற்றக் கூடிய தன்மையிலிருப்பதுடன் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் அல்லது இலங்கை காப்புறுதி ஒழுங்காற்றல் ஆணைக்குழுவுடன் பதிவுப்பெற்ற காப்புறுதி முகவராண்மையொன்றினால் வழங்கப்பட்டதாகவுமிருத்தல் வேண்டும். செல்லுபடியாகுத் தன்மையிலில்லாத எந்தவொரு விலைமனுப்பிணையும் நிராகரிக்கப்படும்.
6. (அ) எந்தவொரு விலைமனுதாரருக்கும் முகவரொருவராக அல்லது உபமுகவராக, பிரதிநிதியாக அல்லது பெயர் குறிப்பிட்டவராக அல்லது அவரது சார்பாக செயற்படும் எந்தவொரு நபரும் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு முன்னதாக இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவு பெற்றிருத்தல் வேண்டும். விலைமனுவுடன் பதிவுச்சான்றிதழின் மூலப்பிரதியானது சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறான மூலப்பிரதி சான்றிதழை சமர்ப்பிக்கத் தவறும் அவ்வாறான விலைமனுதாரர்களின் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
   (ஆ) 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் விலைமனுக்களை சமர்ப்பித்த பின்னர் உடனடியாகவும் பெறுகையை வழங்குவதற்கு முன்னராகவும் விலைமனுக்களை விலைமனுதாரர்கள் பதிவு செய்தல் வேண்டும். உரித்தான பெறுகை குழுவிற்கு பொது ஒப்பந்தங்களின் பிரகாரம் பதிவுச் சான்றிதழை அவ்வாறான விலைமனுதாரர் சமர்ப்பிக்காவிடின், பெறுகையானது எந்தவொரு விலைமனுதாரருக்கும் வழங்கப்பட மாட்டாது.
7. விலைமனு ஆவணத்தின் அனைத்து பக்கங்களும் விலைமனுதாரரினால் சிற்றொப்பமிட்டு அவரது பெயர் முத்திரை பதிக்கப்படல் வேண்டும்.
8. 2022.01.05 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் கொழும்பு-05, கிருள வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இ.போ.ச பெறுகைக்குழு செயலாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விலைமனுவை அடக்கியுள்ள முத்திரையிடப்பட்ட உறையின் இடது பக்க மேல் மூலையில் "Supply of Spring Blades" என குறிப்பிடப்படல் வேண்டும்.
9. கொழும்பு-05, கிருள வீதி, 200 ஆம் இலக்கத்தின் இ.போ.ச பெறுகைக்குழு செயலாளரின் அலுவலகத்தில் விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**இ.போ.ச பெறுகைக் குழு,**
**பெறுகைப் பிரிவு,**
**இல. 200, கிருள வீதி,**
**கொழும்பு-05.**

விசாரணைகள்: செயலாளர், இ.போ.ச பெறுகைக் குழு.
தொலைபேசி: 011 7706110, 0771056110. தொலைபேசி : 011 2588457

**பின்வருவனவற்றை தயவு செய்து கவனிக்கவும்:**

**(i) இ.போ.ச இன் அனைத்து பெறுகை செயற்பாடுகளின் தகவலுக்காக, தயவு செய்து https://sltb.lk என்ற இணையத்தை பார்வையிடவும்.**
**(ii) இ.போ.ச இன் அனைத்து பெறுகை செயற்பாடுகளின் தகவலுக்காக, தயவு செய்து https://promise.lk என்ற இணையத்தையும் பார்வையிடவும்**
**(iii) இ.போ.ச இன் வழங்குநரொருவராக பதிவு செய்வதற்காக, தயவு செய்து https://sltb.lk/supplyregistration / என்ற இணையத்தை பார்வையிடவும்.**

BE BETTER INFORMED! News you can trust now free on your mobile phone.
Dinamina Daily News Thinakaran
AVAILABLE AT

Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
LAKE HOUSE

# இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை

(கைத்தொழில் அமைச்சு)

## உலோக துண்டங்கள்/வெண்கலம்/பித்தளை/அலுமினியம் மற்றும் இருப்பு சலுகை விலையின் கீழ் பெற்றுக் கொள்வதற்காக தொழில்களை பதிவு செய்தல் - 2022

2014-09-14 ம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையில் அரச நிறுவனங்களில் இருந்து வெளியேற்றப்படுகின்ற உலோக துண்டங்களை மூலப்பொருட்களாக பயன்படுத்துகின்ற தேசிய கைத்தொழிலாளர்களுக்கு வழங்குவதற்கான வேலைத்திட்டத்தின் கீழ் 2021ம் ஆண்டிற்காக பின்வரும் துறைகளில் கைத்தொழிலாளர்களை பதிவு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. வெண்கலம் துண்டங்கள் மற்றும் வெண்கலத்துடன் தொடர்பான உலோகங்களின் பாகங்கள்
2. பித்தளை துண்டங்கள் மற்றும் பித்தளையுடன் தொடர்பான உலோகங்களின் பாகங்கள்
3. அலுமினிய துண்டங்கள் மற்றும் அலுமினியத்துடன் தொடர்பான உலோகங்களின் பாகங்கள்
4. வார்ப்பிருப்பு துண்டங்கள்
5. இரும்பு துண்டங்கள்
6. மின்மாற்றித் துண்டங்கள் மற்றும் அதனுடன் தொடர்பான பாகங்கள்
7. பாவித்த எண்ணெய்கள்
8. ஈயத் துண்டங்கள்

### நீங்கள் மேற்கூறப்பட்ட திரவியங்களை மூலப்பொருட்களாக பயன்படுத்துகின்ற கைத்தொழிலாளர்கள் எனின் பதிவுசெய்வதற்காக விண்ணப்பிக்கலாம்

ஏற்கனவே 2021இல் பதிவு செய்தவர்கள் மீண்டும் 2022ற்கு பதிவு செய்ய வேண்டியதில்லை.

01. விற்பனை பிரிவு - பிரதான காரியாலயம்
2. இணையத்தளம் - www.idb.gov.lk
03. மாவட்ட காரியாலயம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01. அம்பாறை | - 063-2222405 | 09. யாழ்ப்பாணம் | - 021-2222421 | 17. மாத்தறை | - 041-2222001 |
| 02. அநுராதபுரம் | - 025-2222335 | 10. களுத்துறை | - 034-2222601 | 18. மொனராகலை | - 055-2276097 |
| 03. பதுளை | - 055-2222470 | 11. கண்டி | - 081-2201696 | 19. முல்லைத்தீவு | - 021-2290209 |
| 04. மட்டக்களப்பு | - 065-2228410 | 12. கேகாலை | - 035-2223124 | 20. நுவரெலியா | - 052-2223668 |
| 05. கொழும்பு | - 011-2815009 | 13. கிளிநொச்சி | - 021-2283754 | 21. பொலன்னறுவை | - 027-2223077 |
| 06. காலி | - 091-2227034 | 14. குருநாகல் | - 037-2223212 | 22. புத்தளம் | - 032-2222093 |
| 07. கம்பஹா | - 033-2222909 | 15. மன்னார் | - 023-2251599 | 23. இரத்தினபுரி | - 045-2222567 |
| 08. மாத்தளை | - 066-2233160 | 16. ஹம்பாந்தோட்டை | - 047-2225468 | 24. திருகோணமலை | - 026-2227330 |
| 25. வவுனியா | - 024-2222274 | | | | |

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 31.01.2022ம் திகதிக்கு முன்னர் உரிய மாவட்ட காரியாலயத்தில் சமர்ப்பிக்க வேண்டும்
தவிசாளர், இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை

அழைப்புகளுக்கு : பணிப்பாளர் விற்பனை பிரிவு
முகவரி : 615, காலி வீதி, கடுபெத்த, மொரட்டுவ,
தொலைபேசி இல : 011-2607003, 011-2623439

நீதி அமைச்சு

# கேள்விகளுக்கான அழைப்பு (IFB)

## நீதிமன்றக் கட்டிடங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய அத்தியாவசிய திருத்தவேலைகள்

நீதி அமைச்சின் சார்பில் அமைச்சுப் பெறுகைக் குழுத் தலைவரினால், பின்வரும் நீதிமன்றக் கட்டிட திருத்தவேலைகளைச் செய்வதற்காக தகைமை மற்றும் திறமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| NO | Court Zone | Project Name | Package No | ICTAD No | Estimated Total Cost (Excluding VAT & Contingencies) (Rs.Mn) | Non Refundable fee Rs. |
|---|---|---|---|---|---|---|
| 1 | Gampaha | Construction of Boundary Wall for Civil Appellate High Court At Gampaha | MOJ/ AC26/78/2021 | C9 and C8 | 1.93 | 1,000.00 |
| 2 | Gampaha | Conversion of District Court office Record Room and other improvements to Building at Court Complex – Mahara | MOJ/ AC26/79/2021 | C7 and C6 | 7.54 | 2,000.00 |
| 3 | Negombo | Improvements and repairs to existing office court hall for new additional High Court at Court Complex-Negombo | MOJ/ AC26/80/2021 | C7 and C6 | 6.81 | 2,000.00 |
| 4 | Negombo | Repairs and Improvements to Old Court Buildings for Additional Magistrate Court at Negombo | MOJ/ AC26/81/2021 | C5 and C4 | 33.70 | 8,000.00 |
| 5 | Embilipitiya | Repairs to Court Buildings and Construction work at Embilipitiya | MOJ/ACT/ NCB/26/31/ RAT/P-002 | C5 and C6 | 15.87 | 5,000.00 |

01. மேற்படி செயற்றிட்டங்களுக்கான தேவைப்பாடுகள் மற்றும் செயற்படுத்தப்படும் விபரக்குறிப்புகள் பற்றி தெளிவுபடுத்தும் விபரங்களை கேள்வி ஆவணங்களுடன் கொள்வனவு செய்யலாம்.
02. தேசிய போட்டி ரீதியிலான கேள்வி கோரல் முறைமையின் மூலம் கேள்விகள் மேற்கொள்ளப்படும்.
03. ஒப்பந்தங்களை கையளிக்கப்பெறுவதற்கான தகைமை பெறுவதற்கு சித்திகரமான கேள்விதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாது இருத்தல் வேண்டும். மேலே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள தரங்களுக்காக CIDA/ICTAD பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.
04. இதில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களை இல. 19, சங்கராஜ மாவத்தை, கொழும்பு -10, நீதி அமைச்சின் 01ஆம் மாடியில் பெறுகைப்பிரிவு - கணக்காளர் (பெறுகை) அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன், மேற்படி பெறுகைப் பிரிவில் 2021.12.15ஆம் திகதி முதல் (பகிரங்க விடுமுறை தினம் தவிர்த்து) வார நாட்களில் அலுவலக நேரங்களில் (மு.ப.9.00 - பி.ப. 3.00) கேள்வி ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம். தொலைபேசி/ தொலைநகல் இல : 011-2438178
05. ஒரு கேள்வி ஆவணத் தொகுதியொன்றை மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்தை கொழும்பு-10, நீதி அமைச்சின் முதலாம் மாடியிலுள்ள பெறுகைப் பிரிவிற்கு செலுத்திய பின்னர் எழுத்து மூல வேண்டுகோள் ஒன்றை நீதி அமைச்சின் செயலாளருக்குச் சமர்ப்பித்து அலுவலக நேரங்களில் (மு.ப. 9.00 - பி.ப. 3.00) 2022.01.03ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை இதில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியைக் கொள்வனவு செய்யலாம்.
06. கேள்விகளை இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன்,
   I. 2022.01.04ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் அமைச்சிற்கு கிடைக்குமாறு பின்வரும் முகவரியிலுள்ள பெறுகைப் பிரிவு தலைவருக்கு பதிவுத்தபாலில் சமர்ப்பிப்பித்தல் அல்லது
   II. 2022.01.04ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு அலுவலக நேரங்களில் கொழும்பு -10, நீதி அமைச்சின் 01ஆம் மாடியிலுள்ள பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

   தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். வேறு வகையில் அல்லது இலத்திரனியல் ஊடாக சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
07. சகல கேள்விகளுடனும், கேள்வி ஆவணங்களுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிகளுக்கு அமைவாக வங்கிப் பிணை முறி மூலமாக இலங்கை ரூபாவின் பெறுமதிக்கு கேள்விப்பிணை முறியொன்றை இணைத்து அனுப்புதல் வேண்டும். ஒவ்வொரு வேலைக்காகவும் கேள்வி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் கேள்விப் பிணை முறி செல்லுபடியாதல் வேண்டும். கேள்விப்பிணை முறியின் பெறுமதி ஒவ்வொரு கேள்வி ஆவணங்களிலும் கேள்வி அழைப்பு பத்திரத்தில் (IFB) குறிப்பிடப்படும் பெறுமதியில் இருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் கேள்விப் பிணையை இணைத்திராத எந்த கேள்வியும் நிராகரிக்கப்படும்.

   கேள்விகளைச் சமர்ப்பித்தல் பற்றிய மேலதிக தகவல்கள் கேள்வி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.
08. கேள்விகள் ஒவ்வொரு கேள்வி ஆவணத்தில் குறிப்பிடப்படுள்ள திகதி வரையில் செல்லுபடியாதல் இருத்தல் வேண்டும்.
09. கேள்விகளை ஏற்றுக்கொள்வதற்கான இறுதி நேரம் முடிவடைந்தவுடன் 05ஆம் பந்தியில் குறிப்பிடப்படும் முகவரியில் அவ்வேளையில் தனிப்பட்ட முறையில் வருகை தருவதற்கு ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் மற்றும்/அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும்.
10. கேள்விகளை தயாரித்தல், கொண்டுவந்து ஒப்படைத்தல் பற்றி கேள்விதாரர்களுக்கு ஏற்படும் செலவுகள் தொடர்பில் நீதி அமைச்சு பொறுப்புக்கூறாது.
11. கேள்விக்கு முன்னரான கூட்டம் 2021.12.29ஆம் திகதி இடம்பெறும்.
12. இப்பெறுகை சம்பந்தமான இறுதித் தீர்மானத்தைப் பெறுகைக்குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்**
**அமைச்சு பெறுகைக்குழு,**
**இல. 19, சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10, நீதி அமைச்சு,**
**மீயுயர் நீதிமன்ற கட்டிடத்தொகுதி, கொழும்பு -12**




# தோட்டத் தொழிலாளர்களின் பாதுகாப்பு கவசமே கூட்டு ஒப்பந்தம்

## ஆயிரம் ரூபா சம்பளத்தில் மாற்றம் ஏற்படாது

**ஹற்றன் விசேட நிருபர்**

கூட்டு ஒப்பந்தம் தான் தோட்டத் தொழிலாளர்களுக்கான பாதுகாப்பு ஆயுதம். இதனை ஏனைய தொழிற் சங்கங்களும் உணர்ந்துள்ளன. எனவே, தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயம் கிட்டும் வரை நாம் ஓயப்போவதில்லை." என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும், மத்திய மாகாணசபையின் முன்னாள் உறுப்பினருமான பழனி சக்திவேல் தெரிவித்துள்ளார்.

தோட்டக் கம்பனிகளின் கெடுபிடிகளைக் கண்டித்தும், தமக்கான தொழில் உரிமைகளை பாதுகாக்க வேண்டும் என வலியுறுத்தியும் அக்கரப்பத்தனை பெருந்தோட்ட தோட்டத் தொழிலாளர்கள் பணி புறக்கணிப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இந்நிலையில் தொழிலாளர்களின் போராட்டத்துக்கு வலுசேர்க்கும் வகையில் இ.தொ.காவின் பொதுச் செயலாளர் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் விசேட பிரதிநிதியாக சக்திவேல் போராட்டக்களம் புகுந்து, தொழிலாளர்களுடன் கலந்துரையாடினார்.

அதன்பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"நாட்டிலுள்ள பெருந்தோட்டக் கம்பனிகளில், அக்கரபத்தனை பிளான்டேசன்தான் மிகவும் மோசமான முறையில் செயற்படுகின்றது. தொழில் அமைச்சின் தீர்மானங்களைக்கூட குறித்த பிளான்டேசன் பின்பற்றுவதில்லை.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாட் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் சம்பள நிர்ணய சபையில் எட்டப்பட்டு, அது தொடர்பான அரசிதழும் வெளியிடப்பட்டது. எனினும், இந்த சம்பள உயர்வை வழங்குவதற்கு அக்கரபத்தனை பிளான்டேசன் பின்வாங்குகின்றது.



கொழுந்தே இல்லாத தேயிலை மலையில் 20 கிலோ பறிக்குமாறு தொழிலாளர்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். அரை நாள் பெயரே திட்டமிட்ட அடிப்படையில் வழங்கப்படுகின்றது.

சூழ்ச்சிகரமான திட்டம்மூலம் மேலதிக கொழுந்துக்கு 40 ரூபா வழங்கப்படுகின்றது. இந்த அணுகுமுறை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். எவ்வித தொழில் சுமையும் அதிகரிக்காத வகையில் தோட்டத் தொழிலாளர்களுக்கு நாட் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும்.

இரண்டொரு நாளில் முக்கிய பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது. அதுவரை எமது போராட்டம் தொடருமென எச்சரிக்கை விடுகின்றோம்.

அதேவேளை, கூட்டு ஒப்பந்தத்தின் அருமையை மக்கள் இன்று உணர்ந்துள்ளனர். அந்த ஒப்பந்தம்தான் தொழிலாளர்களுக்கான பாதுகாப்பு கவசம். ஏனைய தொழிற்சங்கங்களும் இதை ஏற்றுக்கொண்டுள்ளன. எனவே, அந்த ஒப்பந்தம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே எனது கருத்து. கூட்டு ஒப்பந்தம் அமுலுக்கு வந்தாலும் ஆயிரம் ரூபா சம்பளத்தில் மாற்றம் எதுவும் வராது, அது தொழிலாளர்களுக்கு உரிய வகையில் கிடைப்பதை உறுதி செய்வோம்." என்றார்.

# புதிதாக அமைக்கப்பட்ட பாலத்தில் தாழிறக்கம்

பதுளை பசறை பிரதான வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட பாலம் தாழிறங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதுளை பசறை பிரதான வீதியில் 2ஆம் கட்டையிலிருந்து தெளிபெத்த, கெந்தகொல்ல பிரதேசங்களுக்கு செல்லும் பிரதான வீதியின் முதலாவது மைல் கல்லுக்கு அருகே புதிதாக அமைக்கப்பட்ட பாலமே இவ்வாறு தாழிறங்கியுள்ளது.இப்பாலம் அமைக்கப்பட்டு சுமார் ஒரு வருடகாலத்துக்குள்ளே தாழிறங்கியுள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இந்நிலையில் போக்குவரத்துக்காக பழைய பாலமே பயன்படுத்தப்படுகின்றது. இப்பாலமும் பாதுகாப்பற்ற நிலையில் மிகவும் ஆபத்தாக காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். இவ்விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி பாதுகாப்பான பாலமொன்றை அமைத்து தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது பயன்படுத்துகின்ற பழைய பாலத்தில் விபத்துக்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் அதிகம் உள்ளதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

(ந.திஸ்னாகுமாரி)

# எலிக்காய்ச்சலினால் சிறுவன் பலி

**பதுளை தினகரன் நிருபர்**

மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மாணவர் ஒருவர் எலிக்காய்ச்சலினால் உயிரிழந்துள்ளதாக வைத்திய அதிகாரி தனபால ரத்நாயக்க தெரிவித்தார். எதிமலை 60ஆம் பிரிவு ஜயமினிகம பிரதேசத்தைச் சேர்ந்த தரம் 11 ஒன்றில் எதிமலை மகா வித்தியாலயத்தில் கல்வி கற்று வந்த டப்ள்யூ. எம். முத்திக்க லக்மால் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். எலிக்காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு 14 நாட்கள் வரை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையிலேயே இவர் உயிரிழந்துள்ளார்.

# வெலிமட உடபுசல்லாவ வீதி அபிவிருத்தி பணிகள் நிறைவு



போக்குவரத்து வீதிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டம் நாடு பூராகவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மகநெகும திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு வரும் டீ648 உடப்புசல்லாவ வெலிமட வீதி நிறைவு கட்டத்தை அண்மித்துள்ளது. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வீதி மேம்பாட்டு ஆணையகத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் இவ் வேலைத்திட்டம் 27 கிலோமீற்றர் தூரத்தை உள்ளடக்கியதாகும்.

குண்டும் குழியுமாக இருந்த இவ் வீதியில் பயணிக்கும் கர்ப்பிணித் தாய்மார்கள், மாணவர்கள், வயோதிபர்கள் பல்வேறு சிரமங்களை இதுவரை காலமும் அனுபவித்து வந்தனர். இந்நிலையில், இவ்வீதி புனரமைப்பானது தமக்கு மகிழ்ச்சியளிப்பதாக இவ்வீதியினை பயன்படுத்துவோர் தெரிவிக்கின்றனர்.



2020 ஆம் ஆண்டு இ.தொ.காவின் உப தலைவர் செந்தில் தொண்டமான் தேர்தல் பிரச்சாரத்தின் போது ஊவா கெட்டவல தோட்டத்திற்கான பாதையை புனரமைப்பதாக மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்றியுள்ளார். விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் இப்பாதைக்கான வேலைத்திட்டத்தை செந்தில் தொண்டமான் முன்னெடுத்துள்ளார்.



தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2021 டிசம்பர் 15
புதன்கிழமை

# வவுனியா விபத்தில் மதகுரு படுகாயம்

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியா குட்செட் வீதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் மதகுரு ஒருவர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று (14) காலை இடம்பெற்ற விபத்து சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வவுனியாவிலிருந்து குட்செட்வீதியில் சென்ற மோட்டார் சைக்கிளும் குட்செட் பகுதியில் இருந்து நகர் நோக்கி பயணித்த முச்சக்கர வண்டியும் குட்செட் வீதியில் அமைந்துள்ள கருமாரியம்மன் ஆலயத்தின் அருகே மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த திருகோணமலையைச் சேர்ந்த கேதீஸ்வரன் (வயது 41) என்பவரே படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணையினை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஹெரோயின் போதைப் பொருளுடன் ஒருவர் கைது

18.670 கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக சாவகச்சேரி மதுவரி நிலையத்தினர் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் கல்லுண்டாய் வெளியூடாக ஹெரோயின் போதைப்பொருள் கடத்தப்படுவதாக சாவகச்சேரி மதுவரி நிலையத்தினருக்கு இரகசிய தகவல் ஒன்று திங்கட்கிழமை கிடைக்கப் பெற்றது.

இதனைத் தொடர்ந்து உதவி மதுவரி ஆணையாளர் தர்மசீலன் மற்றும் மதுவரி அத்தியட்சகர் தங்கராசா ஆகியோரின் வழிநடத்தலில் சாவகச்சேரி மதுவரி நிலைய பொறுப்பதிகாரி ராஜ்மோகன் தலைமையிலான குழுவினர் அப்பகுதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

அதன் போது, சாவகச்சேரி பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய நவாலி பகுதியைச் சேர்ந்த 36 வயது நபர் ஒருவரை சோதனையிட்டபோது அவரிடம் 18.670 கிராம் ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

# விவாத போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு

இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இலங்கையிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு இடையிலான தமிழ் மொழி மூலமான விவாத போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா திங்கட்கிழமை கொழும்பு இலங்கை மன்ற பயிற்சி நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

கடந்த நவம்பர் மாதம் 19ஆம் திகதி அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற குறித்த விவாத போட்டியில், முதலாம் இடத்தினை வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் விவாத அணி பெற்றுக் கொண்டது.

அதேவேளை இரண்டாமிடத்தினை மட்டக்களப்பு மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேசசபை பெற்றதுடன் மூன்றாமிடத்தினை புதுக்குடியிருப்பு பிரதேசபை பெற்றுக்கொண்டது. முதலாமிடத்தை பெற்றுக்கொண்ட மானிப்பாய் பிரதேசசபையின் விவாதகுழுவில் தவிசாளர் அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன் உறுப்பினர்களான அருட்குமார் ஜோன் ஜிப்பிரிக்கோ, கந்தையா ஜெசிதன், லோகப்பிரகாசம் ரமணன், சிவசண்முகநாதன் அனுசன் உள்ளிட்டவர்கள் பங்குபற்றியிருந்தனர். அணியின் தலைவராக உறுப்பினர் கந்தையா ஜெசிதன் செயற்பட்டிருந்தார்.

# வவுனியா தனியார் பேருந்தில் தவறவிட்ட தங்க நகையை கொடுத்த பேருந்து சாரதி

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியா மாவட்ட பேருந்து உரிமையாளர் சங்கத்தில் ஒப்படைக்கப்பட்ட தாலிக்கொடி உட்பட வங்கி ஆவணங்கள் சிலவற்றை நேற்று தனியார் உரிமையாளர் சங்கத்தின் பணிமனையில் வைத்து பேருந்து சங்கத்தின் தலைவர் சு.இராஜேஸ்வரினால் உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது .

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் , நேற்று முன்தினம் (13.12.2021) வவுனியா மாவட்ட பேருந்து உரிமையாளர் சங்கத்தின் ஆளுகைக்குட்பட்ட ND 7038 இலக்கமுடைய பேருந்தில் பயணம் மேற்கொண்ட கிளிநொச்சி நகரைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் பேருந்திலிருந்து இறங்கும்போது தவறுதலாக தனது கைப்பை ஒன்றினை பேருந்தில் தவறவிட்டு இறங்கியுள்ளார்.

அதனை பார்வையிட்ட தனியார் பேருந்தின் சாரதியும், உரிமையாளருமான கே.ஜீவானந்தபவனினால் பேருந்தில் கைவிடப்பட்ட குறித்த கைப்பை வவுனியா மாவட்ட பேருந்து சங்கத்தில் ஒப்படைக்கப்பட்டது . கைப்பையில் காணப்பட்ட அடையாள அட்டை ஆவணத்தின் முகவரிக்கு குறித்த உரிமையாளருடன் தொடர்புகொண்டு அவர் பேருந்தில் தவறவிட்ட ஐந்து பவுண் தாலிக்கொடி மற்றும் மூன்று வங்கி புத்தகம் என்பவற்றை உரிமையாளருடாக உறுதிப்படுத்திய பின்னர் நேற்று (14) வவுனியா மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் அலுவலகத்தில் வைத்து தலைவரினால் ஒப்படைக்கப்பட்டுள்ளது .

தவறவிட்ட தங்க நகை உட்பட ஆவணங்களை திரும்ப ஒப்படைத்த பேருந்து சாரதியின் நேர்மையான நடவடிக்கை தங்க நகைகளை பறிகொடுத்தவருக்கு இன்ப அதிர்ச்சியை கொடுத்துள்ளது.

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் நேற்று போராட்டம்

ஓமந்தை விஷேட நிருபர்



ஜனாதிபதியின் ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் திருப்தியில்லை என தெரிவித்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களால் எதிர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

நேற்று (14) காலை 11.30 மணியளவில் வவுனியா மாவட்ட செயலகத்திற்கு முன்பாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் "திணிக்காதே திணிக்காதே ஆணைக்குழுக்களை திணிக்காதே, போராடுவோம் போராடுவோம் நீதி கிடைக்கும் வரை போராடுவோம், வேண்டாம் வேண்டாம் மரண சான்றிதழ் வேண்டாம், வேண்டாம் வேண்டாம் இழப்பீடும் வேண்டாம், வேண்டும் வேண்டும் சர்வதேச விசாரணை வேண்டும்" போன்ற பல்வேறு கோசங்களை எழுப்பியவாறு பாதாதைகளுடன் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க செயலாளர் சிவானந்தம் ஜெனிதா கருத்து தெரிவிக்கையில்,

இன்றைய தினம் கடத்தி காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை வவுனியா மாவட்ட செயலகத்தில் சந்திப்பதாக அறிவித்திருந்தார்கள். ஆனால் அந்த தகவலின்படி அவர்கள் வருகை தரவில்லை. எந்தவித ஆணைக்குழுக்களும் தேவையில்லை, உள்ளக விசாரணைகளும் தேவையில்லை சர்வதேச விசாரணையே தேவையென 12 வருடமாக போராடி கூறிக்கொண்டு வருகின்றோம்.

எத்தனையோ ஆணைக்குழுக்கள் வந்தும் பதிவுகளை மேற்கொண்டு செல்கிறார்களே தவிர எந்தவிதமான நீதியும் வழங்கப்படவில்லை. தொடர்ச்சியாக அதே வேலையை தான் செய்கின்றார்கள். எங்களுக்கு நீதியே கிடைக்க வேண்டும், நீதிக்கு பின்பு தான் எது என்றாலும் சர்வதேச விசாரணையே வேண்டும் என மேலும் தெரிவித்தார்.

## நான்கு வீதிகள் புனரமைப்பு

சாவகச்சேரி நகரசபையின் சுதந்திரக்கட்சி உறுப்பினர் க.வேலாயுதபிள்ளையின் நகரசபை ஒதுக்கீடுகள் ஊடாக நகரசபை எல்லைக்குட்பட்ட சங்கத்தானை வட்டாரத்தில் 31இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் நான்கு வீதிகள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன. அந்தவகையில் 2020ஆம் ஆண்டுக்கான நகரசபையின் வரவு செலவுத் திட்ட நிதி 10 இலட்சம் மற்றும் அபிவிருத்திக்காக ஒதுக்கிய நிதி 9 இலட்சம் ரூபாவில் சாரதா வீதி முதலாம் குறுக்கு வீதி, நகர சபையின் விசேட நிதி ஒதுக்கீட்டான மூன்றரை இலட்சம் நிதியில் சாரதா வீதி முதலாம் குறுக்கு வீதியின் கிளை ஒழுங்கை, 2021ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத்திட்ட நிதியான 9 இலட்சம் ரூபாவில் காளி கோவில் வீதி மற்றும் சப்பச்சிமாவடி முதலாம் குறுக்குத் தெரு ஆகிய நான்கு வீதிகளே இவ்வாறு நகரசபை உறுப்பினர் க.வேலாயுதபிள்ளையின் ஒதுக்கீடு மற்றும் முயற்சி காரணமாக செப்பனிடப்பட்டுள்ளன.

# முல்லைத்தீவில் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வு



சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தினை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்ட சமூக சேவை திணைக்களத்தினால் "நிலையான உலகை நோக்கி மாற்றுத்திறனாளிகளின் தலைமைத்துவமும் பங்கேற்பும்" என்ற தொனிப்பொருளில் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம நிகழ்வு முல்லைத்தீவு சமூக சேவை திணைக்களத்தில் இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளாக இருந்து கல்விப் புலத்தில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள், க.பொ.த சாதாரண தர பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்ற மாணவர்கள், மற்றும் க.பொ.த.உயர் தரத்தில் சிறந்த பெறுபேற்றைப் பெற்று பல்கலைக் கழகத்திற்கு தெரிவாகிய மாணவர்களுக்கான கௌரவிப்பும் பரிசுப் பொருட்களும் வழங்கப்பட்டன.

குறித்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மாவட்ட பிரதம கணக்காளரும் அனைத்து பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், மாகாண சமூக சேவை திணைக்களத்தின் தலைமைப்பீட சமூக சேவை உத்தியோகத்தர்கள், voice area அமைப்பின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர், child fund நிறுவனத்தின் உத்தியோகத்தர், மாற்றுத் திறனாளிகளின் அமைப்பின் தலைவர்கள், பெற்றோர்கள், பிள்ளைகள் என கலந்து நிகழ்வினை சிறப்பித்தனர். மாற்றுத் திறனாளி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

# வவுனியா தபால் ஊழியர் பணி பகிஷ்கரிப்பு

ஓமந்தை விஷேட நிருபர்



தபால் ஊழியர்கள் பலகோரிக்கைகளை முன்வைத்து நாடளாவிய ரீதியில் பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் பிரகாரம் வவுனியாவிலும் தபால் ஊழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நாடளாவிய ரீதியில் பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அனைத்து தபால் நிலையங்களும் நேற்று ஊழியர்கள் பிரசன்னமாகாமையினால் மூடப்பட்டன.

இந் நிலையில் சிறுநீரக கொடுப்பனவு மற்றும் முதியோர் கொடுப்பனவு போன்ற பல்வேறு தேவைகளின் பொருட்டு தபால் நிலையத்திற்கு வருகை தந்த பொது மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பி சென்றிருந்தமையை அவதானிக்கக் கூடியதாக இருந்ததாக எமது செய்தியாளர் தெரிவித்துள்ளார். கோரிக்கைகளுக்கு உடன் தீர்வு கிடைக்காவிடின் பாரிய தொழில் சங்க நடவடிக்கைக்கு தயாராவோம் என வவுனியா பிரதான தபாலகத்திற்கு முன்பாக காட்சிப்படுத்தப்பட்டுள்ள துண்டு பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எரிவாயு அடுப்பு வெடித்து சிதறி விரிவுரையாளரின் மனைவி காயம்

யாழ்ப்பாணம் துன்னாலை பகுதியில் எரிவாயு அடுப்பு வெடித்து சிதறியதால், விரிவுரையாளரின் மனைவி சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக கடமையாற்றும் அ. பௌநந்தி வீட்டிலையே இச்சம்பவம் நேற்று காலை 5.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வழமை போன்று நேற்றுக் காலை விரிவுரையாளரின் மனைவி உணவு தயாரிப்பில் ஈடுபட்டிருந்த போது, எரிவாயு அடுப்பு வெடித்து சிதறியதுள்ளது. அதன்போது வெடித்து சிதறிய அடுப்பின் பாகம் ஒன்று விரிவுரையாளரின் மனைவியின் தலையில் பட்டதில் அவர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

அதேவேளை அடுப்பு வெடித்து சிதறிய அதிர்வில் , சீலிங் சீட்டும் வெடித்துள்ளது.

எரிவாயு சிலிண்டரை அன்றைய தினமே மாற்றி இருந்ததாக விரிவுரையாளர் தெரிவித்துள்ளார்.

## பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் எரிவாயு அடுப்பு வெடிப்பு

யாழ்ப்பாணம் வடமராட்சி பருத்தித்துறை ஆதார (மந்திகை) வைத்தியசாலையில் உணவு தயாரிப்பு இடத்தில் நேற்று எரிவாயு அடுப்பு வெடிப்பு சம்வவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று காலை 6.45 மணியளவில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் நேரில் சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர்.

# வட மாகாண அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்



பருத்தித்துறை விசேட நிருபர்

வடக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

நேற்று காலை யாழ்ப்பாணம் கைதடியில் உள்ள வடக்கு மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தலைமையில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், த.சித்தார்த்தன், சி.சிறிதரன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## முல்லைத்தீவு நகரில் பாலன்குடில்

முல்லைத்தீவு நகரில்உள்ள சுற்று வட்டத்தில் பாலன் பிறப்பினைமுன்னிட்டு முன்னாயத்தமாக பாலன்குடில் ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு பங்குத்தந்தை அகஸ்ரீனின் நெறிப்படுத்தலிலும், முல்லை பங்கு இளைஞர்களின் வழிகாட்டலிலும், வட்டுவாகல் இராணுவத்தினரின் அழகு படுத்தலில் பாலகுடில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த பாலன் குடில் நேற்று 14.12.21 வைபவரீதியாக வைக்கப்பட்டு வழிபாடுகள் நடத்தப்பட்டுள்ளன. நேற்று காலை நடைபெற்ற இந்த நிகழ்வில் கரைதுறைப் பற்று பிரதேச சபை தவிசாளர் மற்றும் கௌரவ உறுப்பினர் பூலோகம் கரைதுறைப்பற்று பிரதேச சபை செயலாளர் பங்குத்தந்தை பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டு பாலன் குடிலை வைத்துள்ளார்கள்;.



# புலமைக் கதிர்

## தரம்-5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

மாணவர்களே! இம்மாதிரி வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுங்கள். (சில வினாக்களில் உப பகுதிகள் உள்ளன)

★ சரியான விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது கோடு மாத்திரம் இடுக.

★ செய்கை வேலைக்காக தாள் ஒன்றைப் பயன்படுத்துங்கள்.

**01. பந்தியை வாசித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

சிறுவர்கள் கடற்கரையில்
பட்டாம்பூச்சிகளைப் போல
அங்கும் இங்கும் ஓடியாடி விளையாடிக்
கொண்டிருந்தார்கள். சூரியன் மெல்ல மெல்ல
மறையும் காட்சியை பார்த்து இரசித்தபடி
பலர் அங்கு கூடியிருந்தனர்

i. இப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பவம் நிகழ்வது ஒரு நாளில் எந்த வேளையில்?

…………………………………………………………………………………………

ii. இங்குள்ள உவமைத்தொடர் ஒன்றினைக் குறிப்பிடுக.

…………………………………………………………………………………………

iii. பந்தியிலுள்ள இணைமொழிகளை எழுதுக.

…………………………………………………………………………………………

iv. பந்தியிலுள்ள அடுக்குத் தொடர் ஒன்றினை எழுதுக.

…………………………………………………………………………………………

v. இதிலிருந்து உயர்திணை, படர்க்கை, பன்மை பெயர்ச்சொல் ஒன்றினை தெரிவு செய்து எழுதுக. ……………………………………………………………………

vi. ஓடியாடி எனும் சொல்லை பிரித்தெழுதுக.

…………………………………………………………………………………………

vii. சூரியன் ஒத்த சொல் எழுதுக.

…………………………………………………………………………………………

**02. பொருத்தமான பயனிலைச் சொற்களைக் கொண்டு பூரணப்படுத்துக.**

i. நான் போன வருடம் கண்டிக்கு (போ) ……………………………………………

ii. மழை பெய்தால் மயில் தோகை விரித்து (ஆடு) ………………………………

03. i. இருபத்தைந்தாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா

…………………………………………………………………………………………

ii. நடக்க இருப்பவற்றை முன்னரே கூறுபவன்

…………………………………………………………………………………………

**04. கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.**
ஆரோக்கியமாக / உடற்பயிற்சி / நாம் / வாழ / அவசியமாகும் / செய்வது / வேண்டுமானால்

…………………………………………………………………………………………

**05. நிறுத்தற்குறிகளை இடுக.**

i. அடடா என்ன அழகான பூ

…………………………………………………………………………………………

ii. நாளை பாடசாலைக்கு வருவாயா என நண்பன் கேட்டான்

…………………………………………………………………………………………

**06. மரபுத் தொடரை எழுதுக.**

i. ஆபத்து வேளையில் கைவிடல் ……………………………………………………

ii. இல்லாததைச் சொல்லுதல் ………………………………………………………

**07. தன்மை வாக்கியத்தை முன்னிலை வாக்கியமாக மாற்றுக.**

i. நான் படித்தேன் …………………………………………………………………

**08. பின்வரும் ஆங்கிலச் சொல்லின் கருத்தை தமிழில் எழுதுக.**

i. Snake : ……………………………………………………………………………

ii. Potato : …………………………………………………………………………

09. பின்வரும் படத்தினைப் பார்த்து அதன் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.



……………………………



……………………………

**10. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தினை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**


i. எனக்கு பசிக்கிறது ……………………………………………………………

ii. மாணவன் புத்தகம் வாசிக்கிறான் …………………………………………

**11. பின்வரும் சுருக்கக் குறியீட்டினை விரித்தெழுதுக.**

இ.மி.ச. ……………………………………………………………………………

12.




i. வட்டத்திலுள்ள இலக்கங்களைக் கொண்டு ஆக்கக்கூடிய மிகப்பெரிய எண் யாது?

……………………………………………………………

ii. அவ்வெண்ணை சொற்களில் எழுதுக.

…………………………………………………………………………………………

**13. எண்கோலங்களை பூரணப்படுத்துக.**

i. 2, 4, 8, 16, ………, ………….

ii. 85, 80, 75, 70, ………, ………....


14. 1kg அரிசியின் விலை ரூபாய் 145.00 எனில் 3kg அரிசியின் விலை என்ன?

…………………………………………………………………………………………

15. ரவி காலை 10 மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்டு மாலை 4.30க்கு மீண்டும் வீட்டை அடைந்தான். அவன் வீட்டுக்கு வெளியே கழித்த கால அளவு எவ்வளவு?

…………………………………………………………………………………………

16.



i. இவ்வுருவின் பெயர் என்ன?

……………………………………………………………

ii. இதிலுள்ள விளிம்புகள் எத்தனை?

……………………………………………………………

iii. இதிலுள்ள உச்சிகள் எத்தனை?

……………………………………………………………

17. 64320 எனும் எண்ணை சொற்களில் எழுதுக.

…………………………………………………………………………………………

18. XIV + V = ……………………………………………… பெறுமானத்தை எழுதுக.

19. 17:20 இந்த நேரத்தை சாதாரண நேரமாக எழுதுக.

…………………………………………………………………………………………


20. வருடமொன்றிலுள்ள 31 நாட்கள் கொண்ட மாதங்களின் கூட்டுத்தொகை யாது?

…………………………………………………………………………………………

21. 40 பென்சில்களில் ¾ பங்கு எவ்வளவு?

…………………………………………………………………………………………

22.




இவ்வுருவில் $\frac{7}{10}$ பங்கினை நிறந்தீட்டுக.

23. ஒரு பெட்டியில் 63 தோடம்பழங்கள் உள்ளன. அதுபோல 7 பெட்டியிலுள்ள தோடம்பழங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

…………………………………………………………………………………………

24.



இவ்வுருவிலுள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?

……………………………………………………………


25. வசந்தி தனது 10 ஆவது பிறந்த தினத்தை 2020ம் ஆண்டு பெப்ரவரி 29ஆம் திகதி கொண்டாடினாள். எனில் அவள் மீண்டும் தனது எத்தனையாவது வயதில் அடுத்துவரும் பெப்ரவரி 29ஆம் திகதியில் தனது பிறந்தநாளை கொண்டாடுவாள்?

…………………………………………………………………………………………

26. 1990 என்ற எண்ணுடன் 110 ஐக் கூட்டி 100ஐக் கழித்தால் வரும் விடை என்ன?

…………………………………………………………………………………………

27.



உருவிலுள்ள கூர்ங்கோணங்கள் எத்தனை?

……………………………………………………………

(12ஆம் பக்கம் பார்க்க)



# புலமைக் கதிர்

## தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

(11 ஆம் பக்கத் தொடர்)

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – II

28. இலக்கம் 5ன் 5 மடங்குடன் 5ஐக் கூட்டினால் கிடைக்கும் விடை?

..........................................................................................................

29. ஒரு டசின் பென்சிலின் விலை ரூ.60.00 எனில் 4 பென்சில்களின் விலை என்ன?

..........................................................................................................

**கீழே தரப்பட்டுள்ள கேள்விகளுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக**

30. நிலத்தில் படரும் கொடி வகை தாவரம் எது?
i. பாகல் ii. பூசணி iii. பீர்க்கு

31. பின்வருவனவற்றுள் விசேட தன்மையுள்ள பிராணி எது?
i. பல்லி ii. எலி iii. நுளம்பு

32. கடலுணவுகளில் பெருமளவு காணப்படும் உயிர்ச்சத்து
i. இரும்பு ii. கல்சியம் iii. அயடின்

33. மண்ணரிப்பினை தடுக்கும் சிறந்த வழிகளில் ஒன்றல்லாதது
i. மூடுபயிர் ii. கல்வேலி iii. ஓடும் நீர்

34. மின்காந்தம் பயன்படுத்தப்படும் உபகரணம்
i. மின்மணி ii. மின்குமிழ் iii. மின் அடுப்பு

35. சூரிய மண்டலத்தில் மிகப்பெரிய கோள் எது?
i. புதன் ii. வியாழன் iii. வெள்ளி

36. ஒரு தடவை ஒரு குட்டியை மட்டும் ஈனும் பிராணி
i. நாய் ii. எலி iii. யானை

37. அதிவேக நெடுஞ்சாலையில் பயணிக்கும் போது அவசர தேவைக்கு அழைக்க வேண்டிய தொலைபேசி
i. 1969 ii. 1959 iii. 1949

38. பம்பரகந்த நீர்வீழ்ச்சி அமைந்துள்ள மாவட்டம் எது?
i. பதுளை ii. நுவரெலியா iii. ஹட்டன்

39. ஒளித்தொகுப்பின் போது தாவரங்கள் உள்ளெடுக்கும் வாயு எது?
i. ஒட்சிசன் ii. காபனீரொட்சைட் iii. நைதரசன்

40. பின்வருவனவற்றுள் இருவித்திலை தாவரமல்லாதது
i. மிளகாய் ii. வேம்பு iii. நெல்

41. 
i. மீள் சுழற்சி
ii. சுற்றுவட்டம்
iii. அவதானம்

42. வாகனமொன்று பின்னோக்கி செலுத்தப்படும் போது எரியும் மின்விளக்கின் நிறம்
i. வெள்ளை ii. சிவப்பு iii. மஞ்சள்

43. சுவர்களை நிலைக்குத்தாக கட்டுவதற்கு சரிபார்க்க உதவும் உபகரணம்
i. மட்டக்கம்பு ii. தூக்குக்குண்டு iii. சாந்தகப்பை

44. வீட்டுத் தோட்டத்தில் பூச்சிகளை விரட்ட பயன்படும் தாவரம்
i. செவ்வந்தி ii. செவ்வரத்தை iii. ரோசா

45. பாரமான பொருளொன்றை மேலே உயர்த்துவதற்குப் பயன்படும் பொருள்
i. கப்பி ii. சில்லுவண்டி iii. மின்மோட்டார்

46. சாரதிகள் பாதையில் வாகனத்தை செலுத்த வேண்டிய பக்கம்
i. வலது ii. இடது iii. இரண்டு பக்கமும்

47. இலங்கையில் இயற்கை துறைமுகம் அமைந்துள்ள மாவட்டம்
i. திருகோணமலை ii. அம்பாந்தொட்டை iii. கொழும்பு

48. பாலைவனக் கப்பல் எனச் செல்லமாக அழைக்கப்பட்ட பிராணி
i. குதிரை ii. ஒட்டகம் iii. மாடு

49. காற்றினால் இசைக்கப்படும் இசைக்கருவி ஒன்று
i. மகுடி ii. மத்தளம் iii. மிருதங்கம்

50. பின்வரும் ஊடகங்களுள் ஒளி, ஒலி சார்ந்த ஊடகம்
i. வானொலி ii. தொலைக்காட்சி iii. பத்திரிகை

51. பின்வருவனவற்றுள் மூடாமல் சமைக்கப்படவேண்டிய உணவு
i. சோறு ii. மரவள்ளி iii. மீன்

52. பறக்க முடியாத பறவையல்லாதது
i. பென்குயின் ii. கிவி iii. பருந்து

53. உயரமான கட்டடங்களில் வேலைசெய்வோர் கட்டாயமாக அணிய வேண்டியது
i. தலைக்கவசம் ii. கையுறை iii. காலுறை

54. ஆடம்பரமான வாழ்க்கை காரணமாக ஏற்படும் பாதிப்பு
i. மன மகிழ்ச்சி ii. கடன்தொல்லை iii. ஆரோக்கியம்

55. பொருளாதார பயன்தரும் பிராணி ஒன்று
i. பூனை ii. அணில் iii. கோழி

56. 
i. சிகிரியா
ii. யாப்பகுவ சிங்கம்
iii. வட்டதாகே

57. பின்வருவனவற்றுள் பச்சையாக உண்ணக்கூடியது
i. பாகல் ii. புடோல் iii. வெங்காயம்

58. கடதாசியை கிழித்து ஒட்டுவதன் மூலம் செய்யப்படும் ஆக்கம்
i. கொலாஜ் ii. அல்பனா iii. அச்சுப்பதித்தல்

59. துவிச்சக்கர வண்டியின் விளக்கிற்கு மின்னை வழங்குவது
i. மின்கலம் ii. மின்விளக்கு iii. டைனமோ

60. என்னைக் கவர்ந்த அழகிய வீட்டுத் தோட்டம் என்ற தலைப்பின் கீழ் 5 சொற்களுக்கு குறையாத 3 வாக்கியம் எழுதுக.

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

## எதிர்ச் சொற்கள்

- ஈதல் - ஏற்றல்
- ஈற்றில் - முதலில்
- ஈரம் - உலர்வு
- ஈவார் - ஈயார்
- ஈடேற்றம் - வீழ்ச்சி
- ஈடுபாடு - முரண்பாடு
- உதயம் - அஸ்தமனம்
- உபகாரம் - அபகாரம்
- உத்தமன் - அதமன்
- உலோபம் - வள்ளன்மை
- உற்சாகம் - சோர்வு
- உருவம் - அருவம்
- உண்மை - பொய்மை
- உபசாரம் - அபசாரம்
- உயர்வு - தாழ்வு
- உற்றார் - அற்றார்
- உலோபி - வள்ளல்
- உறக்கம் - விழிப்பு

## கடந்த வார (08.12.2021) வினாத்தாள் 1 இற்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 1 | 11 | 1 | 21 | 1 | 31 | 3 |
| 02 | 2 | 12 | 3 | 22 | 3 | 32 | 2 |
| 03 | 3 | 13 | 3 | 23 | 2 | 33 | 1 |
| 04 | 1 | 14 | 2 | 24 | 3 | 34 | 3 |
| 05 | 3 | 15 | 2 | 25 | 3 | 35 | 2 |
| 06 | 1 | 16 | 1 | 26 | 2 | 36 | 1 |
| 07 | 2 | 17 | 3 | 27 | 1 | 37 | 1 |
| 08 | 3 | 18 | 3 | 28 | 2 | 38 | 3 |
| 09 | 1 | 19 | 1 | 29 | 2 | 39 | 1 |
| 10 | 2 | 20 | 3 | 30 | 1 | 40 | 1 |

## தாவரங்களின் இலைகள்


கறுவா


அன்னமுன்னா


நாகமரம்


மரவள்ளி


ஏழிலைப்பாலை


தாமரை


எலுமிச்சை


அரசஇலை


மாவிலை


முருங்கை இலை


பலாவிலை


வாழை இலை

# கிழக்கின் குரல்



## மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு

# புதிய வகுப்பறை கட்டடம் மருதமுனையில் திறந்து வைப்பு

(பெரியநீலாவணை விசேட நிருபர்)

மருதமுனை ஹியூமன் லின்க் விசேட தேவையுடையோருக்கான வளப்படுத்தல் மத்திய நிலையத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா, திங்கட்கிழமை (13) நிறுவனத்தின் பணிப்பாளர் ஏ. கமறுத்தீன் தலைமையில் மருதமுனையில் நடைபெற்றது.

2007 ஆம் ஆண்டில் மருதமுனையில் ஆரம்பிக்கப்பட்ட விசேட தேவையுடையோருக்கான வளப்படுத்தல் மத்திய நிலையம் மாணவர்களுக்கான கற்றல் செயல்பாட்டினை மேற்கொண்டு வருகின்றது. இதில் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் மாற்றுத்திறனாளி மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

இந்த வகுப்பறை கட்டடம் சகல வசதிகளையும் கொண்டதாக 15 மில்லியன் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இரண்டு மாடிகளைக் கொண்ட இந்த வகுப்பறை கட்டடத்திற்கான நிதியுதவியை குவைத் நாட்டின் சகோதரி ஆயிஷா யூசுப் வழங்கி இருக்கிறார். திறப்பு விழா நிகழ்வில், இந்திய உபகண்ட காரியாலய தலைமை அதிகாரியும் சர்வதேச ரஹ்மா அமைப்பின் பிரதிநிதியுமான அஷ்செய்க் மொஹமட் அல் கஸ்ஸார், மேர்ஸி லங்கா நிறுவனத்தின் இலங்கை நாட்டுக்கான பணிப்பாளர் உஸ்தாத், அப்துல்லாஹ் முனீர், மேர்ஸி லங்கா நிறுவனத்தின் சட்ட ஆலோசகரும் திட்ட முகாமையாளருமான அஷ்செய்க் என்.எம்.அப்துல் முஜீப், திட்டமிடல் முகாமையாளர் அஷ்செய்க் ஹஸன் ஸியாத், திட்டமிடல் பணிப்பாளர் அஷ்செய்க் எம்.ஆர்.எம்.முனாஸ், கல்விப் பிரிவு பணிப்பாளர் டொக்டர் ஏ. பௌசுல் ரஹ்மான் உட்பட ஹியூமன் லிங் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், பொதுமக்கள், பெற்றோர் என பலர் கலந்து கொண்டனர்.





## மட்டு.மாவட்டத்தில் தபால் சேவைகள் ஸ்தம்பிதம்



(மட்டக்களப்பு குறூப் ,புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்)

தபால் ஊழியர்கள் ஆரம்பித்துள்ள வேலை நிறுத்தம் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் தபால்சேவைகள் நேற்று செவ்வாய்க்கிழமை முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்தன.

மட்டக்களப்பு பிரதம தபால் நிலையம் உட்பட மாவட்டத்தின் 14 பிரதேச செயலகப் பிரிவுகளிலுமுள்ள தபால் அலுவலகங்கள், உப தபால் அலுவலகங்கள் செயலிழந்து காணப்பட்டன.

தபால் வினியோகம் உட்பட அனைத்து நடவடிக்கைககளும் ஸ்தம்பித்திருந்தன. தபால் சேவைகளைப்பெற தபால் நிலையங்களுக்கு வந்தோர் திரும்பிச் சென்றதை அவதானிக்க முடிந்தது.

# இருபது இலட்சம் முஸ்லிம்களின் நலன் கருதியே ஒன்றிணைந்து செயற்படுகிறோம்

### - பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ்

(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)

வாக்குகளுக்காக நாங்கள் அரசியல் செய்யவில்லை. நாட்டில் வாழும் இருபது இலட்சம் முஸ்லிம்களின் நலன் கருதியே பத்து முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைந்து செயற்படுகிறோம் என பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட விளையாட்டு கழகங்கள், பொது அமைப்புகளுக்கு பாராளுமன்ற உறுப்பினரின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியொதுக்கீட்டின் கீழ், கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களை வழங்கி வைக்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் எம்.ஏ.சீ. அஹமட் சாபீர் தலைமையில் திங்கட்கிழமை (13) பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

பெரும்பான்மை சிங்கள மக்களிடமிருந்து முஸ்லிம் சமூகத்தை பிரித்தாளுவதற்கான சதிகளை தொடர்ச்சியாக செய்து வருகின்றனர். இது மிகவும் ஆபத்தான நிலையை தோற்றுவிக்கும். இந்நிலையை நாம் முதலில் மாற்றியமைக்க வேண்டும். உயர் பதவிகளில் இருக்கும் முஸ்லிம் சமூகத்தை சேர்ந்தவர்களுக்கு இதன் உண்மைத் தன்மை நன்றாக விளங்கும்.

அடுத்த தேர்தலை வைத்து நாங்கள் அரசியல் செய்வதாக இருந்தால் ஒரு ரூபாய் செலவில்லாமல் வெறும் வெற்றுக் கோசத்தோடு மக்களை உணர்ச்சிவசப்படுத்தி வீதியில் நின்றாலே மக்கள் எம்பின்னால் அணிதிரள்வார்கள்.

இந்த அரசியலை நாங்கள் செய்வதற்கு முற்பட்டால் நம் சமூகத்திற்கு ஏற்படும் விளைவுகள் பாரதூரமாக அமைந்து விடுமோ என்ற அச்சம் எங்களுக்குள்ளது.

நாங்கள் எங்கள் தலையை அடமானம் வைத்துத்தான் சமூகத்திற்கான அரசியலை செய்து வருகிறோம். எங்கள் முடிவுகளால் பல வெற்றிகளை சமூகத்திற்காக பெற்றுக் கொடுத்துள்ளோம்.

ஆயிரம் ஆயிரம் பிரச்சினைகள் நமது சமூகத்தில் தேங்கி கிடக்கின்றது. இவற்றுக்கான தீர்வை நோக்கியே நாம் பயணிக்க வேண்டிய தேவை உள்ளது.



இந் நிகழ்வில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எல்.ஹூசைனுடீன், காணக்காளர் ஏ.எல்.றிபாஸ், விளையாட்டு உத்தியோகத்தர் எம்.எச்.எம். அஜ்வத், பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்புச் செயலாளர் நௌபர் ஏ.பாவா உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# முஸ்லிம் கட்சிகளின் செயற்பாடுகளால் முழு முஸ்லிம் சமூகத்துக்கும் அவப்பெயர்

### - பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப்

(கந்தளாய் தினகரன், முள்ளிப்பொத்தானை குறூப்,தோப்பூர் குறூப் நிருபர்கள்)

நாட்டில் முஸ்லிம் சமூகத்தின் மீது மாற்று மத சகோதரர்கள் தப்பெண்ணும் கொள்ளும் வகையில், சமூகத்தைக் காட்டிக் கொடுக்கும் வேலையை முஸ்லிம் காங்கிரசும், அகில இலங்கை மக்கள் காங்கிரசும் கைவிட வேண்டும் என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஸாத் பதியுத்தீன் ஆகியோரின் விருப்பத்துடன் தான் அக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் 20 வது திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்ததாக பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் தெரிவிக்கும் காணொளி சமூக வலைத்தளங்களில் தற்போது பரவலாகி வருகின்றது.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் தமது பாராளுமன்ற உறுப்பினர்கள் 20 க்கு ஆதரவாக வாக்களித்ததற்கும் தங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொல்லி வருகின்றனர். இவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.



20 க்கு ஆதரவாக வாக்களித்த தங்களது எம்.பிக்களை கட்சியிலிருந்து விலக்கியுள்ளோம். கட்சியில் வகித்த பதவிகளில் இருந்து அவர்களை விலக்கியுள்ளோம். என்று ஊடகங்களில் அறிக்கை விட்டதைத் தவிர இக்கட்சிகள் இவர்களுக்கெதிராக என்ன நடவடிக்கை எடுத்துள்ளன.

இவர்கள் அங்கொன்றும், இங்கொன்றும் பேசுவதால் தான், இந் நாட்டு முஸ்லிம்கள் பெரும் அவமானங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

முஸ்லிம்கள் நம்பிக்கைக்குரியவர்கள் அல்ல என மாற்று மத சகோதரர்கள் முஸ்லிம் சமுகத்தைப் பற்றி எடை போட இக்கட்சிகளே காரணமாக இருக்கின்றன.

அது மட்டுமல்லாது இன்று இந் நாட்டில் பெரும்பான்மை சமுகத்தினர் முஸ்லிம் சமுகத்தின் மீது தப்பெண்ணம் கொள்வதற்கும் விரோதமான கருத்துக்களை வெளியிடுவதற்கும் இந்த முஸ்லிம் கட்சிகளின் செயற்பாடுகள் தான் காரணமாக அமைந்துள்ளன.

தங்களது சுயநலத்துக்காக சமுகத்திற்கு அவப்பெயரை உருவாக்குவதை முஸ்லிம் கட்சிகள் முதலில் கைவிட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

## பணிபகிஷ்கரிப்பால் பொதுமக்கள் பாதிப்பு

தோப்பூர் குறூப் நிருபர்

திருகோணமலை தோப்பூர் அஞ்சல் அலுவலக தபால் ஊழியர்கள் செவ்வாய்க்கிழமை (14) பணிபகிஷ்கரிப்பில் ஈடுபட்டதால் தபால் நிலையம் மூடப்பட்டிருந்ததையும் பொதுமக்கள் வருகை தந்து திரும்பிச் செல்வதையும் காணமுடிந்தது.

விவசாயக் கொடுப்பணவு பெறுவதற்காகவும், கடிதம் அனுப்புவதற்கும் ஏனைய கொடுப்பனவு பெறுவதற்காகவும் அதிகளவான வயோதிபர்கள் வருகை தந்து திரும்பிச்சென்றதையும் அவதானிக்க முடிந்தது.

நாடளாவிய ரீதியில் தபால் ஊழியர்கள் இன்றைய தினம் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பு கொக்குவிலில் புதிய பொலிஸ் நிலையம்

மட்டக்களப்பு விசேட நிருபர்

பொலிஸ் சேவைகளை நாடிவரும் பொதுமக்களுக்கு சினேகபூர்வமான சேவைகளை வழங்கும் நோக்கோடு புதிய பொலிஸ் நிலையம் மட்டக்களப்பு கொக்குவிலில் ஞாயிற்றுக்கிழமை (12) திறந்து வைக்கப்பட்டது.

அரசின் சௌபாக்கியா திட்டத்தின் கீழ் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரவின் ஆலோசனைக்கிணங்க கிழக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ் மாஅதிபர் கமல் சில்வாவினால் புதிய பொலிஸ் நிலையம் திறந்து வைக்கப்பட்டு, பொலிஸ் வளாகத்தில் மரக்கன்றுகளும் நடப்பட்டன.

மதத் தலைவர்களின் ஆசியுரைகளுடன் ஆரம்பமான இந் நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதத் மாசிங்க, மட்டக்களப்பு பிராந்திய பிரதிப் பொலிஸ் மாஅதிபர் தினேஸ் கருணாநாயக்க, மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் உள்ளிட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

## அ,சேனை தேசிய கல்வியியற் கல்லூரி புதிய பயிலுனருக்கான பதிவு இன்று

(ஒலுவில் விசேட நிருபர்)

அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரிக்கு 2019/2021ம் கல்வியாண்டுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள புதிய பயிலுனர்களுக்கான பதிவு இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளதாக, அட்டாளைச்சேனை தேசிய கல்விக் கல்லூரியின் பீடாதிபதி கே. புண்ணியமூர்த்தி தெரிவித்தார்.

2018ம் ஆண்டு க.பொ.த உயர்தர பப்ரீட்சை பெறுபேறுகளுக்கு அமைய, புதிய பயிலுனர் மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாக கூறினார்.

ஆரம்ப நெறி கற்கை நெறிக்கு 84 பயிலுனர்களும், கணிதம் 18 பயிலுனர்களும், இஸ்லாம் 25 பயிலுனர்களும், விஞ்ஞானம் 15 பயிலுனர்களும், வர்த்தக கணக்கீடு 18 பயிலுனர்களும், விசேட கல்வி 15 பயிலுனர்கள் அனுமதிக்கப்படடுள்ளதாக தெரிவித்தார்.தெரிவு செய்யப்பட்ட பயிலுனர்களுக்கான கடிதங்கள் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், அதில் கோரப்பட்டுள்ள ஆவணங்களுடன் குறித்த நேரத்திற்கு சமுகம் கொடுக்கும் படி கேட்டுள்ளார்.

கொவிட்19 தனிமைப்படுத்தல் நிலையமாக செயற்பட்டு வந்த அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற்கல்லூரி மீள கல்வி நடவடிக்கைகளுக்காக இம் மாதம் 22ம் திகதி கையளிக்கப்பட்டுள்ளதாகவும், பீடாதிபதி கே. புண்ணியமூர்த்தி மேலும் தெரிவித்தார்.

## பணிப்பாளராக நியமனம்



(பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவையின் அம்பாறை மாவட்ட பணிப்பாளராக அட்டாளைச்சேனை வை.எம்.எம்.ஏ பேரவையின் முன்னாள் தலைவரும், ஊடகவியலாளருமான எம்.ஐ.எம். றியாஸ் நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கான நியமனக்கடிதத்தை அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவையின் தேசியத் தலைவர் சஹீட் எம்.றிஸ்மியினால் வை.எம்.எம்.ஏ பேரவையின் தலைமைக் காரியாலயத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.



நிந்தவூர் அஷ்றக் ஜுனியர் பாடசாலையில் தரம் 03 இல் கல்வி பயிலும் எம்.ஜே.பாத்திமா சஹ்றின் மெஹ்விஷ் எனும் மாணவி 'வைற் போட்' ஒன்றை வாங்கி வகுப்பாசிரியை திருமதி. எஸ்.என்.அப்துல் கானிடம் வழங்கும் நிகழ்வில், அதிபர் எம்.ஹபீபுல்லாஹ், உதவி அதிபர் ஏ.பீ.எம்.றுமைஸ் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

(படம்: நிந்தவூர் தினகரன் விசேட நிருபர்)

## அஞ்சல் திணைக்கள உத்தியோகத்தர்கள் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம்

(ஒலுவில் விசேட நிருபர்)

அஞ்சல் திணைக்கள உத்தியோகத்தர்கள் புதிய சம்பள கட்டமைப்பு உள்ளிட்ட 24 கோரிக்கைகளை முன்வைத்து, அஞ்சல் திணைக்களத்தின் தொழிற் சங்ககங்களின் சம்மேளனம் நாடுதழுவிய ரீதியில் செவ்வாய்க்கிழமை (14) ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதுடன், அம்பாறை மாவட்டத்திலும் அஞ்சல் அலுவலகங்கள் மூடப்பட்டு வேலை நிறுத்தில் ஈடுபட்டனர்.

அஞ்சல் உத்தியோகத்தர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் சம்பள அதிகரிப்பு வழங்கப்பட வேண்டும், அஞ்சல் அதிபர்கள் வெற்றிடங்களை நிரப்ப வேண்டும், பெண் உப அஞ்சல் அதிபர்களுக்கு ஏனைய அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் பிரசவ விடுமுறையை வழங்குதல் உள்ளிட்ட பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு, இவ் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதாக, அஞ்சல் திணைக்கள உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் யூ.எல்.எம். பைஸர் தெரிவித்தார்.

அஞ்சல் உத்தியோகத்தர்கள் சங்கம், அகில இலங்கை தமிழ் பேசும் அஞ்சல் ஊழியர் சங்கம், உப தபால் அதிபர்கள் தொழிற்சங்கம், அஞ்சல் மற்றும் தொலைத்தொடர்பு உத்தியோகத்தர்கள் சங்கம் உள்ளிட்ட தபால் திணைக்களத்தின் 23 தொழிற் சங்கங்கள் ஒன்றிணைந்து அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதாகவும் தெரிவித்தார்.



தம்பலகாமம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட முள்ளிப்பொத்தானை மத்திய மருந்தகத்தில் திங்கட்கிழமை (13) மூன்றாவது பூஸ்டராக தடுப்பூசி ஏற்றும் பணி இடம்பெற்றது. 60 வயதுக்கு மேற்பட்டோர்களுக்கான பூஸ்டர் தடுப்பூசியாக பைசர் தடுப்பூசி வழங்கப்படுகிறது. முன்னர் இரு டோஸ்களையும் பெற்றவர்கள் மூன்றாவதாக இத் தடுப்பு மருந்தினை ஆர்வத்துடன் பெற்று வருகிறனர்.

(படம்; முள்ளிப்பொத்தானை குறூப் நிருபர்)

# நகர்வலம்



## மூன்று கட்டங்களாக வீதிகளை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

### அநுராதபுரம் மாநகர முதல்வர்

**திறப்பனை தினகரன் நிருபர்**

அநுராதபுரம் மாநகர சபை பிரிவின் கீழ் உள்ள அனைத்து வீதி கட்டமைப்புக்களையும் மூன்று கட்டங்களாக அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிட்டுள்ளதாக அநுராதபுரம் மாநகர சபையின் முதல்வர் எச். பி.சோமதாச தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 2022 ஆம் வருட இறுதிக்குள் இவ் அபிவிருத்தி வேலைத் திட்டத்தை நிறைவு செய்ய தான் எதிர்பார்த்துள்ளதாகவும் தெரிவித்துள்ள அவர், இது சம்பந்தமான கேள்விப் பத்திரங்களை 2022 ஜனவரி மாதமளவில் கோருவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இதற்காக வீதி அபிவிருத்தி பொறியியலாளர்களின் ஒத்துழைப்பை பெற்று, இவ் அபிவிருத்தி வேலைத் திட்டத்தை நடைமுறை படுத்தவுள்ளதாக அண்மையில் நடைபெற்ற சபையின் மாதாந்த அமர்வின் போது அவர் தெரிவித்துள்ளார்.

அநுராதபுர மா நகர வீதி கட்டமைப்புக்கள் அபிவிருத்தியின் பின்பு நகரத்துடனான போக்குவரத்துக்களை இலகுவில் மேற்கொள்ளும் வாய்ப்பு பொது மக்களுக்கு கிடைக்கும் என எதிர்பார்ப்பதாகவும் நகர முதல்வர் மேலும் தெரிவித்தார்.



கொழும்பு, கொட்டாஞ்சேனை, ஜிந்துப்பிட்டி வீதி 61 ஆம் தோட்டத்திலமைந்துள்ள ஸ்ரீ தர்மசாஸ்தா ஆலயத்தின் கீழ் வேப்பமரத்தடியில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் சோட்டானி கரை பகவதி அம்மனின் திருவிழா பூசைகள் ஆரம்பமாகின. இதனை தொடர்ந்து சோட்டாரை அம்மனின் திருஉருவ சிலையும் பிரதிஷ்டை செய்யப்பட்டது. பிரதிஷ்டா பிரதம குருக்கள் சிவஸ்ரீ சிவகாந்த குருக்கள், பிரம்மஸ்ரீ கா. சுதாகர் சர்மா ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர். (படம்: எம். நசார்)

## திஸ்ஸமகாராமை பிரதேச சபை 2022 பட்ஜட் நிறைவேற்றம்

### ஐ.தே.க ஆதரவாக வாக்களிப்பு

**ஹம்பாந்தோட்டைகுறூப் நிருபர்**

திஸ்ஸமகாராமை பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டம் 17 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளதாக அதன் தலைவர் டப்ளியூ. ஜீ. உபுல் நேற்று (14) தெரிவித்தார்.

வாக்களிப்பின் போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முன்னணியினரோடு இணைந்து ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களும் வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தமை விசேட அம்சமாகும். மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர்கள் அனைவரும் வரவு செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களித்தமை குறிப்பிடத்தக்கது.

பிரதேச கைத்தொழில் பேட்டைகளில்

## தொழிற்சாலைகள் அமைக்க குத்தகை ரீதியில் காணிகள்

பிரதேச தொழிற்சாலைகள் வேலைத்திட்டமானது, பிரதேச ரீதியாக கைத்தொழில்களை ஊக்குவிக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் முக்கியமான வேலைத்திட்டமாகும். குறித்த வேலைத்திட்டத்திற்காக பொருத்தமான முதலீட்டாளர்களை அடையாளங் காண்பதற்காக, 1990 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்க கைத்தொழில் ஊக்குவிப்புச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள 'பிரதேச கைத்தொழில் சேவைகள் குழு' மற்றும் கைத்தொழில் அமைச்சின் கீழ் காணப்படும் 'அமைச்சின் கருத்திட்டங்கள் மதிப்பீட்டுக் குழு' கருத்திட்ட முன்மொழிவுகளின் முழுமையான மதிப்பீட்டின் பின்னர் மேற்கொள்ளப்படும். அதற்கமைய, மேற்குறிப்பிட்ட குழுக்கள் மூலம் 27 கருத்திட்ட முன்மொழிவுகளை ஆராய்ந்து அவற்றை நடைமுறைப் படுத்துவதற்காக 15 கைத்தொழில் பேட்டைகளில் காணித் துண்டுகளை ஒதுக்கி வழங்குவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்டுள்ள முதலீட்டாளர்களால் 4,523.34 மில்லியன் ரூபாய்களை முதலிடுவதற்கும் 2477 நேரடி வேலை வாய்ப்பு அவகாசங்களை உருவாக்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, குறித்த முதலீட்டாளர்களுக்கு 35 வருடகால நீண்டகால குத்தகை அடிப்படையில் காணித்துண்டுகளை ஒதுக்கி வழங்குவதற்காக கைத்தொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.



அநு,/கெப்பித்திகொள்ளாவ பகுதியில்

## "சௌபாக்யா" திட்டத்தின் கீழ் குடிநீர் திட்டத்திற்கு அடிக்கல்

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் 'சௌபாக்யா' கொள்கை பிரகடனத்தின் கீழ், 2025 ஆண்டில் அனைவருக்கும் சுத்தமான குடிநீர் வேலைத்திட்டத்தின் கீழ் விசேட நீர் விநியோகத்திட்டமொன்று அநுராதபுரம் மாவட்ட கெப்பித்திகொள்ளாவ கனுகஹவெவ மற்றும் ஹல்மில்ல கெட்டிய பகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதனை நீர்வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

சுமார் 267 மில்லியன் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இத்திட்டம் 2022 ஆம் ஆண்டு மக்களின் பாவனைக்கு கையளிக்கப்படவுள்ளது. இதன்மூலம் கனுகஹவெவ மற்றும் ஹல்மில்ல கெட்டிய கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள ஆறு கிராமங்களைச் சேர்ந்த 700 க்கும் அதிகமான குடும்ப மக்கள் நன்மையடையவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



இந் நிகழ்வில் காணி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன, தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் வடமத்திய மாகாண உதவி பொது முகாமையாளர் சுதத் ரத்நாயக்க, அநுராதபுரம் மாவட்ட அரசாங்க அதிபர் ஜனக ஜயசுந்தர உள்ளிட்ட உயர் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

## புத்தளத்தில் 'Pfizer' தடுப்பூசி

**(புத்தளம் தினகரன் நிருபர்)**

புத்தளம் பிரதேச செயலகத்திற்குட்பட்ட 30 வயதிற்கு மேற்பட்ட இரண்டாவது கொவிட் 19 தடுப்பூசி பெற்று 3 மாதங்கள் பூர்த்தியானோருக்கான மூன்றாவது (Pfizer) தடுப்பூசி ஏற்றும் நிகழ்வுகள் புத்தளம் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய பணிமனையுடன் இணைந்ததாக நகரபிதா எம்.எஸ்.எம். ரபீக்கின் வழிகாட்டலில் நகரசபையின் பூரண ஒத்துழைப்போடு நடைபெற்று வருகின்றன.

மூன்றாவது தடுப்பூசியேற்றும் நிகழ்வுகள் 16 ம் திகதி வியாழன் தில்லையடி, ரத்மல்யாய, புத்தளம் வடக்கு,புத்தளம் மரைக்கார் வீதி, ஜே.பி.லேன் ஆகிய பகுதி வாழ் மக்களுக்கும், 17ம் திகதி வெள்ளிக்கிழமை பழைய ஜும்ஆ பள்ளி, புதுக்குடியிருப்பு, பெரியபள்ளி பிரிவு போன்ற பகுதிகளில் வசிப்போருக்கும் காலை 8 மணி முதல் பகல் 2 மணிவரை தொடர்ந்து இரு தினங்களாக புத்தளம் நகர மண்டபத்தில் நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

முதல் இரண்டு தடுப்பூசிகள் வேறு எந்த வகையைப் பெற்றிருப்பினும் மூன்றாவது தடுப்பூசியாக Pfizerயைப் பெற முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## புத்தளத்தில் இலவச வழிகாட்டல் கருத்தரங்கு

**(புத்தளம் தினகரன் நிருபர்)**

மத்திய அரசாங்கத்தினால் முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கு 2019 ஆம் ஆண்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டு, கொரோனா காரணமாக பரீட்சை பிற்போடப்பட்டிருந்த நிலையில், எதிர்வரும் 2022 ஜனவரி 30 ஆம் திகதி பரீட்சை நடைபெற ஏற்பாடாகி உள்ளது.

இதற்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளை பரீட்சைக்கு தயார்படுத்தும் நோக்கில் இம்முறையும் வழமை போல புத்தளம் நேவிகய்ஸ் அமைப்பினால் இலவச வழிகாட்டல் கருத்தரங்குகள் ஏற்பாடு செய்யப்படவுள்ளன.

இதில் பங்குபற்ற விரும்புவோர், தங்களது பெயரை 0789391451 என்ற இலக்கத்துக்கு குறுந்தகவல் மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

கருத்தரங்கு தொடர்பில் மேலதிக தகவல்கள் பின்னர் வெளியிடப்படும்.

## முதுந்துவ, இப்பாகமுவவில் இரத்ததான நிகழ்வு

ஹொகரல்ல பொலிஸ் நிலையமும் இலக்கம் 526 மடிகே முதுன்துவ மக்கள் பாதுகாப்பு கமிட்டியும் இணைந்து முதன் முறையாக மாபெரும் இரத்ததான நிகழ்வை அண்மையில் வெகுசிறப்பாக நாடாத்தியது.





இவ் இரத்ததான நிகழ்வுக்கு இன, மத, மொழி பேதமின்றி மூவின ஊர்மக்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. அரசியல் வாதிகள் வருகையளித்து உறுதுணையாய் நின்றது மட்டுமன்றி அனுசரணை வழங்கியமையும் விசேட அம்சமாகும்.

இந்நிகழ்வுக்கு ஊடக அனுசரணையை ஜவய மீடியா வழங்கியதுடன் இரத்தம் வழங்கிய நல்லுள்ளங்களுக்கு சமுர்த்தியால் சான்றிதழ் வழங்கப்பட்டது மட்டுமன்றி ஏற்பாட்டுக்குழுவால் அன்பளிப்புப் பொதியொன்றும் வழங்கப்பட்டமை வரவேற்கத்தக்க விடயமாகும்.

பேருவளை பகுதியில்...

## "கொவிட் 19" காலப்பகுதியில் சேவையாற்றியோர் கௌரவிப்பு

பேருவளை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் 'கொவிட் 19' காலப்பகுதியில் அர்ப்பணிப்போடு சேவையாற்றி பிரதேச மக்களுக்கு தடுப்பூசி வழங்கும் நடவடிக்கையை மும்முரமாக முன்னெடுத்த பிரதேச சுகாதார பிரிவினர் மற்றும் அவர்களுக்கு உதவியாக செயற்பட்டவர்களை கௌரவிக்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை (12) மொரகல்ல, லாகூன் வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது.

'Covid Beruwala' குழுவினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இந் நிகழ்வில் பேருவளை உதவி அரசாங்க அதிபர், பேருவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, பேருவளை பிரதேச சபைத்தலைவர் மேனக விமலரட்ன உட்பட பேருவளை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தைச்சேர்ந்த சுகாதார வைத்திய அதிகாரிகள், தாதிய உதவியாளர்கள், மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், சமூக சேவை ஆர்வலர்களும் இதில் கலந்து சிறப்பித்ததாக விழாக்குழுவின் சார்பாக மபாஸ் மஷ்ஹூர் தினகரனுக்கு தெரிவித்தார்.



## 2022 கல்வி ஆண்டிற்கு புது மாணவர் அனுமதி

**(திறப்பனை தினகரன் நிருபர்)**

இக்கிரிக்கொல்லாவ ஹமீதிய்யா அரபு கல்லூரிக்கு 2022 ஆம் கல்வி ஆண்டுக்கான புதிய மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. இதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் டிசம்பர் 19 ஞயிற்றுக்கிழமை கல்லூரி வளாகத்தில் நடைபெறும் என கல்லூரி அதிபர் அஷ்ஷெய்க் ஆதம் யாசின் ( ரஹ்மானி ) தெரிவித்தார்.

ஷரீஆ ஹிப்ல் பிரிவுகளாக இயங்கும் இக் கல்லூரியில் அரபு, இஸ்லாமிய நாகரீக துறையுடன் அரச அங்கீகாரம் பெற்ற பாடசாலை கல்வி பாடத்திட்டத்தின் படி பாடசாலை கல்வியும், அரசாங்க பரீட்சைகளுக்கான பாடங்கள் உட்பட ஆங்கிலம், சிங்களம் போன்ற பாடங்களும் இங்கு போதிக்கப்படுகின்றன.

இக் கல்லூரியில் சேர்ந்து கல்வி பயில விரும்பும் மாணவர்கள் தொடர்பாக கல்லூரி அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு கல்லூரி நிர்வாகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.



துறைமுக கப்பல்துறை அமைச்சரின் வேலைத்திட்டத்தின் கீழ் தொடங்கொட பிரதேச பிரிவைச் சேர்ந்த அரபலாகந்த பாரதி தமிழ் வித்தியாலயம் மற்றும் குளோடன் வித்தியாலய முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் பாடசாலையில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு வருகை தந்த அதிதிகள் மாணவர்களால் வரவேற்கப்படுவதையும் அமைச்சரின் இணைப்புச் செயலாளர் ரஸிக மகேஷ் மாணவர் சிறார்களுக்கு பொதிகளை வழங்குவதையும் படங்களில் காணலாம். (படம்: பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

## அட்டோர்ணி அதிகாரப் பத்திரத்தை இரத்துச் செய்தல்

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் கம்பஹா மாவட்டத்தில் மினுவாங்கொட பிரதேச செயலாளர் பிரிவில், மினுவாங்கொட, ஹொரம்பெல்ல, கல்கந்த 678ஆம் இலக்க முகவரியில் வசிக்கும் ராஜபக்ஷகே தீபால் ராஜபக்ஷ (தே.அ.அ.இல. 740785176V) ஆகிய நான் கம்பஹா பிரசித்த நொத்தாரிசு, சட்டத்தரணி பீ.ஆர்.ஏ. விஜேசிங்க, 2019/ஒக்/25ஆம் திகதி எழுதி சான்றுபடுத்தப்பட்ட 3939ஆம் இலக்க அட்டோர்ணி அதிகாரப் பத்திரத்தின் மூலம் எனது அட்டோர்ணி தத்துவதாரராக மினுவாங்கொட, ஹொரம்பெல்ல, பொலானேகம, 678/பீ எனும் இலக்க முகவரியில் வசிக்கும் ரேணுகா மல்காந்தி ராஜபக்ஷ (தே.அ.அ.இல. 687343689V) என்பவர் நியமிக்கப்பட்டதை 2021-12-15ஆம் திகதி முதல் இத்தால் சட்டபூர்வமான இரத்துச் செய்து வலுவிழக்கச் செய்யப்பட்டதாகவும் இதன் பிறகு அந்த அட்டோர்ணி அதிகாரப் பத்திரத்திற்கு எந்தவித சட்டபூர்வமான அங்கீகாரம் மற்றும் செல்லுபடித்தன்மை இல்லை என்பதாகவும், அதற்கு எவ்வித பொறுப்பும் இல்லையெனவும் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசிற்கும், அக்குடியரசின் பொதுமக்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன்.

**ராஜபக்ஷகே தீபால் ராஜபக்ஷ**

## அற்றோணித்தத்துவத்தை இல்லாதொழித்தல்

கண்டி, அலவத்துகொட, பளகடுவ, 224/3, என்ற இலக்கத்தைச் சேர்ந்தவரும் 641741477V என்ற இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையின் உரிமையாளருமாகிய மொஹெமெட் அலி பலீன் ஜவ்வர் சாதி ஆகிய நான் 1420 என்ற இலக்கமும் 2018 மார்ச் 15 ஆம் திகதியும் கண்டி பிரசித்த நொத்தாரிஸ் ஏ.பி. அமில டி. அம்பகல என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் அலவத்துகொட, பளகடுவ, 449 என்ற இலக்கத்தைச் சேர்ந்த பொல்வத்த தூரகே துஷாரி மானெல் குமுது என்பவரை நியமித்த மேற்குறிப்பிட்ட அற்றோணித்தத்துவமானது உடனடியாகவே என்னால் இரத்துச் செய்யப்பட்டுள்ளது எனவும் அதனால் மேற்குறிப்பிட்ட அற்றோணித்தத்துவமானது சட்டத்தில் எவ்வித பெறுமதியும் அற்றதெனவும் இந்த அற்றோணித்தத்துவத்தினால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு கொடுக்கல் வாங்கலுக்கும் எனக்கு எவ்வித கடப்பாடுமில்லை என்பதை இலங்கை பொது மக்களுக்கு இத்தால் அறியத் தருகின்றேன்.

**மொஹெமெட் அலி பலீன் ஜவ்வர் சாதி, 2021 டிசம்பர் 10 ஆம் திகதியன்று**

## இலங்கை முதலீட்டுச் சபை

# பெறுகை அறிவித்தல்

பின்வரும் பெறுகைக்கான விலைக்கோரல் விளம்பரம் 2021 டிசம்பர் 15 ஆம் திகதிய புதன்கிழமை டெய்லி நியூஸ் (Daily News) பத்திரிகையிலும் மற்றும் டிசம்பர் 19ஆம் திகதிய ஞாயிற்றுக்கிழமை சண்டே ஒப்சேர்வர் (Sunday Observer) பத்திரிகையிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

**"CONSTRUCTION OF A LOADING BAY AND SUPPLY, DELIVERY, INSTALLATION & COMMISSIONING OF A WEIGHBRIDGE FOR SOLID WASTE SEPARATION YARD AT KANDY INDUSTRIAL PARK, KENGALLA"**

**CONTRACT No: BOI/TS/KIP/2021/04/06/002**

மேற்படி பெறுகைக்கு இயைபான கேள்விப் படிவங்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதுடன் விலைமனுக்களைச் சமர்ப்பிக்க ஆர்வம் காட்டும் ஒப்பந்தக்காரர்கள் மேற்குறிப்பிடப்பட்ட பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**தலைவர்,**
**இலங்கை முதலீட்டுச் சபை.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## வடமேல் மாகாண ஆயுர்வேத வைத்தியசாலைகளுக்கு சமைத்த உணவு வழங்குதல் – 2022

வடமேல் மாகாண ஆயுர்வேதத் திணைக்களத்தின் சார்பாக அதன் பெறுகைக்குழுத் தலைவரினால் பின்வரும் ஆயுர்வேத வைத்தியசாலைகளுக்கு 2022.03.01ஆம் திகதி முதல் 2023.02.28ஆம் திகதி வரையான ஒரு வருட காலத்திற்கு சமைத்த உணவு வழங்குவதற்காக 2022.01.05ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இத்தால் கோரப்படுகின்றன.

02. உணவு சுற்று ஒன்றிற்கான உணவு அட்டவணையானது விலைமனுப் படிவங்களுடன் வழங்கப்படும்.

03. குருநாகல், டீ.பீ. வெலகெதர ஆயுர்வேத வைத்தியசாலை, குருநாகல், டீ.பீ. வெலகெதர ஆயுர்வேத வைத்தியசாலை (கட்டண வார்ட்) மற்றும் நாரம்மல, முருதென்கே, தொடங்கஸ்லந்த, கிரிமெட்டியான, நெதலகமுவ, மாதம்பை, அம்பன்பொல, வாரியப்பொல மற்றும் புத்தளம் போன்ற கிராமிய வைத்தியசாலைகளுக்கு மேற்படி சேவைகளை வழங்குதல் வேண்டும்.

04. விலைமனுதாரர் ஒருவர் மேற்படி வைத்தியசாலையொன்றிற்காக அல்லது பலவற்றிற்காக விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாமென்பதுடன், ஒவ்வொரு வைத்தியசாலைக்கும் தனித்தனியான விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

05. குருநாகல், கொழும்பு வீதி, வடமேல் மாகாண ஆயுர்வேதத் திணைக்களத்தின் நிதி உதவியாளருக்கு 2021.12.15ஆம் திகதி முதல் 2022-01-04ஆம் திகதி வரையில் 1,500.00 ரூபாவுக்கான மீளளிக்கப்படாத வைப்பு மற்றும் பின்வரும் வகையில் மீளளிக்கப்படும் வைப்புத் தொகையைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டுக்களை சமர்ப்பித்து வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 மணி வரை விமைனுப் படிவங்களை பெற்றுக்கொள்ளலாம். டீ.பீ. வெலகெதர ஆயுர்வேத வைத்தியசாலைக்கு 50,000.00 ரூபா மற்றும் டீ.பீ. வெலகெதர ஆயுர்வேத (கட்டண) வைத்தியசாலைக்கு 5,000.00 ரூபா மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு கிராமிய வைத்தியசாலைகளுக்கும் 10,000.00 ரூபா வீதம் மீளளிக்கப்படும் வைப்புத் தொகையைச் செலுத்துதல் வேண்டும். சித்திகரமான விலைமனுதாரர் ஒப்பந்தத் தொகையின் 10% செயலாற்றுப் பிணையமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

06. 2021.12.29ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனு முன்னோடி சந்திப்பு இவ்வலுவலகத்தில் நடைபெறும்.

07. முத்திரையிடப்பட்ட விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறைகளின் இடது பக்க மேல் மூலையில் "சமைத்த உணவுகளை வழங்குவதற்கான விலைமனு .................... (வைத்தியசாலையின் பெயர்)" என்று குறிப்பிட்டு, விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினமான 2022.01.05ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்னர் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்புவதற்கு அல்லது குறித்த முகவரியில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

08. 2022.01.05ஆம் திகதி மு.ப. 10.10 மணிக்கு வடமேல் மாகாண ஆயுர்வேதத் திணைக்களத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் இவ்வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளலாம்.

09. இவ்விலைமனுக்கோரல் தொடர்பான மேலதிக விபரங்களை 037-2228408 எனும் இலக்கத்தைத் தொடர்பு கொண்டு மாகாண ஆயுர்வேத ஆணையாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**எஸ்.எம்.ஏ.ஆர். செனெவிரத்ன**
**பெறுகைக்குழுத் தலைவர்,**
**வடமேல் மாகாண ஆயுர்வேத ஆணையாளர்,**
**வடமேல் மாகாண ஆயுர்வேத ஆணையாளர் அலுவலகம்,**
**குருநாகல்.**

## வர்த்தக அமைச்சு

## கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனம்

# பாவிக்கப்பட்ட லொறிகளை விற்பனை செய்வதற்காக கேள்வி கோரல்

கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்திற்கு உரித்தான பாவிக்கப்பட்ட லொறிகளுக்காக முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கொழும்பு-10, டீ.ஆர். விஜேவர்தன மாவத்தை, 105ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள சதோச போக்குவரத்துப் பிரிவில் 2021-12-17ஆம் திகதி முதல் 2021-12-31ஆம் திகதி வரையில் அலுவலக நேரத்தினுள் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை வரையில் வாகனங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம். மேலதிக விபரங்களை செயற்பாட்டு முகாமையாளர் (போக்குவரத்து) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (0777385290)

விண்ணப்பமொன்றின் பொருட்டு 1000.00 ரூபா வீதம் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி சதோச பிரதான அலுவலகத்தின் பெறுகைப் பிரிவிலிருந்து கேள்விப் படிவங்கள் மற்றும் நிபந்தனை விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விகளைச் சமர்ப்பிக்கும் போது ஒவ்வொரு உருப்படியின் பொருட்டும் 10,000.00 ரூபா மீளளிக்கப்படும் கேள்விப் பிணைத் தொகையொன்றைச் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் அதை 2021-12-31ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் சதொச பிரதான அலுவலகத்தின் காசாளருக்குச் செலுத்துதல் வேண்டும்.

கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் 2021-12-31ஆம் திகதி ந.ப. 12.00 மணியாகும் என்பதுடன் அவ்வேளையிலேயே கேள்விப் படிவங்கள் திறக்கப்படும்.

இறுதித் தீர்மானத்தை கேள்விச் சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம்,**
**இல. 27, வொக்ஷோல் வீதி,**
**கொழும்பு-02.**

# காணி எடுத்தற் சட்டம்

## (அத்தியாயம் 460)

## 7ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

**எனது இல : WGSWD&EIP/ACQ/KB/15**
**காணி அமைச்சின் இல : 4-3/10/2012/LRB/323**

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டுகள் அரசுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இக் காணித் துண்டுகள் தொடர்பாக, காணி எடுத்தற் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் நடாத்தப்படவுள்ள நட்டஈட்டு உரித்து விசாரணைகள், 2021 ஆம் வருடம் 12 மாதம் 28 ஆம் திகதியிலிருந்து தொடர்ந்து நடைபெறும். மேலதிக விபரங்களுக்கு இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 2021.11.23 ஆம் திகதிய 2255/11 ஆம் இலக்க அதிவிசேட வத்தமானியைப் பார்க்க.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| 1. | மாகாணம் | : மேல் மாகாணம் |
| 2. | மாவட்டம் | : கொழும்பு |
| 3. | பிரதேச செயலாளர் பிரிவு | : கெஸ்பேவ |
| 4. | கிராம உத்தியோகத்தர் பிரிவு | : இல 576/B- தும்போவில தெற்கு<br>இல. 575- போக்குந்தர<br>இல 576/A - தும்போவில வடக்கு. |
| 5. | கிராமம் | : தும்போவில மற்றும் போக்குந்தர |
| 6. | வரைபட இல. | : |
| | கடத்திரள் வரைபட இல. 521203<br>*(18 தொகுதிகளில், தொகுதி இல. 01, தாள் இல 5),*<br>கடத்திரள் வரைபட இல. 521211<br>*(07 தொகுதிகளில், தொகுதி இல 07, தாள் இல. 2),*<br>கடத்திரள் வரைபட இல. 521211<br>*(07 தொகுதிகளில், தொகுதி இல. 01, தாள் இல. 3),*<br>கடத்திரள் வரைபட இல. 521203<br>*(18 தொகுதிகளில், தொகுதி இல 07, தாள் இல. 5).* | |
| 7. | துண்டு இல. | : மேலே காட்டப்பட்ட கடத்திரள் வரைபடங்களில் காட்டப்பட்ட காணித் துண்டுகள் (216 காணித் துண்டுகள்) |
| 8. | முழு விஸ்தீரணம் | : 20.7909 ஹெக்டயார் |

**எச். திலக்கவர்தன,**
**காணி எடுத்தல் உத்தியோகத்தர்,**
**வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டம்.**
**கெஸ்பேவை பிரதேச செயலாளர் பிரிவு**
**வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல்**

**கருத்திட்டத்தின் காணி எடுத்துக் கொள்ளல் அலுவலகம்,**
**இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம்,**
**இல. 3, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, வெலிக்கடை ராஜகிரிய**
2021.12.08

## சுற்றுலாத்துறை அமைச்சு

## இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை (SLTDA)

# விலைமனு அறிவித்தல் – தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்

# விலைமனுக்களுக்கான அழைப்பு

கீழே விபரிக்கப்பட்டவாறான பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| இல. | விளக்கம் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப்படாத கட்டணம் (இ.ரூபாவில்) | விலைமனுப்பிணை தேவைப்பாடுகள் (இல.ரூபாவில்) | விலைமனு முன்னோடிக் கூட்டம் திகதி மற்றும் நேரம் | மூடும் திகதி மற்றும் நேரம் | CIDA தேவைப்பாடு |
|---|---|---|---|---|---|---|
| | **வேலைகள்** | | | | | |
| 1. | கல்பிட்டி, கல்பிட்டி தீவின் பொழுது போக்கும் இடத்தில் வேலைத்தள அலுவலக கட்டிட நிர்மாணம் | 10,000 | 650,000 | 2021 டிசம்பர் 22 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு கல்பிட்டி சுற்றுலாத்துறை தகவல் நிலையம், கரமபயபலவிய, கல்பிட்டியவில். | 2022 சனவரி 4 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு | கட்டிட நிர்மாணித்தில் சி-4 அல்லது மேற்பட்ட தரம். |

1. விலைமனுக்கோரல் ஆவணத்தில் குறிப்பிட்டவாறு சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் வியாபார பதிவு செய்தல் மற்றும் தகுதித்தன்மை தகவுத்திறனையும் கொண்டிருத்தல் வேண்டும்.
2. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை 0112426800 (நீடிப்பு 305,277) என்ற இலக்கங்களுடாக இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் பெறுகைக்கான உதவி பணிப்பாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். இலத்திரனியல் தபால் முகவரி: உதவிப் பணிப்பாளர் பெறுகையின் amilam@srilanka.travel என்பதன் மூலமாகவும் பெற்று விலைமனுக்கோரல் ஆவணங்களை கொழும்பு-03, காலி வீதி, 80 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் 4 ஆம் மாடியிலுள்ள பெறுகைப் பிரிவில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
3. 2021 டிசம்பர் 14 ஆம் திகதியிலிருந்து 2022 சனவரி 3 ஆம் திகதி வரையும் sltdaproc@srilanka.travel என்ற மின்னஞ்சல் முகவரிக்கு செலுத்தப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்தின் பணக்கொடுப்பனவு துண்டுடன் விண்ணப்பதாரியின் தலைப்புக் கடிதத்தில் எழுதப்பட்ட எழுத்து மூலமான விண்ணப்பத்தின் மூலமாக ஆங்கில மொழியிலுள்ள முழுமையான விலைமனுக்கோரல் ஆவணமானது மின்னஞ்சல் மூலமாக வழங்கப்படும். (பணக்கொடுப்பனவானது இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் 7119413 என்ற இலங்கை வங்கியின் கோப்பரேட் கிளையில் செலுத்தப்படல் வேண்டும் (குறிப்பு: வரவு வைக்கும் வைப்பாளரின் விபரங்கள் மற்றும் வரவு வைப்பதற்கான நோக்கமும் ''மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம்'' என வைப்பாளரின் விபரங்கள் மற்றும் வரவு வைப்பதன் நோக்கத்தில் தயவு செய்து குறிப்பிடப்படல் வேண்டும். பணக்கொடுப்பனவானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டுமெனவும் ஏனைய பணக்கொடுப்பனவுகள் அனுமதிக்கப்பட மாட்டாது என்பதையும் கவனிக்கவும்).
4. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் விலைமனுக்களை மூடும் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அல்லது கொழும்பு-03, காலி வீதி, 80 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் 4 ஆம் மாடியிலுள்ள பெறுகைப் பிரிவின் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரிடம் நேரடியாக ஒப்படைக்கப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் பெறுகையின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் ஆகியன எழுதப்படல் வேண்டும்.
5. அனைத்து விலைமனுக்களும் தரை மாடியிலுள்ள வருகைதருபவர்களின் பிரதேசத்தில் அவைகளை மூடிய பின்னர், சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.
6. இலங்கை அரசாங்கத்தின் 1987 ஆம் ஆண்டின் பொது ஒப்பந்தங்கள் சட்ட 3 மற்றும் இதன் பின்னரான வர்த்தமானி அறிவித்தல்களுக்கு (பிசிஏ-3 படிவம்) ஆகியவற்றிற்கு அமைவாக இலங்கையின் பொது ஒப்பந்தங்கள் பதிவாளரினால் வழங்கப்படும் பதிவுச் சான்றிதழுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
7. விலைமனுப்பிணையானது இலங்கை மத்திய வங்கியின் கீழ் செயற்படும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டிருப்பதுடன் விலைமனுக்கோரல் ஆவணத்தில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறு விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 119 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. விலைமனுக்கோரல் ஆவணத்தில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறு விலைமனுக்கள் 91 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
9. சுற்றுலாத்துறை அமைச்சு, இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழுள்ள வேறேதாவது நிறுவனங்களின் ஊழியரொருவருடன் நெருங்கிய உறவு முறையை கொண்டிருக்கும் ஊழியரொருவர் அல்லது கம்பனியொன்று மற்றும்/அல்லது நபரொருவர் ஒப்பந்தத்தை பெற்றுக் கொள்ளும் தகுதியை இழந்து விடுவார்.
10. திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதி தீர்மானமாகும். மேலும், ,Rmm ஆனது எந்தவொரு காரணத்தையும் முன்வைக்காமல் எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக் கொள்ளவதற்கும் அல்லது எந்தவொரு விலைமனுவையும் நிராகரிப்பதற்கான உரிமையை கொண்டிருப்பதுடன் ,Rmm ஆனது விலைமனுக்களை தயாரித்தல் அல்லது அவற்றை ஒப்படைத்தல் ஆகியவற்றிற்காக வளமுள்ள விலைமனுதாரர்களினால் செலவிடப்படும் எவ்வித ஆகுசெலவுகள் அல்லது எவ்வித செலவினங்களுக்கும் பொறுப்பேற்க மாட்டாது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை.**

## பிரதான செயலாளர் அலுவலகம் - மேல் மாகாணம்

# மேல் மாகாண சபை அலுவலக பணியாட் தொகுதியினருக்கு போக்குவரத்துச் சேவைகளை வழங்குவதற்கான விலைமனு கோரல்

பத்தரமுல்ல டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, மேல் மாகாண சபை அலுவலகக் கட்டிடத் தொகுதியில் கடமையாற்றும் பணியாட் தொகுதியினருக்கு 2022ஆம் வருடத்தினுள் போக்குவரத்துச் சேவைகளை வழங்குவதற்காக பொருத்தமான சேவை வழங்குநரைத் தெரிவு செய்து கொள்ளும் பொருட்டு மேல் மாகாணத்தில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

2021-12-15ஆம் திகதி முதல் 2021-12-22ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை ஒரு விண்ணப்பப் படிவத்திற்கு மீளளிக்கப்படாத 2500.00 ரூபா மற்றும் மீளளிக்கப்படும் வைப்புக் கட்டணமாக 10,000.00 ரூபாவை பத்தரமுல்ல, கொஸ்வத்த, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, இல. 204, பிரதான செயலாளர் அலுவலகத்தின் 6ஆம் மாடியில் அமைந்துள்ள நிதிப் பிரிவிற்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை 4ஆம் மாடியில் அமைந்துள்ள பெறுகைப் பிரிவிற்குச் சமர்ப்பித்ததன் பின் விலைக்கோரல் விண்ணப்பத் தொகுதியொன்றைப் பெற்றுக்கொள்ளலாம். இக்காலப்பகுதியில் பிரதான செயலாளர் அலுவலக (நிர்வாகப்) பிரிவில் அல்லது பிரதான செயலாளர் அலுவலகத்தின் adm.chiefsec.wp.gov.lk எனும் இணையதளத்தின் ஊடாக விலைக்கோரல் ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும். மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு, வெவ்வேறான உறைகளில் இட்டு அவ்விரு உறைகளையும் 10''x4'' அளவிலான கடித உறையொன்றில் உள்ளிட்டு 2021-12-23ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்கு முன் தலைவர், பெறுகைக் குழு, பிரதான செயலாளர் அலுவலகம், நான்காம் மாடி (04), 'மேல் மாகாண சபைக் கட்டிடம்', இல. 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது கணக்காளர் (நிர்வாகம்) அவர்களின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நேரில் கொண்டு வந்து உள்ளிடல் வேண்டும். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''மேல் மாகாண சபை பணியாட் தொகுதியினருக்கு போக்குவரத்து சேவைகளுக்காக விலைமனு கோரல்'' எனக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

விலைக்கோரலைக் கையளித்தல் தொடர்பான இறுதித் தீர்மானத்தை பெறுகைக்குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

கவனிக்கவும்: இந்த விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு பிரதான செயலாளர் அலுவலகத்தினால் வழங்கப்பட்ட ஆவணங்களை மட்டும் பயன்படுத்துதல் வேண்டும். அவ்வாறல்லாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை 0112093249 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக கணக்காளர் (நிர்வாகம்) அவர்களைத் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**பிரதான செயலாளர் அலுவலகம்,**
**மேல் மாகாணம்,**
**இல. 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல.**
**2021-12-15**

# நீர் வழங்கல் அமைச்சு

## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை

# விலைக்கோரல் அறிவித்தல்

பின்வரும் வேலைகள் / வழங்கல்கலுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை சார்பில் பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவை யான விலை மனு பிணை | தேவையான தகைமை | VAT உட்பட மதிப்பிடப்படும் செலவு (ரூபா) | தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| | **சிவில் கேள்விகள்** | | | | | | |
| 1 | மொரவக்க நீர் வழங்கல் திட்டத்தில் ஒரு நாளைக்கு 10,000m3 நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியை நிர்மாணித்தல்<br>ஒப்பந்த இல : **NWSDB/S/CP/A4-66/GOSL/2021/1** | 100,000/- + VAT ** | ரூபா 8,290,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C1 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 828.8 மில்லியன் | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328 Fax: 011-2635885 | 17/01/2022 மு.ப. 10.00 |
| 2 | உடுகமயில் நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியை விஸ்தரித்தல் மற்றும் மூல நீர் பிரதானத்தை வழங்குதல் மற்றும் பதித்தல், உள்ளீர்ப்பு கிணறை நிர்மாணித்தல்.<br>ஒப்பந்த இல : **NWSDB/S/CP/A2-45/GOSL/2021/1** | 100,000/- + VAT ** | ரூபா 5,256,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C2 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 525.5 மில்லியன் | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328 Fax: 011-2635885 | 17/01/2022 பி.ப. 2.00 |
| 3 | அம்பாறை பிராந்தியத்தில் PVC குழாய் சேவை இணைப்புகளை HIDPE குழாய்களுக்கு பிரதியீடு செய்வதற்காக HDPE குழாய்கள், பொருத்தல்கள் மற்றும் விசேடங்களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் பதித்தல்.<br>ஒப்பந்த இல : **NWSDB/RSC(E)/CP/A3-65/GOSL/2021/11R** | 20,000/- + VAT ** | ரூபா 1,180,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C3 மற்றும் C4 தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | 78.83 மில்லியன் | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328 Fax: 011-2635885 | 12/01/2022 மு.ப. 10.00 |
| 4 | கொட்டாவ - பன்னிபிட்டிய வீதி நெடுகில் குழாய்களைப் பதிப்பதற்கு HDPE/DI குழாய்கள், பொருத்தல்கள், வால்வுகள் மற்றும் துணைப்பாகங்களை பதித்தல் மற்றும் இணைத்தல்<br>ஒப்பந்த இல : **WC/P&D/C/PL/KALALGODA/2021/09** | 12,500/- + VAT ** | ரூபா 365,800/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C4 மற்றும் C5 தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | 39.11 மில்லியன் | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328 Fax: 011-2635885 | 14/01/2022 மு.ப. 10.00 |
| 5 | தெஹியோவிட்ட நீர் வழங்கல் திட்டத்தில் RDA எல்லை நெடுகில் பாதுகாக்கப்பட்ட உள்ளீர்ப்பு வரை Chain Link வேலியை நிர்மாணித்தல்.<br>ஒப்பந்த இல : **RSC(SAB)/AGM(KEG)/REH/DEHIOWITA /CIVIL/2021/65** | 4,000/- + VAT | ரூபா 36,000 /- | சிவில் மற்றும் கட்டிட நிர்மாணத் துறையில் C5 முதல் C9 வரையான தரத்தில் CIDA பதிவு | 3.6 மில்லியன் | பி.ஒ.நி. (சபரகமுவ), தேநீவவச, புதிய நகரம், இரத்தினபுரி.<br>Tele: 045-2228274-6 Fax : 045-2228273 | 29/12/2021 பி.ப. 2.00 |
| 6 | KNPIWS திட்டத்தின் கீழ் சேவை நீர்த்தேக்கம், பம்பி இல்லம் என்பவற்றை நிர்மாணித்தல், சிஸ்டன் மற்றும் சைலன்வத்த கிராமிய நீர் வழங்கல் திட்டத்திற்கு பரிமாற்றம் மற்றும் விநியோகக் குழாய்களை வழங்குதல் மற்றும் பதித்தல் மற்றும் சிஸ்டன் மற்றும் சைலன்வத்த கிராமிய நீர் வழங்கல் திட்டத்திற்கான விநியோகக் குழாய்கள் மற்றும் வால்வுகள் மற்றும் நிறுவல்களைக் கண்டறிதல்.<br>ஒப்பந்த இல : **KNPIWSP/CIVIL/PC- 04/2021-32** | 35,000/- + VAT ** | ரூபா மில்லியன் 1.28/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C3 மற்றும் C4 தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | 128.3 மில்லியன் | கண்டி வடக்கு பாத்ததும்பர நீர் வழங்கல் திட்டம், தேநீவவச, பஹல கொண்டதெனிய, கட்டுகஸ்தொட்ட.<br>Tel : 081-2492390 Fax : 081-2492286<br>கேள்வி முன்னோடிக் கூட்டம் மற்றும் வேலைத்தள விஜயம் 2022 ஜனவரி 06ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இடம்பெறும். (கட்டாயமாக) | 12/01/2022 பி.ப. 2.00 |
| 7 | திருகோணமலை 4ஆம் மைல் கல்லில் களஞ்சியசாலையை நிர்மாணித்தல்<br>ஒப்பந்த இல : **RSC(E )/DGM/RH/STORE/ TRINCO/2021/84** | 12,500/- + VAT ** | ரூபா 146,550/- | கட்டிட நிர்மாணத் துறையில் C5 முதல் C9 வரையான தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | 14.70 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (கிழக்கு), தேநீவவச, இல. 48A/1, கண்டி வீதி, மட்டிக்களி, திருகோணமலை.<br>Tele: 026-2222519 Fax: 026-2225225 | 29/12/2021 10.00 மு.ப. |
| 8 | கெப்பெட்டிபொல நீர் வழங்கல் திட்டத்தில் தற்போதுள்ள சேவை இணைப்பை திருத்துதல்<br>ஒப்பந்த இல:**RSC(UVA)/DGM(UVA)/REH/KEPPETIPOLA/ 2021/204** | 12,500/- + VAT ** | ரூபா 360,030/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C5 முதல் C9 வரையான தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | 24.0 மில்லியன் | பி.ஒ.நி (ஊவா), ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை<br>Tele: 0552230934 Fax: 0552230974 | 29/12/2021 பி.ப. 2.00 |
| 9 | தியத்தலாவ நீர் வழங்கல் திட்டத்தின் கல்கந்த பிரதேசத்தில் விநியோகத்தை மேம்படுத்துவதற்காக HDPE/DI குழாய்கள் மற்றும் பொருத்திகளை பதித்தல் மற்றும் இணைத்தல்.<br>ஒப்பந்த இல : **NWSDB/U/CP/A3-34/GOSL/ 2021/1** | 12,500/- + VAT ** | ரூபா 323,920/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C5 முதல் C9 வரையான தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | 21.59 மில்லியன் | பி.ஒ.நி (ஊவா), ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை<br>Tele: 0552230934 Fax: 0552230974 | 29/12/2021 பி.ப. 2.00 |

2021-12-08ஆம் திகதி பிரசுரமான விளம்பரம் தொடர்பானது. மேற்கு மத்திய பிராந்தியத்திற்கு Flow மீற்றர்களை வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல். ஒப்பந்த இல: **NWSDB/CAM/CP/A9/23/GOSL/2021/02 -** திருத்தப்பட்ட மதிப்பீட்டுக் கிரயம் (வெட் இன்றி) 82.5 மில்லியன் ரூபா என்பதை தயவு செய்து கவனத்திற்கொள்ளவும்.

2021-11-03ஆம் திகதி பிரசுரமான விளம்பரம் தொடர்பானது. பதியத்தலாவ மற்றும் மஹஓய ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டத்தில் பிரதான பரிமாற்றக் குழாய்களை வழங்குதல் மற்றும் பதித்தல் மற்றும் ஒரு நாளைக்கு $12000M^3$ நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி களஞ்சிய தாங்கியை நிர்மாணித்தல். ஒப்பந்த இல: **NWSDB/RSC(E)/CP/A5-34-GOSL/2021/02 -** இந்தக் கேள்வியின் முடிவுறுத்தல் திகதி 2022-01-05ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் கவனத்திற் கொள்ளவும்.

2021-12-01ஆம் திகதி பிரசுரமான விளம்பரம் தொடர்பானது. மாகல்கந்த, கம்பஹா, அத்தனகல்ல மற்றும் மினுவாங்கொடயிலுள்ள பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான காணி அபிவிருத்தி மீள்குடியேற்றம் ஒப்பந்த இல: **RSC(SAB)/GAMIWSS/ CIVIL/LOAN /RUWAN/ 2021/49 -** இந்தக் கேள்வியின் முடிவுறுத்தல் திகதி 2021-12-22ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் கவனத்திற் கொள்ளவும் மற்றும் தேவையான தகுதித் தேவைப்பாடுகள் ''சிவில் மற்றும் கட்டிட நிர்மாணத் துறையில் C6 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA நிறுவனத்தின் பதிவு என்பதுடன் மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா **12,500 + VAT** எனவும் மாற்றப்படுகின்றது என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

2021-11-10ஆம் திகதி பிரசுரமான விளம்பரம் தொடர்பானது. சொய்சாபுரவில் வாகனங்களைக் கழுவும் மற்றும் தாங்கிகளை நிரப்பும் முறைமையை நிர்மாணித்தல் (Reclaimed நீர் வளங்கள் வசதிகள்) ஒப்பந்த இல: **NWSDB/GCWR/CP/ A8-05/2021/01 -** இந்தக் கேள்வியின் முடிவுறுத்தல் திகதி 2021-12-22ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் கவனத்திற் கொள்ளவும்.

2021-11-10ஆம் திகதி பிரசுரமான விளம்பரம் தொடர்பானது. உல்ஹிட்டிய நீர் வழங்கல் திட்டத்தை நிர்மாணித்தல் ஒப்பந்த இல: **NWSDB/U/CP/A4-79/GOSL/2021/01 -** இந்தக் கேள்வியின் முடிவுறுத்தல் திகதி 2021-12-31ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் கவனத்திற் கொள்ளவும்.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவை யான விலை மனு பிணை | தேவையான தகைமை | VAT உட்பட மதிப்பிடப்படும் செலவு (ரூபா) | தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| | **வழங்கல் கேள்விகள்** | | | | | | |
| 10 | மொரன்தொட்ட நீர் வழங்கல் திட்டத்திற்கு துணைப்பாகங்கள் சகிதம் GAS Neutralization முறைமையை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதல்<br>ஒப்பந்த இல : **NWSDB/SAB/CP/A2-61/GOSL-2021/05-B-R** | 6,000/- + VAT ** | ரூபா 120,000 /- | Chlorine Gas Neutralization System, Chlorine Gas Detection System மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் நிறுவுதலுக்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | - | பி.ஒ.நி. (சபரகமுவ), தேநீவவச, புதிய நகரம், இரத்தினபுரி.<br>Tele: 045-2228274-6<br>Fax : 045-2228273 | 04/01/2022 பி.ப. 2.00 |
| 11 | Portable Type Ultrasonic Flow மீற்றர்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்<br>ஒப்பந்த இல : **WC/SS/M(NRW)FLOW METERS/2021/182-RH** | 4,000/- + VAT | ரூபா 72,000 /- | Portable type ultrasonic flow meters உற்பத்தியின் போது வர்த்தக கடிதத் தலைப்பில் ஆவணங்களுக்கான கோரிக்கைக் கடிதம் மூலம் வழங்குதல் மற்றும் விநியோகிப்பதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் | - | பி.ஒ.நி (மேற்கு - மத்திய) தேநீவவச, இல. 175A, கலுதொட்ட கட்டிடம், நாவல வீதி, நுகேகொட.<br>Tele : 011-2856421 | 31/12/2021 மு.ப. 10.00 |
| 12 | பூநகரி மற்றும் பரந்தன் நீர்த் தாங்கிக் கோபுரங்களுக்கு நான்கு எண்ணிக்கையான டோசிங் பம்பித் தொகுதிகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல், நிறுவுதல், பரீட்சித்தல், செயற்படுத்திக் காண்பித்தல் மற்றும் ஒப்படைத்தல்.<br>ஒப்பந்த இல: **RSC/N/DGM/RH/PUMP/ POONAKARY&PARA/2020/040** | 4,000/- + VAT | ரூபா 41,380 /- | Gas Chlorinators, chemical equipment's, laboratory equipment மற்றும் துணைப்பாகங்களை வழங்குதலுக்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் | - | பி.நி.ஓ (வடக்கு), தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா.<br>Tele:024-2225719<br>Fax:024-2225088 | 05/01/2022 பி.ப. 2.00 |
| | **சேவைக் கேள்விகள்** | | | | | | |
| 13 | பாணந்துறை - ஹொரணை பிராந்தியத்திலுள்ள முகாமையாளர் அலுவலகம் (பாணந்துறை - ஹொரணை), பிரதேச பொறியியலாளர் (பண்டாரகம) அலுவலகம், பொறுப்பதிகாரி (பாணந்துறை) அலுவலகம், பொறுப்பதிகாரி (கும்புக்க) அலுவலகம், வெல்மில்ல கோபுர அலுவலகம், பொறுப்பதிகாரி (இங்கிரிய) அலுவலகம் மற்றும் பொறுப்பதிகாரி (ஹொரணை) அலுவலகத்திற்கான ஜெனிட்டோரியல் சேவைகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல: **W-S/P&C/J(04)/P-H/O&M/2021/48** | 6,000/- +VAT ** | ரூபா 73,000/- | கேள்விகளைச் சமர்ப்பிக்கும் வேளையில் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்ளடங்காத சித்திகரமான கேள்விதாரர்கள் ஜெனிட்டோரியல் சேவைகளை வழங்கும் துறையில் ஆகக் குறைந்து 3 வருட கால அனுபவம் கொண்ட வியாபாரப் பதிவு ஒழுங்குபடுத்தலின் கீழ் இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனம். | 7.29 மில்லியன் | பி.ஒ.நி. (மேற்கு-தெற்கு) அலுவலகம், தேநீவவச, இல. 07, அங்குலான ஸ்டேஷன் வீதி, மொரட்டுவ.<br>Tele: 0112224888,<br>Fax :0112637945<br>கேள்வி முன்னோடிக் கூட்டம் 2021-12-23ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முகாமையாளர் (பாணந்துறை - ஹொரணை) அலுவலகத்தில் இடம்பெறும். | 30/12/2021 மு.ப. 10.00 |
| | **வாகனங்களை வாடகைக்கமர்த்துதல்** | | | | | | |
| 14 | வெயாங்கொட நீர் வழங்கல் திட்டம் (மே/வ) பிராந்திய ஒத்துழைப்பு நிலையத்திற்கு 8,000 லீற்றர் நீர்த்தாங்கி பௌசரொன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **RSC(W/N)/SS/BOW./MNG(GAM)-VWSS/ GAMIWSS /2021/103RR** | 4,000/- VAT | ரூபா 5,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (W/N) அலுவலகம், இல. 433/4A, கணேமுல்ல வீதி, கடவத்தை.<br>Tele: 0112922129 Fax: 0112922146 | 05/01/2022 மு.ப. 10.00 |
| 15 | களனி பிராந்தியத்திலுள்ள (பியகம) பொறுப்பதிகாரிக்கு க்ரூ கெப் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **RSC(W/N)/SS/HIRING/KEL (O&M)2021/135** | 2,000/- VAT | ரூபா 5,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (W/N) அலுவலகம், இல. 433/4A, கணேமுல்ல வீதி, கடவத்தை.<br>Tele: 0112922129 Fax: 0112922146 | 05/01/2022 மு.ப. 10.00 |
| 16 | மட்டக்களப்புப் பிராந்தியத்திலுள்ள கொக்கட்டிச்சோலை நீர் வழங்கல் திட்டத்திற்கு முச்சக்கர வண்டியொன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **RSC(E)/DGM/O&M/THREE WHEELER/ KOKKADDI CHCHOLAI/ BATTI/2021/100** | 2,000/- VAT | ரூபா 11,000/- | இதனையொத்த சேவைகளில் அனுபவமுள்ள நிறுவனங்கள் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (கிழக்கு), தேநீவவச, இல. 48A/1, கண்டி வீதி, மட்டிக்களி, திருகோணமலை.<br>Tele: 026-2222519 Fax: 026-2225225 | 29/12/2021 10.00 மு.ப. |
| 17 | மட்டக்களப்புப் பிராந்தியத்திலுள்ள செங்கலடி நீர் வழங்கல் திட்டத்திற்கு முச்சக்கர வண்டியொன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **RSC(E)/DGM/O&M/THREE WHEELER/ CHENKALA DY/BATTI/ 2021/101** | 2,000/- VAT | ரூபா 11,000/- | இதனையொத்த சேவைகளில் அனுபவமுள்ள நிறுவனங்கள் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (கிழக்கு), தேநீவவச, இல. 48A/1, கண்டி வீதி, மட்டிக்களி, திருகோணமலை.<br>Tele: 026-2222519 Fax: 026-2225225 | 29/12/2021 10.00 மு.ப. |

தயவு செய்து PCA 3 படிவத்தைப் பெற்றுக்கொள்ள இணையதளத்தில் நிகழ்நிலை (online) ஊடாக கம்பனி பதிவாளருடன் பதிவு செய்து கொள்ளவும். ("**" எனக் குறியீடு இடப்பட்ட கேள்விகளுக்கு மட்டும்) பதிவு செய்து கொள்வதற்கு gmail பயன்படுத்த வேண்டுமென மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

முடிவுத் திகதிக்கு முதல் நாள் வரை சாதாரண வேலை நேரங்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் மற்றும் வியாபாரக் கடிதத் தலைப்பிலான வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும்.

சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படும் இடத்திலேயே கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

சமுகம் தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் கேள்விகள் திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும்.

**தலைவர்,**

**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை.**

# அடுத்த போட்டியில் யாழ்ப்பாண வீரர் ஒருவர் நிச்சயம் விளையாடுவார்

**– சதுரங்க டி சில்வா**



கடந்த திங்கட்கிழமை (13) இடம்பெற்ற யாழ் கிங்ஸ்தம்புள்ளை ஜயன்ட்ஸ் போட்டியின் ஆட்ட நாயகன் போட்டியின் பின்னர் யாழ் கிங்ஸ் அணியின் சகலதுறை ஆட்டக்காரரானார்.

எப்பொழுதும் எந்த ஒரு போட்டியிலும் குழு உணர்வோடு விளையாடுவார். அணியின் ஒரே நோக்கம் வெற்றி பெறுவதே என்று கூறிய சத்துரங்க, குழு உணர்வுடன் போட்டியிட்டு வெற்றி பெறுவது கடினமல்ல.

பந்துவீச்சு அல்லது துடுப்பாட்டத்தில் அணிக்கு 100 வீத சேவையை வழங்குவது தனது கடமையாக கருதுவதாகவும், தம்புள்ளை ஜெயன்ட்ஸ் அணிக்கெதிரான போட்டியின் போது தனது அணி வீரர்கள் பலரிடமும் அது வெளிப்பட்டதாகவும் சதுரங்க டி சில்வா மேலும் தெரிவித்தார்.

அணியில் உள்ள அனைத்து வீரர்களும் இறுதிப் போட்டி முடியும் வரை வெற்றிப் பயணத்தை தொடர வேண்டும் என நம்புவதாகவும், தனக்கும் தனது சகோதரனுக்கும் இடையிலான கிரிக்கெட் உறவு தனக்கும் சிறுவயதிலிருந்தே இருந்து வருவதாகவும் சத்துரங்க கூறினார்.

யாழ்.கிங்ஸ் அணியின் தலைவர் திசர பெரேரா, அடுத்த போட்டியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வீரர் ஒருவர் நிச்சயமாக விளையாடுவார் என்றும், எதிர்காலத்தில் அந்தப் பகுதியிலுள்ள இளம் வீரர்களுக்கு இயன்ற வாய்ப்புகளை வழங்குவார் என நம்புவதாகவும் தெரிவித்தார்.

இந்த போட்டியில் பெரும்பாலான நேரங்களில் நான் செய்ய அதிக நேரம் இல்லை, மற்ற அனைத்து வீரர்களும் தங்கள் வேலையை சிறப்பாக செய்ய எல்லாமே எளிதாக இருந்தது. அணியை வழிநடத்துவது மட்டுமே தனது பணி என திசர பெரேரா தெரிவித்துள்ளார்.

போட்டியின் ஆரம்பத்தில் நாணயச் சுழற்சியில் தோற்றமை தோல்வியின் ஆரம்பம் என தம்புள்ளை ஜயன்ட்ஸ் அணித்தலைவர் தசுன் ஷானக தெரிவித்தார்.

எதிர்வரும் போட்டிகளில் அனுபவம் வாய்ந்த மூத்த வீரர்களுக்கு முன்னணி பேட்ஸ்மேன்களாக அதிக வாய்ப்புகளை வழங்குவதே தனது நம்பிக்கை என தெரிவித்த ஷனக மேலும் பல கூடுதல் வீரர்களும் எதிர்வரும் போட்டிகளில் விளையாட வாய்ப்புள்ளதாக தெரிவித்தார்.

அரையிறுதிக்குத் தகுதிபெற்று இறுதிப் போட்டியில் பங்கேற்பதே தனது நோக்கமாகும் என தசுன் ஷானக தெரிவித்தார்.

# பிளே ஓப் வாய்ப்பினை உறுதி செய்த ஜப்னா கிங்ஸ் 69 ஓட்டங்கள் பதிவு செய்த தம்புள்ளை ஜயன்ட்ஸ்

தம்புள்ளை ஜயன்ட்ஸ் மற்றும் ஜப்னா கிங்ஸ் அணிகள் இடையே நடைபெற்று முடிந்திருக்கும், லங்கா பிரீமியர் லீக் தொடரின் 14ஆவது லீக் போட்டியில், ஜப்னா கிங்ஸ் அணி 7 விக்கெட்டுக்களால் இலகு வெற்றியை பதிவு செய்திருக்கின்றது.

மேலும் இந்த வெற்றியுடன் ஜப்னா கிங்ஸ் அணி, இந்த எல்பிஎல் தொடரில் தொடர்ச்சியாக ஐந்து வெற்றிகளை பதிவு செய்திருப்பதோடு, தொடரின் பிளே ஓப் சுற்றுக்கு தெரிவாகும் முதல் அணியாகவும் மாறியிருக்கின்றது.

ஜப்னா கிங்ஸ் மற்றும் தம்புள்ளை ஜயன்ட்ஸ் இடையிலான போட்டி கடந்த (13) கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் இடம் பெற்றிருந்தது.

கடின மழையின் காரணமாக சற்று தாமதித்தே ஆரம்பித்த இந்தப் போட்டியின் நாணய சுழற்சியில் வென்ற ஜப்னா கிங்ஸ் அணியின் தலைவர் திசர பெரேரா தம்புள்ளை ஜயன்ட்ஸ் வீரர்களை முதலில் துடுப்பெடுத்தாட பணித்தார்.




இதன்படி முதல் துடுப்பாட்டத்தினை ஆரம்பித்த தம்புள்ளை ஜயன்ட்ஸ் அணி, ஜப்னா கிங்ஸ் அணியின் சுழல் நட்சத்திரமான மகீஷ் தீக்ஷனவினை எதிர்கொள்வதில் தடுமாற்றம் காட்டியது.

அதன்படி தம்புள்ளை ஜயன்ட்ஸ் அணியினுடைய முதல் விக்கெட்டாக தீக்ஷனவின் சுழலில் வீழ்ந்த நிரோஷன் டிக்வெல்ல வெறும் ஒரு ஓட்டத்தினை மாத்திரம் பெற்றிருக்க, அவரின் பின்னர் களம் வந்த சொஹைப் மக்சூட் ஓட்டமேதுமின்றி ஓய்வறை நடந்தார்.

இதன் பின்னர், மூன்றாம் இலக்கத்தில் துடுப்பாடிய நுவனிது பெர்னாண்டோவின் விக்கெட்டும் தீக்ஷனவின் சுழலில் அவர் வெறும் 2 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் பறிபோக தம்புள்ளை ஜயன்ட்ஸ் அணி, 9 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது.

பின்னர் தம்புள்ளை ஜயன்ட்ஸ் அணியினை அதன் தலைவர் தசுன் ஷானக்க மீட்பார் என எதிர்பார்க்கப்பட்ட போதும் அவர் உள்ளடங்கலாக தம்புள்ளை அணியின் மத்திய வரிசை சத்துரங்க டி சில்வாவின் சுழலிற்கு இரையானது. தம்புள்ளை ஜயன்ட்ஸ் அணியின் நான்காம் விக்கெட்டாக ஆட்டமிழந்த தசுன் ஷானக்க வெறும் 6 ஓட்டங்களை மாத்திரம் பெற, அதன் பின்னர் சத்துரங்க டி சில்வாவின் விக்கெட் வேட்டைக்கு இரையான ரமேஸ் மெண்டிஸ் 7 ஓட்டங்களையும், சாமிக்க கருணாரட்ன ஓட்டங்கள் எதுவுமின்றியும், தரிந்து ரத்நாயக்க வெறும் 14 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

இதனையடுத்து தொடர்ந்தும் சரிவில் இருந்து மீளாத தம்புள்ளை ஜயன்ட்ஸ் அணி 14.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் பறிகொடுத்து 69 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

தம்புள்ளை ஜயன்ட்ஸ் அணியின் துடுப்பாட்டம் சார்பில் பில் சோல்ட் 22 ஓட்டங்கள் பெற்று தனது தரப்பில் கூடுதல் ஓட்டங்கள் பெற்ற வீரராக மாறியிருந்தார். தம்புள்ளை ஜயன்ட்ஸ் அணி பெற்ற 69 ஓட்டங்கள் எல்பிஎல் வரலாற்றில் அணியொன்று பெற்ற குறைந்த ஓட்டங்களாகவும் பதிவானது.

ஜப்னா கிங்ஸ் அணியின் பந்துவீச்சில் சத்துரங்க டி சில்வா வெறும் 16 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களைச் சாய்க்க, மகீஷ் தீக்ஷண 3 விக்கெட்டுக்களைச் சுருட்டினார். இவர்கள் தவிர, வனிந்து ஹஸரங்க, சொஹைப் மலிக் மற்றும் அஷேன் பண்டார ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீதம் சுருட்டினர்.

பின்னர் போட்டியின் வெற்றி இலக்காக நிர்ணயம் செய்யப்பட்ட 70 ஓட்டங்களை 20 ஓவர்களில் அடைய பதிலுக்கு துடுப்பாடிய ஜப்னா கிங்ஸ் அணி போட்டியின் வெற்றி இலக்கினை 7.2 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 71 ஓட்டங்களுடன் அடைந்தது.

ஜப்னா கிங்ஸ் அணியின் வெற்றியை உறுதி செய்த துடுப்பாட்டவீரர்களில் வனிந்து ஹஸரங்க வெறும் 18 பந்துகளில் 5 பௌண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்கள் அடங்கலாக 37 ஓட்டங்கள் எடுத்தார்.

தம்புள்ளை ஜயன்ட்ஸ் அணியின் சார்பில் இம்ரான் தாஹிர் 2 விக்கெட்டுக்களைச் சாய்த்த போதும், அது பிரயோசமின்றி போயிருந்தது.

போட்டியின் ஆட்டநாயகனாக ஜப்னா கிங்ஸ் அணியின் சத்துரங்க டி சில்வா தெரிவாகியிருந்தார்.

# ஒலிம்பிக் சங்க தலைவர்: சுரேஷுக்கு எதிராக பாலித பெர்னாண்டோ களத்தில்





இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தின் தலைவரான ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ தேசிய ஒலிம்பிக் குழுவின் தலைவர் பதவிக்கு தற்போதைய தலைவர் சுரேஷ் சுப்ரமணியத்துடன் போட்டியிட தயாராகி வருகிறார். தேசிய ஒலிம்பிக் சங்கத்தின் செயலாளர் நாயகம் மெக்ஸ்வெல் டி சில்வா மீண்டும் அந்தப் பதவிக்கு போட்டியிடப் போவதாக ஏற்கனவே அறிவித்திருந்தார்.

கடந்த தேர்தலில் சுப்ரமணியம் மேக்ஸ்வெல் அணி சார்பில் போட்டியிட்ட ரொஹான் பெர்னாண்டோ, அப்பதவிக்கு வேட்பாளராகப் போட்டியிடப் போவதில்லை எனத் தீர்மானித்துள்ளார்.

தேசிய ஒலிம்பிக் குழுத் தேர்தலை டிசம்பர் 28 ஆம் திகதி ஒலிம்பிக் இல்லத்தில் உள்ள ஹேமசிறி பெர்னாண்டோ கேட்போர் கூடத்தில் நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதுடன், வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளும் பணி இன்றுடன் நிறைவடைகிறது. இலங்கையில் உள்ள 35 விளையாட்டு சங்கங்களுக்கு 4 வருட காலத்திற்கு ஒலிம்பிக் போட்டிகளை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு அதிகாரிகளை தெரிவு செய்யும் அதிகாரம் உள்ளதால் இது இலங்கை விளையாட்டின் மிக முக்கியமான மற்றும் மிகப்பெரிய தேர்தலாக கருதப்படுகிறது.

ஒலிம்பிக் சங்க தேர்தல்கள் கடந்த பெப்ரவரி 2018 இல் நடத்தப்பட்டன, மேலும் நான்கு ஆண்டு பதவிக்காலம் முடிவதற்கு இன்னும் இரண்டு மாதங்கள் உள்ள நிலையில், உறுப்பினர் விளையாட்டு சங்கங்கள் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டன. வாக்குச் சீட்டுகளைப் பயன்படுத்தி இரகசியமான முறையில் வாக்களிப்பு இடம்பெறுவது இத்தேர்தலின் விசேட அம்சமாகும்.

கடந்த தேசிய ஒலிம்பிக் சங்கத் தேர்தலில் தலைவர் பதவிக்கு சுரேஷ் சுப்ரமணியமும், .ரொஹான் பெர்னாண்டோவும் போட்டியிட்டனர், அதில் சுப்பிரமணியம் 18 வாக்குகளையும், ரொஹான் பெர்னாண்டோ 12 வாக்குகளையும் பெற்றனர்.பொதுச் செயலாளர் பதவிக்கான போட்டியில், மேக்ஸ்வெல் டி சில்வா 19 வாக்குகளைப் பெற்றார். பிரீத்தி விராஜ் பொரேரா 12 வாக்குகளைப் பெற்றார்.

ரொஹான் பெர்னாண்டோ சார்பில் உப தலைவர் பதவிக்கு போட்டியிட்ட மேஜர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ மாத்திரமே தேர்தலில் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது. ஜோசப் கென்னி, அசங்க செனவிரத்ன மற்றும் சுமித் எதிரிசிங்க ஆகியோர் நிறைவேற்று சபையில் பெரும்பான்மையுடன் சுரேஷ் மேக்ஸ்வெல் அணியிலிருந்து உப தலைவர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

என்.ஓ.சி தேர்தலை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான முதல் படியாக என்.ஓ.சி.யை நியமிப்பதற்கான சிறப்பு பொதுக்குழு சமீபத்தில் நடைபெற்றது.

தேசிய ஒலிம்பிக் சங்கத்தின் தலைவர் சுரேஷ் சுப்ரமணியம், விளையாட்டு அமைச்சகத்தின் முன்னாள் செயலாளராக டாக்டர் ஆர்.எம்.கே. ரத்நாயக்கவின் பெயர் பரிந்துரைக்கப்பட்டதுடன் ஏனைய உறுப்பினர்கள் அதே அமைச்சின் முன்னாள் செயலாளர்கள் இருவர். ரனுக்கே மற்றும் அனுர ஜயவிக்ரம ஆகியோரின் பெயர்கள் சபையில் முன்வைக்கப்பட்டன. இதற்கான வாக்கெடுப்பு நடத்தப்பட்டு சுரேஸ் சுப்ரமணியத்தின் பிரேரணைக்கு ஆதரவாக 20 வாக்குகளும் எதிராக 13 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

# மட்டு நகரிற்கு பெருமை சேர்த்திருக்கும் லாபிர்



கொழும்பு சுகததாஸ மைதானத்தில் கடந்த 11ஆம், 12ஆம் திகதிகளில் நடைபெற்று முடிந்திருக்கும், மாஸ்டர் அத்லடிக் (Matser Athletic Sri Lanka) வருடாந்த தடகள விளையாட்டு விழாவில் ஏறாவூரினைச் சேர்ந்த லாபிர் ஒரு தங்கம், ஒரு வெள்ளி என இரண்டு பதக்கங்களை வென்று மட்டக்களப்பு மாவட்டத்திற்கும், தனது பிறந்த ஊருக்கும் பெருமை சேர்த்திருக்கின்றார்.

அந்தவகையில் லாபிர் மாஸ்டர் அத்லடிக்தடகளநிகழ்வில் 65 தொடக்கம் 70 வயதுப் பிரிவில் ஒழுங்கு செய்யப்பட்ட 200 மீற்றர் ஓட்டப்பந்தய நிகழ்வில் தங்கம் வென்றதோடு, அதே வயதுப் பிரிவில் இடம்பெற்றிருந்த 100 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் வெள்ளிப்பதக்கம் வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேநேரம் லாபிர் 100 மீற்றர் ஓட்டப்பந்தயத்தினை 15.06 செக்கன்களில் நிறைவு செய்திருந்ததுடன், தங்கம் வென்ற 200 மீற்றர் ஓட்டப் பந்தயத்தினை 31 செக்கன்களில் நிறைவு செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

சிறு வயது முதலே ஓட்டப்பந்தயம் உள்ளடங்கலாக பல்வேறு விளையாட்டுக்களில் ஆர்வம் காட்டியிருக்கும் 65 வயது நிரம்பிய லாபிர் தான் வென்ற இரண்டு பதக்கங்களின் மூலம் சாதிப்பதற்கு வயது ஒரு தடையல்ல என்பதனையும் அனைவருக்கும் உணர்த்தியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டுக்கான (2021) மாஸ்டர் அத்லடிக் தடகள விளையாட்டு விழாவானது, நாடு பூராகவும் இருக்கும் 35 வயதிற்கு மேற்பட்ட சிரேஷ்ட வீரர்களின் திறமைகளை வெளிக்காட்டும் நோக்கத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சம்பியன்ஸ் லீக் காற்பந்தில் மோதவுள்ள மெஸ்ஸி – ரொனால்டோ



சம்பியன்ஸ் லீக் காற்பந்துப் போட்டிக்கான இரண்டாம் சுற்று ஆட்டங்களின் அட்டவணை இன்று வெளியிடப்பட்டது.

அதில் பிரபல காற்பந்து வீரர்கள் லயனல் மெஸ்ஸி விளையாடும் PSG அணியும் கிறிஸ்டியானோ ரொனால்டோ விளையாடும் மென்செஸ்ட்டர் யுனைட்டட் அணியும் மோதுகின்றன.

இரு வீரர்களும் இனி எப்போது மோதிக்கொள்வார்கள் என்று காத்திருந்த காற்பந்து ரசிகர்களுக்கு இது பெரும் மகிழ்ச்சியைத் தந்துள்ளது.

இரண்டாம் சுற்றில் 16 அணிகள் உள்ளன.

ஆட்டங்கள் பிப்ரவரி, மார்ச் மாதங்களில் நடக்கும்.

வெற்றி பெறும் அணிகள் காலிறுதி ஆட்டங்களுக்குத் தகுதிபெறும்.

இரண்டாம் சுற்று ஆட்டங்களில் விளையாடும் மற்ற சில அணிகளின் விவரங்கள்:

★ அயெக்ஸ் (Ajax) அணி இன்டர் மிலானை (Inter Milan) எதிர்த்து விளையாடும்.

★ பயர்ன் மியுனிக் (FC Bayern Mnchen) அணியும் அட்லட்டிக்கோ மாட்ரிடும் (Atletico Madrid) மோதுகின்றன.

★ ரியால் மாட்ரிட் (Real Madrid) அணியும் பென்ஃபிக்காவும் மோதுகின்றன.

★ லிவர்ப்பூல் அணியும் RB சாஸ்பர்க்கும் மோதுகின்றன.

★ செல்சியுடன் (Chelsea) லில் (Lille) அணி விளையாடுகிறது.

# இலங்கை கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பு ஆலோசகராக மஹேல ஜயவர்தன



இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும், கிரிக்கெட் பயிற்றுவிப்பாளருமான மஹேல ஜயவர்தன ஒரு வருட கால ஒப்பந்த அடிப்படையில் இலங்கை கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பு ஆலோசகராக நியமனம் செய்யப்பட்டிருக்கின்றார்.

இதன்படி மஹேல ஜயவர்தனவின் பதவிக்காலம் 2022ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து ஆரம்பிக்கும் எனக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

மஹேல ஜயவர்தன இலங்கை கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பு ஆலோசகராக இருக்கும் காலப்பகுதியில், இலங்கை 19 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் அணி மற்றும் இலங்கை ஏ கிரிக்கெட் அணி ஆகியவற்றுக்கும் பயிற்றுவிப்பு ஆலோசகராக இருப்பார் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இலங்கை கிரிக்கெட் வெளியிட்டிருக்கும் ஊடக அறிக்கையில் மஹேல ஜயவர்தன இலங்கை கிரிக்கெட் சபையின் உயர்செயற்திறன் நிலையத்தில் வீரர்களுக்கு திட்ட ரீதியான ஆதரவு வழங்குவதிலும் முன்னின்று செயற்படுவார் எனக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

தான் இலங்கை கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பு ஆலோசகராக மாறியிருக்கும் விடயம் தொடர்பில் கருத்து வெளியிட்டிருக்கும் மஹேல ஜயவர்தன இவ்வாறு தெரிவித்திருந்தார்.

“தேசிய (கிரிக்கெட்) அணியின் பயிற்சியாளர்களுக்கும், அணி ஆதரவு உறுப்பினர்களுக்கும் திட்ட ரீதியிலும், தயார்படுத்தல்களிலும் ஆதரவு வழங்குவது அடுத்த வருடத்தில் எனது முக்கிய பொறுப்பாக இருக்கும்.”

மஹேல ஜயவர்தனவின் நியமனம், இலங்கை கிரிக்கெட் சபையின் தொழில்நுட்ப ஆலோசனைக்குழு மற்றும் இலங்கை கிரிக்கெட் அணியின் நிர்வாகக் குழு ஆகியவை இடையே நடைபெற்ற கலந்துரையாடல்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

ரி 20 உலகக் கிண்ணத்தில் இலங்கை கிரிக்கெட் அணியின் ஆலோசகராக செயற்பட்டிருந்ததோடு, அடுத்த ஆண்டு இளையோர் உலகக் கிண்ணத்தில் ஆடவுள்ள இலங்கை 19 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் அணியின் ஆலோசகராகவும் செயற்பட்டிருக்கின்றார்.

லீக் கிரிக்கெட் தொடர்களில் ஆடும் அணிகளான மும்பை இந்தியன்ஸ், சௌத்தர்ன் பிரேவ்ஸ் போன்ற அணிகளின் தலைமைப் பயிற்சியாளராகவும் மஹேல ஜயவர்தன இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

அரவிந்த டி சில்வா தலைமையிலான இலங்கை கிரிக்கெட் அணியின் தொழில்நுட்ப ஆலோசனைக் குழு, மிக்கி ஆத்தர் தலைமையிலான இலங்கை கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் குழுவின் பதவிக்காலம் நிறைவடைந்த நிலையில், புதிய பயிற்சியாளர்கள் தொடர்பில் விரைவில் தீர்மானம் மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 டிசம்பர் மாதம் 15ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.